ஜூலை 08, 2001 ~~ரூபா 14.00~~ அறிமுக விலை ரூபா 12.00

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்



## உரிமைப் போர் கருகிப்போகாது: புலிகள் சத்தியம்

## தமிழகத்தில் அம்மா ஆட்சியா, அரக்க ஆட்சியா?



# இளைஞரை மடக்கிப் பிடிக்கும் படையினரின் 'பீல்ட் பைக்குறூப்'!

## பூநகரியில் புலிகள் குவிப்பு; குடாநாட்டில் மோதல்கள் அதிகரிப்பு

'பீல்ட் பைக் குறூப்' என்று அழைக்கப்படும் இராணுவத்தின் மோட்டார் சைக்கிள் படைப் பிரிவினருக்கும் ''பிஸ்டல் குறுப்'' எனப்படும் புலிகளின் பிஸ்டல் குழுவினருக்கும் இடையில் நெற்றிக்கு நேரான மோதல்கள் தீவிரமடைந்திருக்கின்றன.

யாழ்ப்பாணத்தின் சந்து பொந்து எங்கும் புலிகளைத் தேடும் நடவடிக்கை தீவிரமடைந்திருக்க, மறுபக்கத்தில் புலிகளின் துணிச்சலான ஊடுருவல்களும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

மக்கள் கூட்டம் நிரம்பிக் காணப்படும் யாழ். நகரிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் அடிக்கடி இளைஞர் கும்பல்களை வளைத்துப் பிடித்து அவர்களை உடற்பரிசோதனை செய்யும் திடீர் நடவடிக்கைகள் கடந்த வாரம் முழுவதும் தொடர்ந்தன. படையினர் வளைத்துப் போட்ட முற்றுகைக்கு மத்தியில் பிஸ்டல் குழு உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்படுவோர் படையினரின் பிடியில் இருந்து துணிகரமாகத் தப்பிச் சென்று தலைமறைவாகிய பல சம்பவங்களும் இடம் பெற்றிருக்கின்றன.

மானிப்பாய்ப் பகுதியில் இளைஞர் ஒருவர் மீது சந்தேகம் கொண்ட பீல்ட் பைக் படைச் சிப்பாய் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு தனியே அந்த இளைஞரின் உடலைத் தடவிச் சோதிக்க முற்பட்டவேளை அந்தச் சிப்பாயைப் பலமாகத் தாக்கி விட்டு அந்த இளைஞர் தப்பிப் போயிருக்கிறார். பலபேர் பார்த்திருக்க இச்சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

எனினும் திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவிலடியில் வைத்து பிஸ்டல் குழுவின் முக்கிய உறுப்பினரான சுதன் என்பவரை மடக்கிப் பிடித்துக் கொன்ற பின்னர் புலிவேட்டையில் படையினர் உஷாரடைந்திருப்பது தெரிகிறது.

திருநெல்வேலியில் உயிரிழந்தவர் மேஜர் சுதன் (அம்பிகை பவான் பரந்தாமன் யாழ்ப்பாணம்) என்று புலிகள் ஊர்ஜிதம் செய்திருக்கிறார்கள். அன்றைய சம்பவத்தில் அவருடன் பலியானவர் கப்டன் மித்திரன் (தில்லைநாதன் தவச்செல்வன் – யாழ்ப்பாணம்) என்றும் புலிகள் அறிவித்திருக்கின்றனர். இவர்கள் இருவரது சடலங்களையும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாகப் புலிகள் பொறுப்பேற்றிருக்கின்றனர்.

இதேவேளை யாழ். நகருக்கு வெளியே கோம்பையன்மணல் இந்து மயானத்துக்குச் சமீபமாக வீதியில் சென்று கொண்டிருந்த இளைஞர் ஒருவர் கடந்த 28 ஆம் திகதி (ஜூன் 28) மாலை சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். கொடிகாமம் அல்லாரையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சிவகுமார் (வயது 25) என்பவரே கொல்லப்பட்டார். இவர் இடம்பெயர்ந்து அல்லாரைப் பகுதியில் வசித்து வந்தார்.

இவர் விடுதலைப் புலிகளின் பிஸ்டல் குழுவினரால் கொல்லப்பட்டதாகப் பாதுகாப்புத் தரப்பினர் கூறியிருக்கின்றனர்.

இந்தச் சம்பவம் இடம் பெற்ற மறுநாள் அயலில் உள்ள நவாலிப் பிரதேசத்தை விடிகாலை வேளை சுற்றி வளைத்த துருப்புகள் விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர் எனச் சந்தேகிக்கப்படும் இளைஞர் ஒருவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர். அவரது சடலம் மானிப்பாய் பொலிஸாரால் யாழ். மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.

கோம்பையன்மணல் மாயனப் பகுதியில் சுடப்பட்டவர் புலிகளால் கொல்லப்பட்டாரா என்பது ஊர்ஜிதம் செய்யப்படவில்லை. எனினும் பிரஸ்தாப இளைஞரைக் கொன்ற புலி உறுப்பினரையே மறுநாள் காலை பொதுமக்கள் வழங்கிய தகவல் மூலம் தாங்கள் தேடிப் பிடித்துக் கொன்று விட்டதாக மானிப்பாய்ப் பகுதி படையினர் கூறியிருக்கின்றனர்.

படையினரும் புலிகளும் தங்கள், தங்கள் நடவடிக்கைகளில் மிகத் தீவிரமாக இருப்பதை இந்தச் சம்பவங்கள் உணர்த்தியிருக்கின்றன.




குடாநட்டில் இரவு நேர ஊரடங் குச் சட்டம் மேலும் ஒரு மணிநேரத்தால் குறைக்கப்பட்டு இரவு 10 மணிக்கே அமுல் செய்யப்படுகிறது. ஆனால் பொதுமக்களின் நிலைமையோ வேறுவிதமாக இருக்கிறது.

எந்த இடத்திலும் எப்போது வேண்டுமானாலும் வேட்டுச் சத்தங்கள் கேட்கும் நிலையில் இரவில் எட்டுமணிக்குப் பின்னர் நடமாட மக்கள் தயங்குகின்றனர். சில இடங்களில் இரவு வேளையில் நடமாடுவோர் படையினரின் தீவிர விசாரணைக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது.

பிஸ்டல் குழுவினரின் தற்போதைய தீவிர ஊடுருவலை எப்படியாவது சமாளித்து முறியடித்து விடலாம் என்று எண்ணிக் கொண்டு இருந்த யாழ். படைகளின் தலைமைப் பீடத்துக்கு மட்டுவிலில் புலிகள் நடத்திய கிளைமோர் கண்ணித் தாக்குதல் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது. அந்த இராணுவ பஸ் வண்டிக்குள் கரகோஷம் செய்து கொண்டு விடுமுறையில் திரும்பிக் கொண்டிருந்த படையினரில் எவருமே அந்த இடத்தில் – அத்தகைய ஒரு தாக்குதலை எதிர்பார்த்திருக்கவே மாட்டார்கள்.

புத்தூருக்கும் மட்டுவிலுக்கும் இடையே யாழ்ப்பாணம் – பருத்தித்துறை நெடுஞ்சாலையில் இருந்து தெற்கே மூன்று கிலோ மீற்றர் தொலைவில் உள்ள வண்ணாத்திப் பாலத்தில் கிளைமோர் வெடித்தது.

முழுக்க முழுக்க இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் அந்தப் பகுதிக்குள் ஊடுருவிய புலிகள் அப்பகுதியில் கிளைமோரைப் பொருத்தி சரியான நேரத்தில் இயக்கிப் படையினருக்குப் பெரும் சேதத்தை உண்டாக்கி உள்ளனர். ஏழுக்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டு 20க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்த இச் சம்பவம் குடாநாடு அரசுப் படைகள் வசமான பிறகு இடம்பெற்ற முதலாவது பெரிய கிளைமோர் கண்ணித் தாக்குதல் ஆகும்.

வலிகாமத்துக்கும் தென்மராட்சிப் பகுதிக்கும் இடையிலான தமது போக்குவரத்துக்களுக்காக இராணுவம் பயன்படுத்தி வரும் நீண்ட கிறவல் பாதையில் புலிகள் இந்தத் துணிகரத் தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள்.

புத்தூர், நீர்வேலி, கைதடி, மட்டுவில் ஆகிய பகுதிகளுக்கு இடையிலான பரந்த சதுப்பு நிலப்பகுதியில் மக்கள் குடியிருப்புகள் அரிதாகவே உள்ளன. இந்தப் பிரதேசத்தில் ஆங்காங்கே படைநிலைகள் இருந்த போதிலும் அண்மையில் தென்மராட்சிப் பகுதியில் மக்கள் மீளக்குடியமரத் தொடங்கியதை அடுத்து சில இடங்களில் இருந்து படையினர் வெளியேறி இருந்தனர். இதனையடுத்தே அந்தப் பகுதியை ஊடறுத்துச் செல்லும் படையினரின் விநியோகப் பாதை மீது புலிகள் கண் வைத்துக் காத்திருந்து, கிளைமோர் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

வாகனங்களில் பெரும் எண்ணிக்கையான படையினர் ஒன்றாகப் பயணம் செய்வதில் உள்ள ஆபத்துக்களைப் படை அதிகாரிகள் சிப்பாய்களுக்கு அவ்வப்போது புகட்டிவந்த போதும் குடாநட்டில் புலிகளின் கண்ணி வெடித் தாக்குதல்கள் முற்றாகவே அற்றுப் போயிருந்ததால் படையினர் அதனை அலட்சியம் செய்து வந்தனர். ஆனால் மட்டுவில் சம்பவம் படையினருக்கு ஒரு பாடமாக அமைந்து விட்டது. அதனையடுத்து வாகனப் போக்கு வரத்துக்களின் போது மிகவும் அவதானமாக நடந்து கொள்ளுமாறு தற்போது படை யினருக்கு எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது.

குடாநாட்டில் புலிகளின் ஊடுருவல்கள் பெருமளவில் அதிகரித்திருப்பதையே மட்டுவில் சம்பவம் காட்டுவதாகப் படை அதிகாரிகள் ஒப்புக் கொண்டுள்ள போதும் குடாநாட்டில் படையினரின் பிடி இன்னமும் இறுக்கமாக – உறுதியாகவே இருப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியான பெரும் யுத்தங்களுக்குப் பின்னர் இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசங்களில் படையினரின் ஸ்திர நிலையைக் குலைக்க புலிகள் தீட்டியிருக்கும் புதிய திட்டத்தின் தொடக்கமே தற்போது அங்கு நடைபெறும் சம்பவங்கள் என்று அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

### குடாநாட்டிலும் தாக்கம்

தொடரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் அதற்கு முகம் கொடுக்க முடியாமல் திணறும் அரசு, இராணுவச் செலவுகளுக்கான கொடுப்பனவுகளைக் குறைக்க – நிறுத்தி வைக்க – முடிவு செய்திருப்பதாகச் செய்திகள் வெளியாகி இருக்கும் நிலையில் –

பொருளாதார நெருக்கடியின் தாக்கம் குடாநாட்டில் உள்ள படைவட்டாரங்களிலும் உணரப்பட்டிருப்பது போல் தெரிகின்றது.

படையினருக்கு நாளாந்தம் தேவைப்படும் உணவுப் பொருள்கள் உட்பட சில அத்தியாவசியப் பொருள்களை உள்ளூரிலேயே கொள்வனவு செய்ய யாழ் படைத்தரப்பினர் முடிவு செய்திருப்பதாகத் தகவல் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. படையினருக்கான உணவுப் பொருள்களைத் தினமும் விமானம் மூலம் எடுத்து வருவதில் உள்ள செலவுகளைச் சமாளிக்கவே இந்த மாற்றுத்திட்டம்.

படையினருக்குத் தேவையான மரக்கறி வகைகளை உள்ளூர் வியாபாரிகளிடம் இருந்து வாங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதே போன்று குடாநாட்டில் உள்ள படையினருக்குத் தேவையான மீன் வகைகளைப் பெறுவதற்காக வடமராட்சிப் பகுதியில் இரவு நேரம் மீன் பிடிப்பதற்குப் படையினர் திடீரென அனுமதி வழங்கி இருக்கின்றனர்.

வல்வெட்டித்துறை தொடக்கம் பருத்தித்துறை முனை வரையிலான கடற்பகுதியில் இரவு வேளையில் படையினரின் பாதுகாப்புடன் கடலில் ஏழு கிலோ மீற்றர் தூரம் சென்று மீன் பிடிக்க வடமராட்சி மீனவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

தினமும் 20 படகுகள் மீன்பிடிக்க அனுமதிக்கப்படும். ஒவ்வொரு படகிலும் தலா இரண்டு மீனவர்கள் செல்ல அனுமதிக்கப்படுவர். மீன் பிடிக்கப்படும் இடங்களில் விசைப்படகுகளில் படையினர் பாதுகாப்பு வழங்குவர். தினமும் மாலை 6 மணி தொடக்கம் மறுநாள் காலை 6 மணி வரை மீன் பிடிக்கலாம் என்று கடற்றொழிலாளர் சங்கங்களுக்கு வடமராட்சி படை அதிகாரிகள் அறிவித்திருக்கின்றனர்.

இரவு வேளை பிடிக்கப்படும் மீன் வகைகளில் தமக்குத் தேவையான மீன்களின் தரம் விலை போன்ற விவரங்கள் அடங்கிய பட்டியல்களையும் கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிகளிடம் படையினர் வழங்கி இருக்கின்றனர்.

பகல்வேளையில் மீன்பிடிக்கச் செல்வதற்கே எக்கச்சக்கமான கட்டுப்பாடுகளையும் கெடுபிடிகளையும் விதித்துவந்த படைத் தரப்பினர் தமக்கு மீன் தேவை என்றவுடன் இவ்வாறு திடீரென இரவு நேர மீன்பிடித்தலுக்கு அனுமதி வழங்கியிருப்பது மீனவர்கள் வயிற்றில் பால் வார்க்கும் செய்தியாக அமைந்து விட்டது. ஆனாலும் படையினரின் அனுமதியை ஏற்று இரவு நேரம் கடலில் இறங்க அவர்கள் இன்னமும் தயக்கம் காட்டி வருவதாகத் தகவல்.

இது குறித்து விசாரித்துப் பார்த்தபோது மீனவர்களின் தயக்கத்துக்கான காரணம் தெரிந்தது.

இந்த இரவுநேர மீன்பிடி குறித்து மறுதரப்பாரின் (புலிகளின்) நிலைப்பாட்டை – சமிக்ஞையை – அறிந்து கொள்வதற்காக அவர்கள் (மீனவர்கள்) காத்திருக்கின்றனராம்!

### பூநகரியில் தாக்குதல்

குடாநாட்டின் கரையோரப் பகுதிகளில் குடாக் கடலை அண்டிய பூநகரிப் பிரதேசம் மீது விமானப் படையினர் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளனர். கடந்த சனிக்கிழமை (ஜூன் 30) விடிகாலை விமானப் படையின் 'கிபிர்' விமானங்கள் குடாநாட்டின் மீதாகப் பறந்து பூநகரிப் பகுதியில் குண்டுகளை வீசின. அப்பகுதியில் புலிகள் பெருமளவு குவிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சிறிது கால இடைவெளிக்குப் பின்னர் புலிகளின் நிலைகள் மீது விமானத்தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் வடக்கில் புதிய படை நடவடிக்கைகள் இடம் பெறக் கூடும் என்று ஊகிக்கப்படுகிறது.

பாதுகாப்புப் படைகளின் யாழ். தளபதியாக மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

யாழ். தளபதியாக இதுவரை பணிபுரிந்த மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா பத்தரமுல்லையில் உள்ள தொண்டர் சேவைப் படைத் தளபதியாக இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதை அடுத்து இதுவரை யாழ்ப்பாணத்தில் பிரதித் தளபதியாகப் பணிபுரிந்து வந்த மேஜர் சுசில் சந்திரபால யாழ். தளபதிப் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பலத்த தோல்வியில் முடிவடைந்த 'அக்கினிச் சுவாலை' படை நடவடிக்கை மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா தலைமையில் நடத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

—வலிகாமத்தான்.

# சொல்ஹெய்மின் கதி இந்தியா வைத்த பொறி?

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இலங்கை இனவிவகாரத்திலிருந்து ஓரங்கட்டப்பட்டு சில வாரங்கள் கடந்துவிட்டன. சொல்ஹெய்ம் ஓரங்கட்டப்பட்டமைக்கு அரசு தரப்பும் அவதானிகள் வட்டாரங்களும் ஊகங்கள் பலவற்றை ஊடகங்களில் உரசிப் பார்த்து ஓய்ந்துவிட்டன.

தற்போது, இது தொடர்பாகப் புதிய தகவல் ஒன்று வெளிவந்திருக்கிறது.

அதாவது சொல்ஹெய்மை இலங்கை அரசு ஓரங்கட்டியதற்கு இந்தியா தான் மூலகாரணம் என்று கூறப்படுகிறது.

சொல்ஹெய்முக்கு அமெரிக்காவுடன் உள்ள தொடர்பை இலங்கைக்கு இந்தியா திரித்துக் கூறித் திரி வைத்துவிட்டதாம்.

இலங்கை விவகாரத்தில் தனது பங்களிப்பு இல்லாமல் எட்டப்படும் தீர்வு தன் மூக்கில் அடித்த மாதிரி ஆகிவிடும் என்பது இந்தியாவின் கருத்து.

இலங்கை விவகாரம் தொடர்பாக சொல்ஹெய்மின் சகல நடவடிக்கைகளையும் உற்று நோக்கிக் கொண்டிருந்தது இந்தியா.

இலங்கை வந்து வன்னி சென்ற பின்னர் கொழும்பில் பேச்சு நடத்திவிட்டு சொல்ஹெய்ம் வழமை போல் இந்தியா செல்லாமல் அமெரிக்காவுக்குப் போனார். அங்கு உயர் மட்டங்களுடன் பேச்சு நடத்தினார்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் சொல்ஹெய்மின் அமெரிக்க விஜயம் இரகசிய விவகாரங்களைப் பகிர்ந்து கொள்ளப்பட்ட ஒன்றாகவே கருதப்பட்டது.

மொத்தத்தில் இந்தியாவுக்கு அமெரிக்காவை அறவே பிடிக்காது.

சொல்ஹெய்ம் இலங்கை விவகாரத்தில் சம்பந்தப்பட்டிருந்தவேளை, அவரது முயற்சிகளை வரவேற்கிறோம், அவற்றுக்கு ஆதரவு நல்குவோம் என இந்தியா அடிக்கடி அறிக்கைவிடுத்தது.

இன்று சொல்ஹெய்ம் ஒதுக்கப்பட்ட பின்னர் இலங்கை இனப்பிரச்சினை குறித்து இந்தியா மௌனம் சாதித்து வருகிறது.

சொல்ஹெய்ம் ஒதுக்கப்பட்டாலும் இலங்கையில் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்றோ, அல்லது அந்தக் கருத்துப்படவோ எதுவும் கூறுவதற்கு இந்தியா இன்றுவரை முயலவில்லை.


இந்தியா அன்று தொட்டு இன்றுவரை இலங்கையில் ''தானும் ஈடுபடாமல் தமிழரையும் தலை நிமிரவும் விடாமல் செய்யும்'' போக்கையே கடைப்பிடித்து வருகிறது. சமீபகாலமாக எங்கு அது ஓய்ந்துவிட்டதோ என்று எண்ணியிருந்த வேளை திரை மறைவுத் திட்டம் திண்ணைக்கு வந்துள்ளது என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

இலங்கை சிறிய நாடு; வறிய நாடு; அதற்காகப் பிறர் போடும் தாளங்களுக்கெல்லாம் ஆட வேண்டுமா? இதுதான் அரசியல் வட்டாரங்களில் தற்போது எழுந்துள்ள கேள்வி.

சொல்ஹெய்ம் விஷயத்தில் அவர் இப்போது இலங்கை அரசினால் ஓரங்கட்டப்பட்டுள்ள போதிலும் சமாதான முயற்சியிலிருந்து முற்றாக நீக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

— துஷாரா

# தமிழக அரசியல் வினோதம்!
# இப்படியும் பழிவாங்கலா?


கருணாநிதி

தமிழக சட்டசபைத் தேர்தலில் ஜெயலலிதா அமோக வெற்றி பெற்ற போது தமிழகத்தில் மீண்டும் எம்.ஜி.ஆர் ஆட்சி ஏற்பட்டு விட்டது என்று மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டது.

அவ்விதம் மகிழ்ச்சி அடையாதவர்களும் இருந்தார்கள். அவர்கள் மத்தியில் ஒரு கேள்வி எழவே செய்தது ''இனிமேல் கருணாநிதியின் கதி என்ன?'' என்பது தான் அந்தக் கேள்வி.

''நான் ஆட்சிக்கு வந்தால் கருணாநிதியின் ஆயுட்காலம் முழுவதும் அவரைச் சிறையில் அடைத்து வைப்பேன்'' என்று முன்னர் ஜெயலலிதா எச்சரித்திருந்தார்.

கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில் ஜெயலலிதா பெருமளவில் பாதிக்கப்பட்டவர். ஊழல் குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்டவர். வழக்குகள் தொடரப்பட்டன. விசாரணைகள் நடைபெற்று சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். தேர்தலில் போட்டியிடும் தகுதியை இழந்தார்.

இருப்பினும் சட்டசபை தேர்தலில் காற்று அவருக்கு சாதகமாக வீசியது. கருணாநிதிக்கு மாபெரும் தோல்வி. ஜெயலலிதாவுக்கும் அவரது கூஜா தூக்கிகளுக்கும் வரலாறு காணாத வெற்றி. அ.தி.மு.க அணிக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைத்தது. சர்வாதிகாரியாக தாம் உயர்ந்து விட்டதாக ஜெயலலிதா நினைத்தார்.

ஜெயலலிதா விஸ்வரூபம் பெற்றதைக் கண்டு பதறிப்போன தமிழக ஆளுநர் பாத்திமா பீபி அவரை ஆட்சி அமைக்க அழைத்தார். அதனால் அனைவரின் கண்டனத்துக்கும் ஆளானார். இன்று ஜெயலலிதா காட்டும் இடத்தில் கையெழுத்து இடுவதுதான் அவர் வேலையாகிவிட்டது. ஜெயலலிதாவை ஆட்சி அமைக்க விடாது தடுத்திருந்தால் அவருக்கு என்ன நடந்திருக்குமோ தெரியாது.

ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததுமே முதல் காரியமாக கருணாநிதியை சிறைக்கு அனுப்புவார் என்று எதிர்ப்பார்க்கப் பட்டது. ஆயினும் ஏனையவர் விடயத்திலேயே காலத்தை கடத்தினார். சிறைச்சாலைகள் நிரம்பத் தொடங்கின.

தி.மு.க காரர்களை மாத்திரம் சிறைக்கு அனுப்பினால் அரசியல் பழிவாங்கல் என்று முத்திரை குத்தப்பட்டுவிடுமே!

எனவே வளர்ப்பு மகன் சுதாகரனையும் சிறைக்கு அனுப்பி வைத்தார். இதன் பின்னணியில் ஆயிரம் கோடி ரூபா பிணக்கு ஒன்று இருக்கிறது என்று ''கிசு கிசு''க்கப் படுகிறது.

இவை எல்லாவற்றையும் முடித்துக் கொண்ட ஜெயலலிதா தாம் ஆட்சிக்கு வந்து சுமார் 45 நாட்கள் கழிந்த பின்னரே கருணாநிதி மீது கைவைத்திருக்கிறார்.

ஜெயலலிதா ஒரு தனிக்கட்டை, திரு நிறைச்செல்வி என்று இன்றும் அழைக்கப் படுகிறார். எனவே முன்னர் கருணாநிதியினால் அவர் ஒருவரைத் தான் கைது செய்ய முடிந்தது. போனால் போகட்டும் என்று உடன் பிறவா சகோதரியைக் கைது செய்தனர்.

ஆனால் ஜெயலலிதாவின் புண்ணியத்தினால் கருணாநிதி இன்று கூண்டோடு கைலாசம் என்னும் நிலைக்கு வந்திருக்கிறார். மனைவி, இரு புதல்வர்கள், ஒரு புதல்வி என்று முழுக்குடும்பமுமே சிறை செல்ல நேர்ந்தது.

நள்ளிரவு நேரம் கருணாநிதியின் வீட்டுக்குள் புகுந்த பொலிஸார் தூக்கத்தில் ஆழ்ந்து இருந்த கருணாநிதியைத் தட்டி எழுப்பியிருக்கிறார்கள், தாக்கியிருக்கிறார்கள், கிழிந்த ஆடைகளுடன் ''தரதர'' என்று இழுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள். ''ஐயோ ஐயோ'' என்று கருணாநிதி கதறியிருக்கிறார்.

சாதாரண மனிதனா கருணாநிதி? முன்னாள் முதலமைச்சர், மத்திய அரசில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சியின் தலைவர். அவரை இவ்விதம் நடத்தும் துணிவு பொலிஸாருக்கு எப்படி வந்தது?

மனிதாபிமானக்கண்ணோட்டத்தில் பார்த்தால் கருணாநிதி ஒரு முதியவர். நீதிமன்ற உத்தரவு இன்றியே இழுத்துச் செல்லப்பட்டிருக்கிறார். மருத்துவ சிகிச்சைக்கு அனுமதி தரப்படவில்லை. ''இடி அமீன்'' பாணியில் அனைத்தும் நடைபெற்றிருக்கின்றன.

மகன் ஸ்டாலின் அப்போது வீட்டில் இல்லாத படியால் தப்பினார். பின்னர் அவர் நீதிபதி முன்னிலையில் ஆஜர் ஆனார்.

கருணாநிதி மீது ஆத்திரம் என்றால் அவர் மனைவியும் மகளும் என்ன செய்வார்கள்?

அவர்களையும் எதற்காக இழுத்துச் சென்றார்கள்? தமிழகத்தில் ஒரு பெண்ணின் ஆட்சியில் பெண்களுக்கு இத்தகைய கெடுதியா?

கருணாநிதிக்கு அடி விழுகிறது என்றதும் மருமகன் முரசொலி மாறன் ஓடி வந்திருக்கிறார். தடுத்திருக்கிறார். பொலிஸார் அவரை தள்ளி வீழ்த்தியிருக்கிறார்கள்.

நோயாளியாக இருந்து அண்மையில் உயிர் தப்பி எழுந்தவர் மாறன். கருணாநிதி இப்போது அதிகாரத்தில் இல்லை. ஆனால் மாறன் மத்திய அரசின் அமைச்சர் இந்தியப் பிரதமர் வாஜ்பாயின் அமைச்சரை தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் பொலிஸார் பந்தாடியிருக்கிறார்கள்.

காயமடைந்து மருத்துவ மனையில் சிகிச்சைப் பெற்ற முரசொலி மாறனுடன் தொடர்பு கொண்டு அனுதாபம் தெரிவிக்க மாத்திரமே முடிந்தது பிரதமர் வாஜ்பாயினால்.

கருணாநிதி மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. போக்குவரத்துக்கள் துண்டிக்கப் பட்டன. பொதுச்சொத்துக்கள் சேதமாக்கப் பட்டன. தீமூட்டி தற்கொலை செய்தார் ஒருவர்.

ஜெயலலிதா ஏற்கனவே தமது அமைச்சர்களில் நால்வரை வீட்டுக்கு அனுப்பி வைத்திருக்கிறார். அதனால் ஆட்சி நிர்வாகத்தில் குழப்ப நிலை.

கருணாநிதிக்கு எதிராக ஜெயலலிதா முதலில் சுமத்திய குற்றச்சாட்டு புழுத்த அரிசி சம்பந்தப்பட்டது. ஆனால் அது தவறு என்பதை நிரூபிக்க டெலிவிஷன் நிருபருடன் சென்ற முன்னாள் அமைச்சர் பொன்முடி சிறையில் அடைக்கப்பட்டார். நிருபரும் கைது செய்யப்பட்டார். அதனால் பெரும் பதற்ற நிலை தோன்றியது.


ஜெயலலிதா

முழுப்பத்திரிகை உலகமும் ஜெயலலிதாவுக்கு எதிராக கிளர்ந்து எழுந்த வேளையில் கருணாநிதி மடக்கப்பட்டிருக்கிறார். நீதிமன்ற நடைமுறைப்படி கருணாநிதியைக் கைது செய்திருந்தால் அது ஒரு பிரச்சினையாக உருவெடுத்திருக்காது.

அனுதாப அலை மூலம் தேர்தலில் வெற்றி பெற்றவர் ஜெயலலிதா என்று கூறுவார்கள். குறுகிய காலத்துக்குள் அந்த அனுதாப அலை கருணாநிதிக்கு சாதகமாக வீசும் அளவுக்கு ஜெயலலிதா தம்மை தாழ்த்திக்கொண்டுவிட்டார். அது அவருடைய முதிர்ச்சி இன்மையைக் காட்டுகிறது.

—கதாசி

## ஆளுநர் பதவி பறிப்பு

கருணாநிதிக்கு நிகழ்ந்த கதி பற்றி இந்திய அமைச்சரவை அவசரமாகக் கூடி ஆராய்ந்தது. தமிழக ஆளுநர் பாத்திமா பீபி அனுப்பியிருந்த அறிக்கை அங்கு நிராகரிக்கப்பட்டது. ஆளுநரைப் பதவியிலிருந்து நீக்குமாறு ஜனாதிபதிக்கு பிரதமர் சிபார்சு செய்தார்.

இதற்கிடையில் பிரதமர் வாஜ்பாய் சென்னைக்கு அனுப்பி வைத்திருந்த மூன்று உயர் அதிகாரிகள் அடங்கிய குழு மத்திய சிறையில் கருணாநிதியைச் சந்தித்தது. தமிழக அரசைக் கலைக்கும் படி அதிகாரிகள் சிபார்சு செய்வார்கள் என்று தெரிகிறது.

## குருவாயூரப்பன் துணையுடன்

ஜெயலலிதா கேரள மாநிலத்தில் உள்ள குருவாயூரப்பன் ஆலயத்திற்கு சென்றிருந்தார். தமது நேர்த்திக்கடனாக ஒரு யானையை அன்பளிப்புச் செய்தார். மிகவும் கோலாகலமாக பூஜைகள் நடைபெற்றன. பின்னர் அங்கிருந்தே கருணாநிதியை கைது செய்யும்படி உத்தரவு பிறப்பித்தார்.

முதலமைச்சரின் உத்தரவை பிரதிப் பொலிஸ் ஆணையாளர் நிறைவேற்றி வைத்தார். நான்கு தடவைகள் தமிழகத்தில் முதலமைச்சராக இருந்து 78 வயதினை அடைந்துள்ள தமிழர் தலைவனை மிகவும் கேவலப் படுத்தியிருக்கிறார்கள் பொலிஸார்.

சென்னையில் மேம்பாலங்கள் நிறுவுவதில் 13 கோடி ரூபா ஊழல் நடைபெற்றிருக்கிறது என்று குற்றஞ் சாட்டப்பட்டே கருணாநிதி கைது செய்யப்பட்டார். மகன் ஸ்டாலின் மீதும் இந்தக் குற்றச்சாட்டு இருக்கிறது. ஆனால் மனைவி, மகள் கனிமொழி மற்றொரு மகன் அழகிரி ஆகியோர் கைது செய்யப்பட்டதுக்கு காரணம் தெரியவில்லை.

கருணாநிதியின் வீட்டுக் கதவை உடைத்துக் கொண்டே பொலிஸார் உள்ளே சென்றிருக்கிறார்கள். ''நீதிமன்ற உத்தரவு எங்கே?'' என்று கருணாநிதி கேட்டபோது ஓங்கி அறைந்திருக்கிறார்கள், ஆடைகளை கிழித்தெறிந்திருக்கிறார்கள். மேல் மாடியில் இருந்து படிகளில் தள்ளி வீழ்த்தியிருக்கிறார்கள். சென்னை மத்திய சிறையில் கருணாநிதி சத்தியாக்கிரகம் செய்தார். பத்தாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

கருணாநிதியின் கைது குறித்து கண்டனம் தெரிவித்தவர்கள் ஆயிரக் கணக்கில் கைதாகியிருக்கிறார்கள். 2ஆம் திகதி தமிழகத்தில் மாபெரும் ஹர்த்தாலை நடத்த முடிவு செய்யப்பட்டது.

கருணாநிதி கதறக் கதற இழுத்துச் செல்லப்பட்ட காட்சியை ''சன் டி.வி'' ஒளிபரப்புச் சேவையில் அப்பட்டமாகக் காட்டியிருக்கிறார்கள். இதனைக் கண்டு தமிழக மக்கள் கொதித்தெழுந்தனர். பொலிஸ் உயர் அதிகாரி சன் டி.வி யை மூடிவிடப்போவதாக எச்சரித்திருக்கிறார்.

தி.மு.க பொதுச் செயலாளர் கே.அன்பழகன் பிரதமர் வாஜ்பாயுடன் தொடர்பு கொண்டார். அரசமைப்பு சட்டத்தில் 356 ஆம் பிரிவின் கீழ் தமிழக அரசைக் கலைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி இவ்வாறு தீருமானம் நிறைவேற்றியிருந்தது.



GERMAN TECHNOLOGY WITH BUILT-IN-BOOSTER
Euromind Active Antenna.
for Clear Reception
Of all Channels in all Locations
Importers and Suppliers
UKAAYE
190 - 1st Floor, Bodhiraja Mawatha, (Gaswork Street) Colombo - 11.
Tel: 075-370019, Fax: 075-370018

தலைநகரில்
Maths / Science & Technology
O/L 2001, O/L 2002

| Subject | O/L 2001 | Grade 10 |
|---|---|---|
| Maths | Fri 5.00-7.00 | Fri 3.00-5.00 |
| Science | Thu 5.00-7.00 | Thu 3.00-5.00 |

விரிவுரை W.L.Rajaratnam
EPI
316, காலி வீதி, கொழும்பு - 04.
தொலைபேசி:075-516790
(St. Peters பஸ்தரிப்பு முன்னால்)

என்டெனா பொருத்துதல்


Get it Installed by professionals
TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656 (TEL/FAX)


Eurostar
Sole Distributors in Sri Lanka for
UKAAYE
190 - 1st Floor, Bodhiraja Mawatha, (Garwork Street) Colombo - 11.
Tel: 075-370019, Fax: 075-370018

மலைநாட்டில்
Maths / Science & Technology
O/L 2001, O/L 2002, Grade 9

| Subject | O/L 2001 | O/L 2002 | Grade 9 |
|---|---|---|---|
| Maths | Sat 1.30-330 | Sun 10.30-12.30 | Mon / Tue 4.45-5.30 |
| Science | Sat 11.30-130 | Sun 8.30-10.30 | Mon / Tue 4.45-5.30 |

விரிவுரை W.L.Rajaratnam
EPI
87/1A, கட்டுகஸ்தோட்ட வீதி, கண்டி. தொலைபேசி:072-500475
(வித்தியார்த்த கல்லூரி முன்னால்)

அவசர திருத்தங்கள்


Guaranteed repair & service by trained technicians
TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656 (TEL/FAX)

சுடர் ஒளி

08 ஜூலை, 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834
E-mail: sudar@uthayan.com

## தீராத தொல்லை!

மனித உரிமை மீறலுக்கு ஏதாவது பரிசுத் திட்டம் உண்டு என்றால் முதல் பரிசு நிச்சய மாக இலங்கைக்குத்தான் கிடைக்கும்.

இந்தத் துறையில் இலங்கையின் 'சாதனை' மிகப் பெரியது. உலக சாதனைப் புத்தகமான 'கின்னஸில்' இடம் பெறக் கூடியது.

கண்டபடி கைது, சித்திரவதை, கொலை, பாலியல் வல்லுறவு – இவை மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்கள். இவற்றில் பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் தாராளமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

எவரையும் எந்த நேரத்திலும் எந்த இடத்தி லும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யலாம். என்றாலும் தமிழர்கள் தான் அப்படிக் கைது செய்யப்படுகிறார்கள். அப்புறம் என்ன விசார ணைக்கு என்று அழைத்துச் செல்லலாம்.

பருந்திடம் சிக்கிய கோழிக்குஞ்சு என்ன பாடு படும்? எண்ணிப்பார்த்தால் கண்ணீர் வரும்.

கைது செய்யப்படுபவர்களில் பலர் வருடக் கணக்காகத் தடுத்து வைக்கப்படுகிறார்கள். சித்திரதை செய்யப்படுகிறார்கள். கொல்லப் பட்டும் விடுகிறார்கள். பின்னர் காணாமல் போனோர் பட்டியலில் சேர்க்கப்படுகிறார்கள்.

கைதானவர்கள் அழகுள்ள இளம் பெண் களாக இருந்தால் அவர்கள் பாலியல் வல்லு றவுக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

கொழும்பு பம்பலப்பிட்டி பொலிஸ் நிலை யத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு தமிழ்ப் பெண்கள் படுமோசமான பாலியல் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

அந்தச் சூடு ஆறு முன்னர் கொழும்பு மருதானை தொழில்நுட்பக் கல்லூரிப் பகுதியில் ஒரு தமிழ்ப் பெண் பொலிஸாரின் பாலியல் வல்லுறவுக்கு இலக்காகி யிருக் கிறார்.

இந்தப் பெண் மலையகத்தைச் சேர்ந் தவர். மலையகப் பெண் ஒருத்திக்கு நடந் ததாக அறிவிக்கப்பட்ட முதலாவது துர்ப் பாக்கிய சம்பவம் இது.

ஆக ஒரு பெண், தமிழ்ப் பெண் என்றால் அவர் எந்தப் பகுதியைச் சேர்ந்தவராக இருந் தாலும், எங்கே இருந்தாலும் பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினரின் பாலியல் வல்லுற வுக்குத் தப்ப முடியாது என்ற நிலைமை வந்து விட்டது.

இந்த ஆட்சியில் தான் இந்தக் கொடுமை இந்த அளவுக்கு நடக்கிறது.

கைதடி கிருஷாந்தி குமாரசாமி, கோண்டா வில் ரஜனி, புங்குடுதீவு சாரதாம்பாள், மன்னார் பள்ளிமுனை ஐடா கமாலிட்டா, அம்பாறை சென்றல் காம்ப் கோணேஸ்வரி, உப்புக்குளம் விடுதியில் கைதான இரு பெண்கள் – இவர் கள் எல்லோரும் பாதிக்கப்பட்ட சம்பவங்கள் முன்னர் வெளிச்சத்துக்கு வந்தன. இவர்க ளில் சிலர் இன்று உயிரோடு இல்லை.

மானப் பிரச்சினையால் எல்லாப் பெண் களும் தமக்கு நேர்ந்த கொடுமையை வெளி யில் சொல்வதில்லை. தமது மனதில் அடக்கி வைத்துத் தம்மைத் தாமே தேய்த்துக் கொள்கி றார்கள்.

பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் அவசர காலச் சட்டம் ஆகியவற்றைப் பயன்படுத்தியே அட்டகாசம் புரிகிறார்கள்.

இம்மாதம் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் நடக்கும் நாள். அந்த நாளில் வடக்கு–கிழக்கில் அரசுக்கு எதி ராகப் பூரண ஹர்த்தால். கொழும்பில் பெரிய ஆர்ப்பாட்டப் பேரணி , இவை இரண்டுக்கும், பதினொரு தமிழ் முஸ்லிம் கட்சிகளின் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருக்கிறது.

நல்ல நடவடிக்கைகள் தான். அரசின் மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கும் குறிப்பாகப் பெண்கள் பொலிஸாரினாலும் படையின ராலும் தொடர்ந்து பாலியல் வல்லுறவுத் துன் புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு வருவதற்கும் தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்பை வன்மை யாகவும் ஆணித்தரமாகவும் காட்ட இந்த நடவடிக் கைகள் உதவும். அவ்வளவு தான்.

இதுவரை எத்தனை அட்டூழியங்களுக்கு எத்தனை கட்சிகள் எந்தெந்த வகைகளில் எல்லாம் எதிர்ப்புக் காட்டியிருக்கின்றன! பலன் பூஜியம்.

வேலியே பயிரை மேயும் போது என்ன செய்யலாம்? வேலியின் சொந்தக்காரனிடம் முறையிடலாம். அவனோ இந்த நாட்டில் வேலியின் பிரதான வேலையே அதுதான் என்றல்லவோ, நினைக்கிறான். அதனால் தான் தொல்லை.

தொல்லை கொடுக்கும் அரசின் பங்காளி களாக இருந்து ஒத்துழைப்பு வழங்கிவரும் தமிழர்களாலும் விஷயத்தை எடுத்துச் சொல்லி நிலைமையைச் சீராக்க முடியவில்லை.

இந்த அரசு போய் வேறு எந்த அரசு வந்தாலும் அவலம் நீங்காது.

தமிழினம் உலகத் தலைவனில் நம்பிக்கை வைப்பதைத் தவிர வேறு வழி இல்லை. அதாவது இறைவன் பிரார்த்தனையை ஏற்றுக் கருணை காட்ட வேண்டும்.

# உரிமைப் போர் கருகிப் போகாது: புலிகள் சத்தியம்

கடந்த வார இறுதியில் விசேஷ ஊடகத் தகவல் நிலையம் வெளியிட்ட நீ...ண்...ட அறிக்கை விஷயமறிந்த எவருக்கும் ஆச்சரியத்தை அளிக்கவில்லை.

ஆனையிறவு மற்றும் பூநகரிப் பகுதி களில் பலத்த விமானக் குண்டுத்தாக்கு தல்கள் நடத்தப்பட்டன.

அதற்கான காரணத்தை விளக்கியே விசேஷ ஊடகத் தகவல் நிலையம் நீண்ட அறிக்கை வெளியிட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகள் மூன்று முனைகளில் தாக்குதலை ஆரம்பித்து தியாகச் சுடர் திலீபனின் நினைவு தினமான செப்டெம்பர் 26க்கு முன்னர் யாழ். குடாநாட்டைக் கைப்பற்றத் திட்டமிட்டிருந்தார்கள். அதற்காகப் படையணிகளையும் கனரக ஆயுதங்களையும் பூநகரி யிலும் ஆனையிற விலும் குவித்து எல்லா ஆயத்தங் களையும் செய்துவந் தார்கள்.

அரச உளவுப் பிரிவினர் இதை மணந்து பிடித்துவிட்டனர். தாக்குதல் முயற்சியை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடவேண்டும் என்றுதான் விமானப்படை குண்டுத் தாக்குதலை நடத்தியது. புலிகளுக்கு இதனால் பெரிய இழப்பு. யாழ். குடாநாட்டைக் கைப்பற்றும் அவர்களின் முயற்சி குழி தோண்டிப் புதைக்கப்பட்டுவிட்டது.

இதுதான் விசேஷ ஊடகத் தகவல் நிலையம் வெளியிட்ட நீண்ட அறிக்கையின் சாரம்.

அரச படைத் தலைமையைப் பொறுத்தவரையில் புலிகள் விஷயத்தில் பெரிய சாதனை நிகழ்த்திவிட்டதாகவும் அதனால் இனி இப் போதைக்குப் பிரச்சினை இல்லாமல் நிம்மதியாகத் தூங்கலாம் என்ற நினைப்பு.

இதற்கு முன்னரும் தமிழீழ விடுதலைப் போராட்டம் ஓரிரு சமயங் களில் மீட்சி பெறவே முடியாத கட்டத்தை அடைந்து விட்டதாக இராணுவ ஆய்வாளர்கள், அரசியல் நோக்கர்கள், ஆட்சியாளர்கள் ஆகியோரில் ஒரு பகுதியினர் கருதியது உண்டு.

குறிப்பாக இந்திய இராணுவத்தின ருடன் புலிகள் மோதலில் ஈடுபட்ட போதும், ரிவிரெச நடவடிக்கை காரணமாக யாழ். குடாநாட்டை விட்டு விடுதலைப்புலிகள் வெளியேறிய போதும் இவ்வாறு கூறப்பட்டது.

ஆனால் விடுதலைப் புலிகள் இப்பெரும் சவால்களை எதிர்கொண்டு மீண்டெழுந்தார்கள். இது பலருக்கு ஆச்சரியம் அளிப்பதாகவே இருந்தது.

விடுதலைப் புலிகள் இயக்கம் வேரோடு அறுபடப் போகின்றது என ஆய்வாளர்கள் எதிர்வு கூறிக் கொண்டிருக்கையில் விடுதலைப் புலிகளோ தாம் அழிக்க முடியாத சக்தி என்பதை நிரூபித்தனர், இது எவ்வாறு புலிகளால் சாத்தியமானது எனப் பலருக்கு அதிர்ச்சிகூட ஏற்பட்டது.

அங்குதான், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் ஆற்றலும், திறனும், மதிநுட்பமும் வெளிப்படுத்தப்பட்டது.

பிரபாகரன் எச்சவாலையும் எதிர்த்து நிற்கும் ஆற்றல் பொருந்தியவர் மட்டும் அல்லர், எச்சவாலையும் எதிர்த்து முறியடிக்கும் வல்லமையும் கொண்டவர் என்பதை நிரூபித்தார்.

அதாவது பெரும் அழுத்தங்களுக்கு முகம் கொடுக்கவேண்டி வந்தபோதும் பின்னர் அவற்றை முறியடித்துக்காட்டினார்.

இதே சமயம் தளபதிகளினதும் போராளிகளினதும் தியாக உணர்வும், அர்ப்பணிப்பும், மனவுறுதியும், பிரபாகரனின் சிந்தனையையும், நெறிப்படுத்தலையும் வெற்றிகரமான பாதைக்கு இட்டுச் செல்வதற்கு அடிப்படையாக இருந்தன. இங்குதான் தமிழீழத்திற்காக தம் இன்னுயிர் ஈய்ந்த போராளிகளின் தியாகமும், அர்ப்பணிப்பும் வெளிவருகின்றன.

தமிழீழ விடுதலைப் போராட்டம் உலகின் ஏனைய விடுதலைப் போராட்டங்களில் இருந்து பெரியளவில் வேறுபடுவது போராளிகளின் அர்ப்பணிப்புச் சம்பந்தமான விடயத்திலேயே. ஏனெனில் , விடுதலைப் புலிகளின் அர்ப்பணிப்புக்கள் உலக விடுதலைப் போராட்ட வரலாற்றில் தனித்து வமானவை.

குறிப்பாக எதிரியின் கைகளில் சிக்கிக் கொள்ளக்கூடாது என்பதற்காக ''சயனைட்'' உட்கொண்டு வீரச்சாவடைவதில் இருந்து கரும்புலித் தாக்குதல்களில் தம்முயிரைஅர்ப்பணிப்பது வரையில் முதன்மை யானவையாகவும் வேறுபாடான வையாகவும் உள்ளன.

புலிகளின் இச் செயற்பாடுகள், விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போரிட்டவர்களினாலேயே பாராட்டப்பட்டும் உள்ளது. குறிப்பாக இந்திய இராணுவத்தினர் புலிகளின் அர்ப்பணிப்புக் குறித்து ஆச்சரியமும், அதிர்ச்சியும் அடைந்திருந்தார்கள். இதனைச் சில இந்தியத் தளபதிகள் வெளிப்படுத்தியும் இருந்தனர்.

இவ்வகைப் பாராட்டுக்கள் பொதுவாக விடுதலைப் புலிகளுக்கே உரியன. எனினும், இவற்றுள் பெரும்பாலானவை மாவீரர்களுக்கே உரியனவாகும். ஏனெனில் இச்சாதனைகள், பாராட்டுக்கள் என்பனவற்றிற்காக அவர்கள் செய்துள்ள அர்ப்பணிப்பு, ஈகை என்பன மீளப்பெற முடியாத அவர்களது உயிராகவே இருந்தது.

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் மகத்தான சாதனைகள் பலவற்றை ஈட்டியுள்ளார்கள். உலக இராணுவ வரலாற்றில் இடம் பெறத்தக்க வகையில் இச் சாதனைகள் சிறந்தவையாகவுள்ளன. இதே சமயம் இராணுவத் தளபதிகள், ஆய்வாளர்கள் என்போருக்கு அவை

காண்டீபம்

அதிர்ச்சியை ஆச்சரியத்தையும் கொடுப்பவையாகவும் இருந்துள்ளன.

போரிடுதலில் உயிர்துறத்தல் என்பது எதிர்பார்க்கத்தக்க தொன்றுதான். ஆனால் போர்க்களம் செல்பவர்கள் அனைவருமே இறப்பதும் இல்லை. அத்தோடு பெரும்பாலானோர் வெற்றி பெறுவோம் மீண்டும் வருவோம் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே செல்கின்றனர்.

ஆனால் விடுதலைப் புலிகளோ வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையுடனும், உறுதியுடனும் மட்டுமே செல்கின்றனர். ஏனெனில் அவர்கள் வெற்றிக்காக எத்தகைய அர்ப்பணிப்பையும் செய்வதற்குத் தயாராகவே களம் செல்கின்றனர்.

அதன் காரணமாக மிக மகத்தான சாதனைகளை விடுதலைப் புலிகளினால் சாதிக்கமுடிகின்றது. அத்தோடு இவர்கள் தமது வெற்றியினை மக்களுக்கே உரித்தாக்கிக் கொள்கின்றனர். அதற்காக மக்களிடம் இருந்து எதையுமே அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

அவ்வாறு இல்லாவிடில், உயிராயுதமான கரும்புலிகள் உருவாகியிருக்க மாட்டார்கள்.

அதாவது போராடுவதும், வெற்றி பெற்றுக் கொடுப்பதுமே எமது கடமை. அவற்றின் பலன் – அறுவடை என்பன மக்களுக்கே உரியது என்பதே அவர்களின் முடிவாகும்.

அவ்வாறான ஒரு சிந்தனை, உணர்வு என்பன அம்மாவீரர்களுக்கு இல்லாதுவிடில் களத்தில் அவர்கள் உயிர்விடத் தயாராகி இருந்திருக்கமாட்டார்கள். இராணுவ வரலாறு வியக்கும் சாதனைகள் நிகழ்த்தப்பட்டிருக்கமாட்டா. இப்படிக் கூறுகிறார் புலிகளை நன்கு அறிந்த ஜெயராஜ்.

புலிகளின் முல்லைத்தீவு, கிளிநொச்சி, ஆனையிறவு வெற்றிகள் வரலாற்றுச் சிறப்புப் பெற்றிருப்பதும் குறிப்பிடப்படுகிறது.

கடைசியாகப் படையினரின் அக்கினிச் சுவாலை தாக்குதல் புலி களினால் தவிடு பொடியாக்கப்பட்ட திறனும் பேசப்படுகிறது.

ஆக ,விசேஷ ஊடகத் தகவல் நிலையம் அந்தப் பெரிய அறிக்கையில் எவ்வளவைச் சொன்னாலும் புலிப் போராளிகள் களம் புகுந்து விளையாட எந்நேரமும் தயாராகவே இருக்கிறார்கள். சும்மாவா?

பரணிபாடிக் கொண்டு!
''சத்தியம்தோற்றதாகச்சரித்திரம்கிடையாதே!
வியட்னாமை வெள்ளை மாளிகை தடை
செய்தது.
ஹோசிமின் இடிந்துபோய் விடவில்லை
தொடர்ந்தும் போராடினார்.
இன்று நிமிர்ந்து விட்டது அந்த நிலம்;

பாலஸ்தீனத்தைப் பயங்கரவாதிகளின்
குகையென
வெள்ளைக்கார அரசுகள் விலாசமிட்டன.
இன்று அரபாத்துக்கு ஆலவட்டம்
பிடிக்கின்றன.

இந்தியச் சுதந்திரப் போரைக் கூட
பிரிட்டன் பயங்கரவாதமென்று தானே
முதலில் பிரகடனம் செய்தது.
பின்னரென்ன நடந்தது?
மவுண்பேட்டனின் மனைவியின் தோளில்
காந்தியே கை போட்டுத் திரிந்தார்.

நாங்களேன் இடிந்து போக வேண்டும்?
வரலாற்று நதி எங்கள் கால் நனைக்கவே
வருகிறது.
வல்லமையுடன் இருப்போம்.

தந்ததைவாங்கித்தாள் பணிந்து கொள்வது
தேவாங்குகளுக்கே தெரிந்த வித்தை;
விடுதலையை விற்று
விருந்துண்ணுவதற்கு
வேறு யாராவது விருப்பப்படலாம்.
ஆனால் பிரபாகரன் தயாராக இல்லை

போராடும் புலிகளுக்கும் பிரியமில்லை.
தாயகத் தமிழரும் தாங்கமாட்டார்கள்.
புலம் பெயர்ந்து போன பிள்ளைகள் கூட
பொறுக்க மாட்டார்கள்.

எமக்கு வேண்டும் உரிமை.
சலுகைகளல்ல...
அவர்கள் தரவிரும்பும் ''அரசியற் பொதி''
அது ஆனைப்பசிக்குச் சோளன் பொரி
ஆருக்கு வேண்டுமந்த ''அரைச்சாப்பாடு''.

உறக்கத்திற் கிடக்கும் உலகமே!
உனக்கொன்று உரத்துக் கூறுகிறோம்.
செவிட்டுக் காதுகளிருப்பின் தெரிந்து
கொள்ளுங்கள்;
நாங்கள் இரத்தப் பிசாசுகள் அல்ல.
அடம்பிடித்தலறும் அடிப்படை
வாதிகளுமல்ல.
நாங்கள் விடுதலைக்கு விலை கொடுக்கும்
வேங்கைகள்

அடங்கிப் போவதற்காகவா
இந்தப்போராட்டம்
தொடங்கப்பட்டது?
இல்லையே.

பதினாறு வயதில் எமது தலைவன்
புறப்பட்டது
பாதி வழியில் தன் பயணத்தை
முடிக்கவல்ல.
உயிருரசி மூட்டியதல்லவா இந்த
உரிமைப்போர்
இது கருகிப்போகாதெனச் சத்தியம்
செய்கிறோம்''
உலைக்களத்தில் நின்று இப்படி
உரைக்கிறார் வியாசன்.
சமாதான முயற்சிகள் முடங்கிப்போய்
உள்ளன. கடும் போர் எப்போது
வெடிக்கப்போகிறதோ!

# ஆஞ்சநேயர் சைவரின் வழிபாட்டுத் தெய்வமல்ல

ஆரிய புராண இதிகாச பாத்திரங்களோ பிழைப்புக்காக ஒரு சிலர் வாலாயம் பண்ணும் மந்திரோபாசனைத் தேவதைகளோ சைவத்தில் ஆசார முறைப்படியான வழிபாட்டுத் தெய்வங்களல்ல. அவற்றுக்குக் கோயில் எடுத்தல் பிரதிட்டை, கும்பாபிஷேகம் பண்ணல், நித்திய நைமித்தியங்கள் செய்து வழிபடல் ஆகியவை சைவத்தில் அறியாமை வகையாற் கூட நேற்றுவரை இல்லாதவை. அதாவது ஸ்மார்த்தம் என்ற ஒன்று நயவஞ்சகமாகச் சைவத்திற் புகுந்து நடமாட அனுமதிக்கப்படாத வரை இருந்ததில்லை.

ஸ்மார்த்தத்தில்தான் மெய்ஞ்ஞானப் பேற்றுக்கு உதவாதவை என்று சிவாகமங்களாலும் சைவச் சான்றோர்களாலும் பல்லாயிரம் ஆண்டு காலமாகப், புறந்தள்ளி வைக்கப்பட்ட அனுமார் போன்ற தேவதைகளையும் சிவனிற்குச் சமனாகக் கொண்டு சிவமகிமையை அவற்றில் ஏற்றி சைவத் தெய்வங்களிற்குச் செய்வது போல் சீராட்டுக்கள் பாராட்டுக்கள் எல்லாஞ் செய்கிறார்கள்.

அன்று சைவத்திற்கு சமணத்தாற் பாதிப்பு நிகழக் கேட்டது கேளா முன்னமே திருஞான சம்பந்தர் மதுரைக்குப் புறப்பட்டார்.

நாவலர் பிரபந்தத் திரட்டில் சமய சமூக விஷய கண்டனங்கள் எவ்வளவு தான் இடம் பெற்றிருக்கின்றன!

திருஞான சம்பந்தரிலும் நாவலரிலும் துடியாக இருந்த இப் பண்பு தான் சைவ ஆளுமை என்பது. சைவர் என்றொருவரை இனங்காட்டும் இலச்சினையும் இதுவன்றி வேறு இல்லை.

பொதுத் தர்மங்களை ஊரொத்து நிறைவேற்றுங் கடப்பாட்டை யாரும் மறார். அது வாஸ்தவம். ஆமெனில் பொதுத் தர்மங்களைச் சிதைக்கும் முயற்சிகளை ஊரொத்து நின்று தடுத்தலைத் தவறென்பார் யார்? சமயத்தை விஞ்சிய பொதுத் தர்மம் வேறு இல்லை .

இன்று நம்நாட்டுச் சைவர்கள் முன்னுள்ள அத்தியாவசியக் கடமை இது என வற்புறுத்தல் மிகையாகாது.

உலகத்துச் சமயங்களுள் வழிபடு தெய்வ இலட்சணங்களைச் சுருதி, யுக்தி அனுபவங்களுக்கு விரோதம் இல்லாமல் முழுமையாக விளக்கும் சமயம் சைவம் ஒன்றே. இறைவன் எனப்படுபவன் எப்படி எப்படி இருக்க வேண்டும் என்றும் அப்படி இருக்குமவன் சிவன் ஒருவனே என்றும் சைவ ஞான நூலாகிய சிவஞான சித்தியார் செய்யுள் கூறுகிறது.

சிவஞான சித்தியார் எட்டாம் சூத்திரத்தின் படி சிவனுக்கு மட்டுமே இறைவனாந் தன்மையும் வழிபடப்படும் தன்மையும் உண்டென்ற உண்மை பெறப்படும். இவ் உண்மையின் வழி நிற்பது சைவம். இதற்கு வேத சிவாகம ஆதாரம் உண்டு.

அனுமார் முதலியவற்றுக்கு மேற்குறித்த அரும் பண்புகள் இல்லை; அவை இல்லாமையால் வேதாகம அத்தாட்சியும் இல்லை.

அனுமான் மகிமை பேசும் புராணம் இதிகாசங்கள் ஆகியவை வேதமும் அல்ல; ஆகமமும் அல்ல. அவற்றை பிரமாணமாகக் காட்டுவது ஸ்மார்த்தச்சூழ்ச்சி, அதில் விழுவது சைவர் கடமையாகாது.

நீண்ட நெடுங்காலச் சைவ ஞான பாரம்பரியத்தில் அநாதியே உயிருட் புகுந்துள்ளான் சிவன் – ஆஞ்சநேயரல்ல

என்றென்றும் உடனாயின் உயிருடன் இருந்து வாழ்வளிப்பவன் சிவன் – ஆஞ்சநேயரல்ல.

உயிரின் பாசந்தீர்த்துப் பரகதிப் பேறளிப்பவன் சிவன் – ஆஞ்சநேயரல்ல.

பாசந்தீர்ந்து பெறும் மோட்ச நிலையில்

தேனாய் இன்ன முதமாய் தித்திப்பவன் சிவன் – ஆஞ்சநேயரல்ல.

சிவனை வழிபட்டு சைவராய் இருந்து சிவோஹம் பாவனை பண்ணிச் சிவமயமாவதே சைவந் தழுவும் வாழ்க்கைப் பேறு.

அன்றி, ஆஞ்சநேயரை வழிபட்டுச் சைவர் அல்லாதாராய் இருந்து ஆஞ்சநேயோகம் பாவனை செய்து அவராவது அல்ல.

அதிகம் ஏன்? சைவருக்கு ஆஞ்சநேயர் தெய்வம் ஆகார்.

–மு.கந்தையா

## மதமான பேயை அழிப்போம்

சிவத்தை உணராதவர்கள் சிவத்தைப் பற்றிப் பேசுவதும், பரத்தை காணாதவர் பரத்தைப் பற்றி விமர்சிப்பதும் இன்றைய கலிகாலக் கலாசாரம் போலும்!

சமயம் என்பது உணரப்பட வேண்டியதொன்று. அது வெறும் சாத்திர ஞானத்தா லும் சமயச் சடங்குகளினாலும் அறியப்படுவ தொன்றல்ல என்பதைத் தெளிதல் வேண்டும்.

கலியுகத்திற்கான சிவாகமத்தை வகுத்துத் தந்த முது கிழவன் திருமூலன் அவனது திருமந்திரத்தை பொருளுணர்ந்து கற்றவன் தெய்வ உருவங்களில், சம்பிரதாயங்களில் பேதங் காணமாட்டான்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்.
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

என்பது அவரது திருமந்திரம் (270)

சிவநெறி என்பது மனிதன் சிவமயமாக ஆகும் பேற்றைப் பெறுவதற்கு கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் நெறி.

சிவனை அண்டிய தொண்டன், சிவமயமாகுவான் என்றால், அவனும் சுவமியன் அல்லவா?

பார்ப்பதெல்லாவற்றையும் சிவமயமாகக் காண்பதல்லவா சிவத்தொண்டனின் நிலை. பெரிய புராணக் கதைகள் இதனை வலியுறுத்துகின்றனவே.

அப்படியிருந்தும் சித்தாந்தம் என்றும் வேதாந்தம் என்றும் பேதப்படுபவர்களும், சிவம் பெரிது, சக்தி பெரிது, திருமால் பெரிது என்று பேதப்படுபவர்களும், சிறு தெய்வம், பெருந் தெய்வம் என்று பின்னப்படுபவர்களும் சிவம் ஆகிய மெய்ப்பொருளை உணராதவரே என்பது உறுதி.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார் முதற்பூதம்
பரத்தில் மறைந்தது பார் முதற் பூதமே —

திருமந்திரம் (2290)

இதை உணர்ந்தவர்கள் இறைவனின் உருவங்களில் பேதம் காணமாட்டார்கள். பேதம் காண்பார்களாயின் அவர்கள் அவ்வுருவங்களில் மறைந்திருக்கும் பரத்தை அறியாதவர்கள் என்பது தெளிவு.

எம்பொருள் எம்பொருள் என்றே சொல்லும்

எல்லாச் சமயத்துள் எல்லார்க்கும் ஒன்றே (அது)
செம்பொருள் என்பது பாரீர் — திருச்
சிற்றம்பலத்தே திருநட ஜோதி —
என்றார் வள்ளல் பெருமான்.

சத்திய சமரச சன்மார்க்க நெறியே சிவநெறி. அதைப் போதிப்பதே இந்து சமயம். சகல தோற்றங்களிலும், சகல உயிர்களிலும் அந்தராமியாய் இருக்கும் இறையை, செம் பொருளாகக் கண்டு போற்றும் புதியதோர் உலகம் செய்வோம். அங்கு மதமான பேயை அழிப்போம்.

—அடியார்க்கடியன்.

## ஆஞ்சநேயரிலும் இருக்கிறார் சிவன்

தூணிலும், துரும்பிலும் இருக்கும் எங்கள் ஆதிசிவன் எல்லோரிடத்திலும் இருப்பது போன்று சகல சீவராசிகளிடத்திலும் இருக்கிறான். அப்படியெனின் ஆஞ்சநேயரிடத்திலும் இருக்கிறான். எல்லாம் சிவமயம் என்பதை ஒப்புக்கொண்டால் மேலுள்ள விளக்கம் விளங்கும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சைவ வினா விடையின் முதலாவது வினா 1. உலகத்துக்கு கர்த்தா யாவர்? விடை சிவபெருமான். அவரின் திருக்குமாரர்கள் பிள்ளையார், முருகன் ஆவார். படைத்தலுக்கு பிரம்மா, காத்தலுக்கு கண்ணன், அழித்தலுக்கு உருத்திரன் என சிவன் அமர்த்தினார். காத்தல் கடவுளான கண்ணனின் அவதாரம் இராமன். இராமனின் தொண்டன் ஆஞ்சநேயன்.

காவலாளியின் ஆதரவால் மேலதிகாரியின் அருள் கிட்டுவது போல, ஆஞ்சநேயன் ஊடாக கண்ணன். கண்ணன் ஊடாக சிவன். இது தற்கால வாழ்க்கை முறையோடு ஒட்டிய வழிமுறையாகும்.

–ந.பரமானந்தம்

## அதிர்ச்சி தரும் சமய நிகழ்வுகள்

தமிழ் மொழியில் சைவமும் வைணவமும் தனித்துவத்துடன் தத்துவ சாத்திரப்படி பல்லாண்டுகள் நிலை பெற்று விளங்குகின்றன.

இலங்கையில் சைவ சமயம் தனிப் பெருஞ்சமயமாகப் பற்பல சிவாச்சாரியர்களை உள்ளடக்கிய இந்து சமயமாக உள்ளது.

வைணவ சமய குரு பரம்பரை இலங்கையில் இடம்பெறவில்லை. சிவாச்சாரிய பரம்பரையினரே வைணவ ஆலயங்களிலும் பணியாற்றினர்.

சமீப காலத்தில் சைவ ஆலயங்களிலே வைணவ சமயத் தெய்வங்களை பிரதிஷ்டை செய்வதிலும் தனியே அனுமார் கோயில்களை அமைப்பதிலும் சிவாச்சாரியார் சிலர் ஈடுபட்டுள்ளனர். அதனை பொறுப்பு வாய்ந்த சைவ நெறியினர் ஆதரித்தனர். இவை அதிர்ச்சி தரும் நிகழ்வுகளாகும்.

சிவாச்சாரியர்களாகிய சிவப்பிராமணர் ஸ்மார்த்த பரமாசாரியராகிய சங்கராச்சாரியரின் வழியொழுகின் அவர்கள் ஸ்மார்த்த சமயிகளாகி விட்டனர் என்பதே உண்மை. ஸ்மார்த்தர் என்பது பற்றி பின் வருமாறு தெய்வத்தின் குரல் முதற்பகுதியில் கூறப்படுகின்றது. (பக்கம் 710, பத்தாம் பதிப்பு 1994).

''ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதர்களின் சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்டிருக்கின்ற நாம் சைவரும் அல்லர்; வைணவரும் அல்லர்; நமக்கு ஸ்மார்த்தர் (சுமார்த்தர்) என்று பெயர். ஸ்மிருதிகள் என்கிற தர்ம சாத்திரங்கள் சொல்வதை அனுசரிப்பவர்களே ஸ்மார்த்தர்கள். நமக்கு சிவன், விஷ்ணு இன்னம் மீதமுள்ள எல்லாத் தெய்வமுமே ஒரே பரமாத்மாவின் வெவ்வேறு ரூபங்கள் தான். இதில் ஏற்றத் தாழ்வே இல்லை''

அனுமான் வழிபாடு ஸ்மார்த்தர்களின் வழிபாடு ஆகும். அது சைவர்களுக்கு உரியது அல்ல.

— க.கணபதிப்பிள்ளை

## ஆஞ்சநேயர் வெறும் இராமபக்தர் மாத்திரமே

அன்பு வழியென்றும் பக்திநெறியென்றும் பகட்டுப்பேசி ஆஞ்சநேயருக்கு கோவில் கட்டுவதும் குடமுழுக்காட்டுவதும் அவரைத் தெய்வம் ஆக்குவதும் மிண்டிய மாயாவாதம் ; சிவத்துரோகம்.

விஷ்ணுவின் இராம அவதாரக் கதையான இராமாயணத்தில் ஒரு பாத்திரமாக, இராமபக்தனாக வருகிறார் ஆஞ்சநேயர். இராமனுடைய அனுக்கிரகம் பெற்று அவன் நாமத்தை உச்சரித்துச் செயற்கரிய செயல்கள் செய்கிறார்.

வாலில் தீ மூட்டிய போது வால் எரியுறாததும், சஞ்சீவி மலையைத் தூக்கி வர ஆஞ்சநேயர் பலமடைந்ததும் ஸ்ரீராமனது அருளேயன்றி ஆஞ்சநேயருடைய தெய்வத்தன்மை அன்று.

இல்லாத ஒன்றை உள்ளதெனக் காட்டுவது தவறாகும். தெய்வ அம்சமாகவோ, மூர்த்தமாகவோ, அவதாரமாகவோ இல்லாத ஆஞ்சநேயரை வழிபடு தெய்வமாகப் படைப்பது தவறில்லையா?

காலமாற்றம் கருதி ஆஞ்சநேய வழிபாடு அமைய முடியாது. கதிரைமலையிலிருந்து பிள்ளையார் பெயர்க்கப்பட்டு மற்றொருவர் சிலை வைக்கப்பட்டதும் 'ஓம்' எனும் மந்திரம் பிரதான வாசலில் அகற்றப்பட்டதும் காலமாற்ற வழிபாட்டு முறையாகுமா?.

கச்சியப்ப சிவாச்சாரியார் காட்டிய ''மேன்மை கொள் சைவ நீதி'' சைவ நீதியாகவே துலங்கவேண்டும்.

—அ.சுப்பிரமணியம்


வெள்ளவத்தை
சுசீலா கோல்ட் ஹவுஸ்
வெள்ளவத்தையில்
தங்க நகைகளை 22 கரட்டில்
ஓடருக்கும் உடனடியாகவும் மற்றும்
திருமண வைபவங்களுக்கு பொன்னுருக்கியும்
கொடுக்கப்படும்
வெள்ளவத்தை சுசீலா கோல்ட் ஹவுஸ்
35/6, பிளாசா கொம்பிளக்ஸ்,
காலி வீதி, கொழும்பு - 06.
தொலைபேசி: 594790



WELLAWATTE
SUSILA GOLD HOUSE
வெள்ளவத்தையில்
தங்க நகைகளை 22 கரட்டில்
ஓடருக்கும் உடனடியாகவும் மற்றும்
திருமண வைபவங்களுக்கு
பொன்னுருக்கியும்
கொடுக்கப்படும்
SUSILA GOLD HOUSE
35/6, Plaza Complex,
Galle Road, Colombo - 06.
Tel: 594790




# அண்டவெளி ஆராய்ச்சியில் ரோபோ!



நாம் காணும் சூரியன், ஆகாய கங்கை போன்ற நட்சத்திரக் கூட்டங்கள், சந்திரன் செவ்வாய் போன்ற கிரகங்கள் அனைத்தும் அடங்கிய பகுதியே அண்டவெளி இதனை பிரபஞ்சம் என்றும் கூறுவதுண்டு.சந்திரன், செவ்வாய் போன்ற கிரகங்களுக்கு விஞ்ஞானிகள் செயற்கைக் கோள்களை அனுப்பி வருகிறார்கள் அல்லவா? பாத்பைண்டர் செயற்கைக்கோள் செவ்வாய்க்கிரகத்தில் இறங்கி மண்ணை எடுத்து பூமிக்கு அனுப்பியது. செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் வாழும் அறிகுறிகளையும் இது தந்துள்ளது. தற்போது அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சித் துறையுடன் சேர்ந்து பிட்ஸ்பர்க்கில் உள்ள கார்னிஜ் மெயின் பல்கலைக்கழக ஆராய்ச்சி மையம் புதிய வகை ரோபோவை தயாரித்து உள்ளது. இந்த ரோபோக்கள் அறிவுத்திறன் கொண்டதாக உருவாக்கப்பட்டு உள்ளன. சூரிய சக்தியில் இயங்கும் இவை தானாகவே ஆராய்ச்சிகளை மேற்கொள்ளக்கூடியன. சந்தேகம் கேட்டு தெரிந்து கொள்ளும் திறன் கொண்டதாக உருவாக்கப்பட்டவை. இவற்றை ஆட்டிக் பனிப்பிரதேசங்களில் பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளார்கள்.

# எனக்குத் தெரிந்த பாரதி



''ஓடி விளையாடு பாப்பா – நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா''

இதைப்பாடியவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அல்லவா? அவரைப் பற்றி உங்களுக்கும் தெரிந்திருக்கும்.

பாரதியார் பற்றி உங்களுக்குத் தெரிந்தவற்றை எமக்கு எழுதி அனுப்பி வையுங்கள். வாரம் ஒருவரின் ஆக்கம் பிரசுரிக்கப்படும்.

'இளஞ்சுடர்'
36/2, பிரெட்ரிகா வீதி,
கொழும்பு–06.

1. கரையிலே போகும் அண்ணலுக்கு முதுகிலே மூன்று சுழி!
2. கறுப்பு மெத்தையில் காய்கிறான் வெள்ளையன்.
3. ஓயாது இரையும் இயந்திரமும் அல்ல உருண்டோடி வரும் பந்தும் அல்ல. அது என்ன?
4. வாசமில்லா பூவிது அதிகாலையில் நம்மை எழுப்புபவனுக்கு முடி இது, இது என்ன பூ?
5. ஒற்றைக்கோழிக்கு வயிறு நிறைய முட்டை அது என்ன?

# விடுகதைப் புதிர்களும் சரியான விடைகளும்

விடைகள் இங்கே:

1. அணில்
2. தோசை
3. கடல் அலை
4. சேவல் கொண்டை
5. வெண்டிக்காய்.

## இது உங்கள் பக்கம்

சிறுவர் வாசகர்களே! இன்று முதல் உங்களையும் தன்னுடன் அரவணைத்துச் செல்ல வருகிறது இளஞ்சுடர். இது உங்களுடைய பக்கம். அதனால் உங்கள் கை வண்ணங்கள், கட்டுரைகள், கதைகள் ஆகியவற்றை எமக்கு எழுதி அனுப்பி வையுங்கள். தரமானவற்றுக்கு 'இளஞ் சுடர்' இல் களம் உண்டு. ஆக்கங்கள் வர வேண்டிய முகவரி:

'இளஞ்சுடர்'
36/2, பிரெட்ரிகா வீதி,
கொழும்பு–06.

# முதன் முதலில்



1. முதல் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி. 7.6.1975 இல் இங்கிலாந்தில் உள்ள லோர்ட்ஸில் நடைபெற்றது.
2. முதல் உலகக் கோப்பைப் போட்டியில் இந்தியா, இங்கிலாந்து அணிகள் கலந்து கொண்டன.




ஷர்மிலா

# ஏமாற்றாதே! ஏமாறாதே!!



ஒரு காட்டில் சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது. அது பலசாலியாக விளங்கியதால் அதுவே காட்டுக்கு ராஜாவாகவும் திகழ்ந்தது.

ஒருநாள் சிங்கம் மானொன்றை வேட்டையாடித் தின்று விட்டுத் தண்ணீர் குடிப்பதற்காக நீரோடையைத் தேடி வந்தது. அப்போது நீரோடையில் யாரோ நீரைக் குடிக்கும் சத்தம் கேட்டது,

சிங்கம் புதருக்கிடையில் மெல்லப் பதுங்கிக் கொண்டது. தலையை மட்டும் வெளியே நீட்டி தண்ணீர் குடிப்பது யார்? என்று பார்த்தது. எருதொன்று தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தது.

சிங்கம் இதற்கு முதல் எருதைக் கண்டிருக்கவில்லை. அதனால் அதன் தோற்றத்தைக் கண்டு பயந்தது. கரியநிறமும், நீண்ட கூரிய கொம்புகளும் அதற்குப் பயத்தை ஏற்படுத்தின.

''அடடா! நம்மைவிட பலவானாக இருப்பான் போலிருக்கிறதே!'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டது சிங்கம்,

எருது தண்ணீர் குடித்து மறுபக்கம் போன பின்னர் தான் புதரிலிருந்து வெளிவந்து தண்ணீர் குடித்தது. சிங்கத்தின் நடவடிக்கைகளை வயதுபோன முதிய நரியொன்று கவனித்துக் கொண்டிருந்தது. ''ஓ! இதுவா விஷயம். எருதைக் கண்டு சிங்கம் பயப்படுகிறது.அப்படியானால் ..! நாம் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது தான்'' மனதிற்குள் எண்ணிக் கொண்டது தந்திர நரி. மறுநாள் சிங்கத்தைச் சந்தித்த நரி சிங்கத்திடம் ''நேற்று நீங்கள் கண்ட மிருகம் பொல்லாதது. மிகப் பயங்கரமானது. நல்லவேளை! புதருக்குள் ஒளிந்து கொண்டீர்கள். இல்லையென்றால் உங்களைக் கொன்று தின்றிருக்கும்'' என்று கூறியது.

ஏற்கனவே பயந்து கொண்டிருந்த சிங்கத்திற்கு இவ்வளவும் போதாதா? அதன் உடல் நடுங்கத் தொடங்கியது.இது நரிக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.அது வஞ்சகச் சிரிப்புடன்சிங்கத்தைப் பார்த்து,

''சிங்கத்தாரே நீங்கள் பயப்பட வேண்டாம். இனிமேல் உங்களை அந்த கொடிய மிருகத்திட மிருந்து பாதுகாப்பதே எனது வேலை. அந்த மிருகம் நடமாடாத இடங்களாகப் பார்த்து நாம் வேட்டையாடுவோம்'' என்று கூறியது.

சிங்கத்திற்கும் அது சரியான யோசனையாகப் பட்டது அன்றிலிருந்து சிங்கம் வேட்டையாடப் புறப் படுமுன், நரியிடம் அனுமதி கேட்டு விட்டே புறப்பட்டது. நரிக்கோ உணவுதேடும் வேலை இருக்கவில்லை.


சிங்கம் வேட்டையாடிச் சாப்பிட்டு மீதமான உணவுகளை நரி சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது,வேறு சிலநரிகள் அவ்விடம் வந்து அங்கிருந்த உணவைச் சாப்பிடத் தொடங்கின.

வயோதிப நரி தடுத்தது. ''இது எனது உணவு, எனக்குத்தான் சொந்தம்'' என்றது. மற்ற நரிகள் எக்காளமாகச் சிரித்தபடி,

''என்ன உளறுகிறாய்? பலமுள்ள மிருகம் அடித்துச் சாப்பிட்ட பின் மீதமாகவுள்ள உணவுகளை யாரும் சாப்பிடலாம். இது தான் பொது நியதி. ஆனால் நீ எருதை வைத்து சிங்கத்தை ஏமாற்றுவது தெரியாதென்றா நினைக்கிறாய்'' என்றன.

வயதான நரியோ மற்ற நரிகள் சொன்னதைப் பொருட்படுத்தவில்லை. உணவைக் கொடுக்காமல் தானே உண்டது.இதனால் கோபமடைந்த நரிகள் சிங்கத்திடம் சென்று எருதைப்பற்றி எடுத்துக் கூறின.''ராஜாவே எருது சாதுவான மிருகம். அதற்கு உங்களை விட பலம் குறைவே. நீங்கள் அதனைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய தில்லை. கிழட்டு நரி உங்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது.''

நரிகள் கூறியதை உடனே சிங்கம் நம்பவில்லை. ''அந்த மிருகத் திற்குப் பெரிய 2 கொம்புகள் இருக்கின்றன. நான் கண் டேனே'' என்றது சிங்கம்.



''சிங்கராஜா நீங்கள் எங்களுடன் வாருங்கள் நாங்கள் எருதின் உண்மையான குணத் தைக் காட்டுகிறோம். மனிதர்கள் எருதை வளர்த்து தமது வேலைகளைச் செய்விக்கி றார்கள்'' என்றன நரிகள்.

சிங்கமும் அவைகளுடன் சென்று எருது வயலில் உழு வதைக் கண்டது.இந்த மனி தர்களே எருதிடம் வேலை வாங்கு கிறார்கள். அப்படியானால் எருது நம்மளவிற்கு பலமான மிருகம் இல்லைதான். சிங்கத்திற்கு எருதைப்பற்றிய பயம் போய் விட்டது.இதையறியாத வயதான நரி அடுத்த நாள் சிங்கத்திடம் வந்தது. ''அடடா! எருது இப் பொழுதுதான் இந்தப் பக்கத்திலி ருந்து போனது. வாருங்கள் வேட் டையாடலாம்'' என்று சிங்கத்தை அழைத்தது.

கோபமடைந்த சிங்கம், ''ஏமாற் றுக்கார நரியே! எருதைப்பற்றிய பொய்களைக் கூறி என்னைப் பயங்காட்டி விட்டாயே! உன்னை என்ன செய்கிறேன் பார்'' என்று கூறி நரிமேல் பாய்ந்து அதனை அடித்துக் கொன்றது.

(பார்த்தீர்களா! சிறுவர்களே ஏமாற்றுக்கார நரிக்குக் கிடைத்த தண்டனையை.இக்கதை எமக்கு ஒரு பாடம் அல்லவா?)

வாத்து ஒன்றை வரையும் படிகள் இவை. இவற்றைப் பின்பற்றி நீங்களும் வரையலாம்.



## வாரம் ஒரு குறள்

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத் தூறும் அறிவு. (தோண்டத் தோண்ட ஊற்றெடுக்கும் ஆற்று நீரைப் போல கல்வியும் கற்கக் கற்க அறிவு பெருகும்)



கிஷோர் தனது மாமாவின் வீட்டுக்குச்செல்ல வேண்டுமாம். வழியைத் தவற விட்டு விட்டான். எங்கே சிறுவர்களே நீங்கள் அவனுக்கு வழிகாட்டி உதவுங்களேன்.

## நண்பர்கள் தேவையா?

மாணவர்களில் சிலர் யாருடனும் பழக மாட்டார்கள் அல்லது அவர்கள் பழக முற் பட்டாலும் ஏதோ ஒரு காரணத்திற்காக அவர்களை மற்றவர் கள் ஒதுக்கியே வைத்திருப்பார்கள். இதிலிருந்து விடுபட்டு அனைவரையும் நண்பர்களாக்கிக் கொள்ள இதோ டிப்ஸ்

* அமைதியான குணம் கொண்டவராக இருங்கள்.
* வீண் பெருமை பேசாதீர்கள்.
* கேட்டால் மட்டும் பதில் சொல்லுங்கள் சக மாணவரிடம் உங்கள் கருத்தைத் திணிக்காதீர்கள்.
* உதவ பின்னிற்க வேண்டாம். சக மாணவர்களுக்கு ஏதும் பிரச்சினை என்றால் உங்களால் முடிந்த உதவியைச் செய்யுங்கள்.
* உண்மையாக இருங்கள் நண்பரைப் பற்றி புறங்கூறாமல் இருங்கள்.

# நாடாளுமன்றம் வந்துவிட்ட அரசு - ஐ.தே.க. பலப்பரீட்சை

## எரிகிற வீட்டில் பிடுங்கப்பார்க்கும் ஜே.வி.பி.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் தலைவிதி ஊசலாடிக் கொண்டிருக்கிறது. அதற்காக இன்றோ, நாளையோ அரசு கவிழ்ந்து விடும் என்பதைக் கூறுவதற்கில்லை. ஆனால் அதன் ஆயுள் குறுகிவிடுமோ என்ற சந்தேகத்தையே அரசியல் நிலைவரம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

ஜூலை மாத முதல் வாரத்தில் நாடாளுமன்றம் கூடவிருக்கிறது. 6ஆம் திகதி அவசரகால நிலையை நீடிக்கும் பிரேரணை விவாதத்துக்கு வரும். அரசு நாடாளுமன்றத்தில் எதிர்நோக்கும் முதலாவது சோதனையாக இது அமையும். எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துள்ள முஸ்லிம் காங்கிரஸின் ஏழு எம்.பிக்கள் அப்பொழுது எவ்வாறு வாக்களிப்பார்கள் என்பது உறுதியாகத் தெரியவில்லை.

அவர்கள் எதிர்த்து வாக்களித்தால் அரசுக்கு கைகொடுக்க ஜே.வி.பி தயாராக இருந்து வருகிறது. ''அவசரகால நிலை நீக்கப்படுவது புலிகளுக்கு ஆதரவாக அமைந்து விடும். அதனால் அவசரகால நிலை நீக்கப்படுவதை ஆதரிக்கப் போவதில்லை'' இவ்வாறு ஜே.வி.பி ஏற்கனவே அறிவித்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் எழுவர் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துள்ள போதிலும் அரசு கவிழாது என்றே அரசுத் தலைவர்கள் கூறி வருகிறார்கள்.

அண்மையில் அத்தனகலையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி சந்திரிகா உரையாற்றினார். அரசு எந்த வகையிலும் பலவீனமடையவில்லை என்று அவர் அப்பொழுது குறிப்பிட்டார். மற்றொரு முக்கிய விடயத்தையும் ஜனாதிபதி அங்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

''1994ஆம் ஆண்டில் மக்கள் அரசுக்கு வழங்கிய மிகப் பெரிய ஆணை இன்றும் அப்படியே உள்ளது. மக்கள் ஆணை வழங்கி அமைக்கப்பட்ட அரசுக்கு பிரச்சினை ஏற்படுமேயானால் அப்பிரச்சினைக்குத் தீர்வு காண்போம். அவ்வாறு தீர்வு காண ஜே.ஆரின் அரசியல் சட்டம் தடையாக இருக்குமேயானால் என்ன செய்வது என்பதைத் தீர்மானிப்போம்.

மக்கள் ஆணையைப் பயன்படுத்தி இன்றைய அரசியல் சட்டத்தை ஒழித்து புதிய அரசியல் சட்டத்தை நிறைவேற்ற தேவையான மாற்றுவழிகள் உள்ளன'' இதுவே ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயமாகும்.

புதிய அரசியல் சட்டத்தைக் கொண்டு வருவது குறித்து ஜனாதிபதி முன்னரும் கூறியுள்ளார். நாடாளுமன்றத்தில் ஒரு மேலதிக வாக்கால் கூட அதைச் செய்ய முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டி வந்துள்ளார்.

பொ.ஐ.மு அரசைக் கவிழ்க்காமல் விடப் போவதில்லை என்று ஐ.தே.க ஏனைய கட்சிகளின் ஆதரவைத் திரட்டிக் கொண்டிருக்கும் இன்றைய நிலையில் அரசுத் தலைவர்களின் திட்டங்களை நிறைவேற்ற அவகாசம் இருப்பதாகத் தெரியவில்லை. அவற்றுக்கு ஆதரவு கிடைக்கும் என்பதும் நிச்சயமல்ல.

இந்த நிலையில் ஐ.தே.க.வின் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முகம் கொடுப்பதை விட அரசுக்கு மாற்று வழியில்லை. பிரேரணையைத் தோற்கடிக்க ஜே.வி.பி தனக்குத் தோள் கொடுக்கும் என்று அரசு ஆரம்பத்தில் நம்பியிருந்தது. ஆனால் அந்த நம்பிக்கை இப்பொழுது சிறிது சிறிதாக சிதைந்து வருகிறது.

நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி 10 எம்.பிக்களைக் கொண்டுள்ளது. எதிர்க்கட்சியில் இருந்தாலும் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஜே.வி.பி கையெழுத்து வைக்கவில்லை. ஐ.தே.க கோரிய ஆதரவையும் அது வழங்கவில்லை. பிரேரணையை ஆதரிப்பதா, எதிர்ப்பதா என்பதை தீர்மானிக்கும் பொறுப்பை அக்கட்சி நாடாளுமன்ற எம்.பிக்களிடமே விட்டு விட்டுள்ளது.

இருந்தாலும் அரசியலில் ஏற்பட்டுள்ள நிச்சயமற்ற நிலையைப் பயன்படுத்தி சில காரியங்களைச் சாதித்துக் கொள்ள ஜே.வி.பி. நினைக்கிறது. எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபமல்லவா?

தேர்தல், பொலிஸ், அரசாங்க சேவை, நீதி நிருவாகம் ஆகியவற்றுக்கு சுதந்திர ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று அரசை ஐ.தே.க. கோரி வருவது தெரிந்ததே. முஸ்லிம் காங்கிரஸ், ஜே.வி.பி ஆகியவையும் இந்தக் குழுக்கள் அமைக்கப்படுவதை ஆதரிக்கின்றன. அரசோ இக் குழுக்கள் உடனடியாக அமைக்கப்படுவதை இன்னமும் முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை.

அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ள இச்சந்தர்ப்பத்தில்



ரத்னசிறி விக்கிரமநாயகா

ஆதரவு வழங்குவதற்கான நிபந்தனையாக இந்த ஆணைக்குழுக்கள் அமைக்கப்படுவதையே ஜே.வி.பி முன் வைத்துள்ளது. அதன் பிரசார செயலாளரான விமல் வீரவன்ச அண்மையில் இரத்மலானையில் நடைபெற்ற கட்சிக் கூட்டமொன்றில் உரையாற்றுகையில் இது குறித்து கூறியுள்ளார்.

''நாடாளுமன்றத்தில் நெருக்கடியான ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இன்னும் நான்கு மாதங்களின் பின் நடைபெறும் பொதுத் தேர்தலிலேயே அது முடிவுறும். அதனால் நாம் இப்பொழுது அரசுக்கு ஒரு விடயத்தை மீண்டும், மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறோம். எஞ்சிய நான்கு மாதங்களையும் சிரமமின்றி கழிக்க வேண்டுமானால் ஐந்து ஆணைக்குழுக்கள் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுமாறு கூறுகிறோம்.

கூட்டரசாங்கத்தில் அமைச்சர் பதவிகளையோ, வேறு உயர் பதவிகளையோ பெறும் எண்ணம் ஜே.வி.பிக்கு இல்லை. இன்றைய கொள்ளைக்கார சமூக, பொருளாதார, அரசியல் முறையை வேரோடு பிடுங்கி எறிய வேண்டும். அதற்குப் பதிலாக மாற்றுத் திட்டம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அந்தப் பாரிய பொறுப்பே இன்று எம்மீது சுமத்தப்பட்டுள்ளது.

புதிய மோசடிக்காரர்களை விரட்டியடித்து விட்டு பழைய மோசடிக்காரர்களைக் கொண்டு வருவதன் மூலம் அதைச் செய்ய முடியாது. அல்லது நாட்டை ஏப்பமிடுவோரை விரட்டி விட்டு நாட்டை ஏப்பமிட்டோரைக் கொண்டு வருவதன் மூலமோ அதைச் செய்ய முடியாது.

இவ்வாறு விமல் வீரவன்ச கூறியுள்ளார்.

முன் சொன்ன நான்கு ஆணைக்குழுக்களோடு அரசாங்க ஊடகங்களுக்கான சுதந்திர ஆணைக்குழு அமைக்கும் கோரிக்கையையும் ஜே.வி.பி அரசாங்கத் தலைவர்களிடம் முன் வைத்துள்ளது. பிரதமர் ரத்ன சிறி விக்கிரமநாயகா, அமைச்சர்களான டி.எம்.ஜயரத்ன, ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரை ஜே.வி.பி தலைவர்கள் இது தொடர்பாக சந்தித்து உரையாடியுள்ளனர்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன் இந்த ஐந்து ஆணைக்குழுக்களும் அமைக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாது போனால் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்க வேண்டிவரும். ஜே.வி.பி தலைவாகள் இந்த செய்தியை அரசாங்கத் தலைவர்களிடம் உறுதியாகத் தெரிவித்துள்ளனர். இது குறித்த அரசு— ஜே.வி.பி சந்திப்புகள் தொடரலாம்.

ஜே.வி.பியின் ஆதரவு கிடைக்காது போனாலும் வெற்றி பெறுவோம் என்று அரசாங்கத் தலைவர்கள் கூறுகிறார்கள். ஜே.வி.பியின் ஆதரவு இல்லாமல் கூட நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றி பெறச் செய்வோம் என்கின்றனர் ஐ.தே.க தலைவர்கள். ஜூலை 16ஆம் திகதி நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு வரும் என்று பிரதமர் கூறியுள்ளார்.

மொத்தத்தில் நாட்டின் அரசியல் நிலைவரம் ஒரே குளறுபடியானதாகவே இருந்து வருகிறது. தினமும் சூழ்நிலைகள் மாறிக் கொண்டிருக்கின்றன. நாளை எதுவும் நடக்கலாம்.

— எட்வேர்ட்

### சோதிடமும் அரசியலும்

ஜூன் 16 ஆம் திகதி குருபெயர்ச்சி நடைபெற்றது. இதனால் அரசியலில் மாற்றங்கள் ஏற்படலாம் என சோதிடர்கள் கூறியிருப்பது தெரிந்ததே.

குரு இப்பொழுது மிதுன ராசியில் உள்ளது. மிதுனத்துக்கு குரு 12 ஆண்டுகளுக்கு ஒரு தடவை வருகிறது. அவ்வாறு வந்த வேளைகளில் அரசியலில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் குரு பகவான் மிதுனராசிக்கு வந்த காலகட்டங்களை சோதிடர்கள் தமது கணிப்புகளுக்கு ஆதாரம் காட்டியுள்ளனர். அவை வருமாறு:

1.1953 ஆகஸ்ட் 30 ஆம் திகதி முதல் 1954 செப்டெம்பர் வரை குரு மிதுன ராசியில் சஞ்சரித்தது.

அவ்வாண்டு அக்டோபர் மாதம் 12 ஆம் திகதி ஐ.தே.க அரசின் தலைவர் டட்லி சேனநாயகா பிரதமர் பதவியில் இருந்து வெளியேறினார். கட்சியின் உப தலைவரான சேர். ஜோன் கொத்தலாவலை பிரதமரானார். அதே ஆண்டு நவம்பர் 28 ஆம் திகதி கட்சித் தலைமைப் பதவியிலும் மாற்றம் ஏற்பட்டது. சேர்.ஜோன் கட்சித் தலைவராகவும் பதவியேற்றார்.

2.1965 ஆகஸ்ட் 5முதல் 1966 ஆகஸ்ட் வரை குரு மிதுனராசியில் சஞ்சரித்தது.

அக்காலகட்டத்தில் ஐ.தே.க.வே ஆட்சியில் இருந்தது. ஆனால் செல்வநாயகம் போன்ற தமிழ் தலைவர்கள், பிலிப் குணவர்தன போன்ற மாக்ஸிச தலைவர்கள், சீ.பி.டி. சில்வா போன்ற தலைவர்கள் அரசாங்கத்தில் இணைந் திருந்தனர்.

3.1977 ஜூலை 18 முதல் 1978 ஆகஸ்ட் வரை குரு மிதுன ராசியில் சஞ்சரித்தது.

அவ்வாண்டு ஜூலை 23 ஆம் திகதி ஜே.ஆர். ஜயவர்தனாவின் புதிய அரசாங்கம் பதவியேற்றது.

4.1989 ஜூலை 1 முதல் 1990 ஜூலை வரை குரு மிதுன ராசியில் சஞ்சரித்தது.

இக்காலகட்டத்தில் ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதியானார்.

5.2001 ஜூன் 16 ஆம் திகதி குரு மாற்றம் ஏற்பட்டது.

ஜூன் 20 ஆம் திகதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் அமைச்சர் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்டார். முஸ்லிம் காங்கிரஸ் அரசிலிருந்து வெளியேறியது. ஜூன் 27 ஆம் திகதி ஜனாதிபதி வெளிநாடு சென்றார். ஜனாதிபதியின் கடமைகள் பிரதமரிடம் ஒப்படைக்கப்பட்டன. நாளை....?

# சொல்ஹெய்ம் ஓரங்கட்டப்பட்டது துரதிஷ்டம்!



கலாநிதிஒய்வின்ட்பார்லருட்

நோர்வேயின் விசேட தூதுவர் சொல்ஹெய்ம் ஓரங் கட்டப் பட்டது துரதிஷ்டவசமானது

நோர்வே பல்கலைக் கழக விரிவுரையாளரும் சிரேஷ்ட ஆராய்ச்சியாளருமான கலாநிதி ஒய்வின்ட் மேற்கண்டவாறு கூறினார்.

அண்மையில் சர்வதேச இனத்துவ கற்கை நிலையம் 'புலம்பெயர்ந்த தமிழர்களும் — தூர நோக்கு தேசியவாத மும்' என்ற பொருளில் ஆய்வரங்கு ஒன்றை நடத்தியது.

இதில் கலந்து கொள்ள கலாநிதி ஒய்வின்ட் பார்லருட் இலங்கை வந்திருந்தார்.

கடந்த 20 வருட காலத்தில் பல தடவைகள் இலங்கைக்கு விஜயம் செய்தவர் கலாநிதி ஒய்வின்ட் யாழ்ப்பாணத்தில் பல ஆராய்ச்சிகளில் ஈடுபட்டவர். பல வருடங்களாக நோர்வே குடிவரவுத்திணைக்களத்தில் உயரதிகாரியாகப்பணியாற்றியவர். நோர்வேக்கு அகதிகளாக வந்த யாழ். தமிழர்கள் மீதும் அதிக அக்கறைகொண்டவர்.

நோர்வே திரும்பிச் செல்லு முன்னர் 'சுடர் ஒளி'க்கு விசேட பேட்டி ஒன்றை அவர் அளித்தார்.

பேட்டி விவரம் வருமாறு:—

கே: இலங்கை இனப்பிரச்சினையில் தற்போதைய நிலை பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

*ப: நோர்வேயின் அனுசரணையுடனேயோ, அல்லது இருதரப்பும்விரும்பும்எந்தவொருமத்தியஸ்தத்துடனேயோ சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும். இது எனது தனிப்பட்ட கருத்து. விடுதலைப்புலிகளின்சமாதான அக்கறையை இலங்கை அரசு புறக்கணித்துவிடக் கூடாது. அவ்வாறான முயற்சிகள் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தும்.*

கே: எரிக் சொல்ஹெய்மை புலிகளின் ஆதரவாளர் எனக் கூறி பேச்சுக்களிலிருந்து இலங்கை அரசு ஓரங்கட்டிவிட்டது. இதுபற்றி ஏதாவது கூற விரும்புகிறீர்களா?

*ப: எரிக்சொல்ஹெய்ம்பலநற்பண்புகளைத்தன்னகத்தே கொண்ட நல்ல பண்பாளர். இலங்கை நலனில் அக்கறை கொண்டவர். சிறந்த தீர்க்கதரிசியும் கூட. இலங்கை அரசு சாக்குப்போக்குச் சொல்லி அவரை ஓரங்கட்டும் வரை, இரு தரப்புக்குமிடையில் சிறந்த மத்தியஸ்தராகச் செயற்பட்டு வந்தார். இலங்கை அரசாங்கத்தையும், விடுதலைப் புலிகளையும் நன்கு அறிந்தவர் என்ற முறையில் இவரை ஓரங்கட்டியது துரதிஷ்டவசமானது.*

கே: இலங்கை இனப்பிரச்சினை எவ்வாறு தீர்க்கப் படவேண்டுமென்று நீங்கள் கருதுகிறீர்கள்?

*ப: சகல இலங்கைத் தமிழர்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வொன்றின் மூலம் இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அத்தீர்வு அவர்களின் சுய அரசியல் அபிலாஷைகள் மட்டுமன்றி சமூக, பொருளாதார அபிலாஷைகளையும் நிவர்த்தி செய்வதாக இருக்க வேண்டும். அதிகாரப் பகிர்வு முறை அல்லது சமஷ்டி முறையை இதற்கு உதாரணமாக நான் கருதுகிறேன்*

கே : சிங்களப் பேரினவாதிகள் பற்றிய உங்கள் கருத்து என்ன?

*ப : சிங்களப் பேரினவாதிகளின் கூச்சலுக்கு இலங்கை அரசாங்கம் செவிசாய்க்கக்கூடாது. பேரினவாதம் என்பது காலம் கடந்த ஒன்று என்பதை அவர்கள் உணர வேண்டும். பேரின வாதம் வளர வளர நாட்டின் சமூக, அரசியல், பொருளாதாரச் சீர்கேடுகள் நிகழும் என்பதையும் அவர்கள் உணர வேண்டும்.*

கே : அண்மையில் மாவனல்லையில் நடந்த வன்செயல் சம்பவங்களைப் பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

*ப : இலங்கையில் சகல சிறுபான்மை சமூகத்தவர்களின் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதென்பது மாவனல்லை வன்செயல்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.*

கே : கொழும்புவாழ் தமிழர்களின் நிலைமை பற்றி ஏதாவது கூற விரும்புகிறீர்களா?

*ப : கொழும்பில் தமிழர்களுக்கெதிரான பாதுகாப்புக் கெடுபிடிகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. தமிழர்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதமில்லை. அவர்களுக்குசுயமரியாதையுடனும் சுய கௌரவத்துடனும் செயற்பட முடியாமலுள்ளது.*

கே : நோர்வேயிலுள்ள தமிழர்கள் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்படுவார்களா?

*ப : இனப்பிரச்சினை தீரும்வரை அகதி அந்தஸ்துள்ளவர்கள் திருப்பியனுப்பப்படமாட்டார்கள். மேலும் கொழும்புத் தமிழர்களுக்குப் பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கும்வரை நோர்வேயிலுள்ள தமிழர்கள் திருப்பியனுப்பப்படுவதற்கான சாத்தியமும் இல்லை. நோர்வே குடிவரவுப்பணியக அதிகாரியாகக் கடமையாற்றிய அனுபவங்களைக் கொண்டே இதனைக் கூறுகிறேன்.*

கே : நோர்வேயிலுள்ள தமிழர்களின் நலனில் நோர்வே அரசு அக்கறை கொண்டுள்ளதா?

*ப : ஆம். நோர்வே அரசு அங்கு வாழும் தமிழ் மக்களுக்கு சகல வழிகளிலும் உதவி செய்து வருகிறது. தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் (TCC) அறிவுறுத்தல்களின் படி நோர்வே அரசு பொருளாதார ரீதியிலும் சமுதாய ரீதியிலும் உதவி செய்து வருகிறது. கல்வி சம்பந்தமான நடவடிக்கைகளில் நோர்வே அரசு அதிக அக்கறை காட்டி வருகின்றது. வீடுகளும், பாடசாலைகளும் அரசினால் கொடுக்கப் பட்டுள்ளன.*

— நேர்காணல் : அருள்

# இனிக்க இதமான 'ஒத்திகை' நூல் வெளியீட்டு விழா!

செந்தமிழின்ப அமுதருந்த, ஆர்வலர் சேரும் இடமான கொழும்பு தமிழ்ச்சங்க அரங்கினிலே, கடந்த ஜூன் 24ம் திகதி ஒரு கவிஞனின் கனவு நனவாகியது.

நல்ல கவிதைகளுக்கு நீலாவணன் என்று பெயர் எடுத்தவர் மட்டக்களப்பு மண்ணின் மைந்தரான கவிஞர் நீலாவணன்.

அவருடைய மணியான கவிதைகள் ''எண்பதைத் தொகுத்து'' ஒத்திகை என்ற பெயரில் நூலாக வெளியிட்டிருக்கிறார் (சக்தி எப்.எம். இன் பணிப்பாளர்) எழில் வேந்தன்.

இது பெருமைசார் தந்தைக்கு அருமைமைந்தன் சொந்தகடமை என்பதை விட — தமிழ் இலக்கிய உலகிற்கு எழில்வேந்தன் செய்த பெரிய சேவை என்றே சொல்ல வேண்டும்.

இந்த வரிசையில் ''வழி'', ''வேளாண்மை'' என்ற நூல்கள் ஏற்கனவே வெளிவந்து விட்டன.

வரலாறு படைத்த கவிஞன் ஒருவனுக்காக வானொலி நாயகன் நடத்திய நற்பணி என்பதால் கவிஞர்கள், கலைஞர்கள், ஒலிபரப்பாளர்கள், தமிழார்வலர்கள் என அரங் கடங்காது அவையினர் கூடிய அதிசயம்நிகழ்ந்தது.

மகிழ்ச்சிக்குரிய மற்றொரு விடயம் வெளியீட்டு விழா நிகழ்ச்சி மிகக் குறைந்த அளவு நேரத்தில் ரசனை மிக்கதாக மிகச் சிறந்த முறையில் நடந்து முடிந்ததாகும். ஏற்பாட்டாளர் எழில்வேந்தனையும் அவருக்கு உதவியாக இருந்தவர்களையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

தலைமையுரை நிகழ்த்திய கலாநிதி எம்.ஏ. நுஃமான், நீலாவணனைப் பற்றி நான் சொல்லிக் கேட்பதைவிட அவருடைய அனைத்து நூல்களையும் படிப்பதன் மூலம் நீங்களாகவே அவரை அறிந்து கொள்வதுதான் சிறந்ததுஎன்றார்.

இதனை அடுத்து வெளியீட்டுரை நிகழ்த்திய எழில் வேந்தன். 1976ம் ஆண்டு வெளி வந்த




ஒத்திகை நூல் வெளியீட்டு விழாவிலே திருமதி நீலாவணனிடமிருந்து மயூரபதி அம்மன் ஆலய அறங்காவலர் பொன்.வல்லிபுரம் முதல் பிரதி பெறுகிறார். கலாநிதி எம்.ஏ.நுஃமான், கிழக்குப் பல்கலை பேராசிரியர் சி.மௌனகுரு ஆகியோர் அமர்ந்திருப்பதையும் எழில்வேந்தன் உரைநிகழ்த்துவதையும் படத்தில் காணலாம்.

''வழி'' பல்கலைக்கழக மாணவருக்கு ஒரு பாடமாக இருந்தபோதும் கூட அதன் பிரதிகள் இன்று இல்லாத நிலை காணப்படுகிறது. நீலாவணன் என்ற கவிஞன் இன்றும் கூட எல்லோராலும் முழுமையாக அறிந்து கொள்ளப்படாத கவிஞனாகவே இருக்கிறார் என்று வருத்தம் தெரிவித்தார்.

அறிமுக உரை யினை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னர் திரு. ஜெ.திவ்வியநாதன்நிகழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து நூல் வெளியீடும் ஆய்வுரையும் இடம்பெற்றன. ஆய்வுரையை நிகழ்த்திய ''பேராதனைப்பல்கலைக்கழகம் பேராசிரியர்சி.சிவசேகரம்நீலாவணன்தந்த பல்துறைக் கவிதைகளின் சிறப்பை விளக்கினார். அவர் இன்று உயிருடன் இருந்தால் இந்த நூல் வெளியீடு பற்றி என்ன நினைத்திருப்பார் என்றும் சொன்னார்.

சிறப்புரை ஆற்றிய கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சி. மௌனகுரு நீலாவணன் ஒரு முழுமைக் கவிஞன். சிறுமை கண்டுபொங்கும் குணமுடையவர். அவருடைய வாழ்வும், எழுத்தும் ஒன்றாகவே இருந்தன'' என்றார். அவர்தொடர்ந்துபேசுகையில்; ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாற்றில் கே.பசுபதி, சுபத்திரன், சாருமதி, புதுவை இரத்தினதுரை என்போரையும் நாம்சேர்த்துக்கொள்ளவேண்டும்என்றுகூறினார்.

சுவைஞர்கள் தேடிக்கற்க வேண்டிய கவிதை நூல்களில் ''ஒத்திகை''யும்ஒன்று என்பதேகூடியிருந்தவர்களின் கருத்து.

—க. சிவகுமார்



இராமகிருஷ்ண மிஷனில் அண்மையில் நடைபெற்ற நிர்த்தனா கலாமன்றத்தினரின் நடன விழாவில் நிர்த்தனா ஹரிதர்ஷனின் ஒரு நடனத் தோற்றம்.

படம்: அ.இராமலிங்கம்

## பரிசு பெறுகிறார் இலங்கை எழுத்தாளர்

இலங்கைப் படைப்பாளியான ஆன் ரணசிங்க அமெரிக்காவின் கலை — விஞ்ஞான ஆக்கங்களுக்கான 'ட்ரைட்டன் கல்லூரி' நடத்திய ''சலியூட் டு த ஆர்ட்ஸ் அன்ட் போயற்றி கம்பட்டிஷன்'' (Salute to the Arts Poetry Competition) என்ற போட்டியில் இரு பரிசில்களைப் பெறுகிறார்.

இவருடைய இரண்டு ஆங்கிலக் கவிதைகள் பரிசிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

1976இல் நடத்தப்பட்ட போட்டியிலும் இவர் பரிசு பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் நல்லதொரு நாடகக் கருத்தரங்கு

''மனிதர்களை மனிதர்களுக்கு உணர்த்தும் கலை நாடகக் கலையாகும். அதனால் தான் பாடசாலையில் இருந்து பல்கலைக்கழகம் வரை நாடகக் கலை ஒரு பாடமாகக் கற்பிக்கப் படுகின்றது. நாடகத் தின் மூலம் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை தோற்றுவிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.''

இவ்வாறு கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் சி. மௌனகுரு தெரிவித்தார்.

கடந்த மாதம் 24 ஆம் திகதி மாளிகாவத்தை, ஸ்ரீலங்கா இஸ்லாமிய நிலையத்தில் சமூக கலை கலாசாரப் பேரவை நடத்திய நாடகக் கருத்தரங்கிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்.

நாடகம் ஓர் உயிர்த்துடிப்புள்ள கலை ஆகும். காட்சிகளை நாம் உடனுக்குடன் நேரே காண்கிறோம். ஆனால் தொலைக் காட்சி, கணினியில் பார்க்கும் காட்சிகள் அவ்வாறானவையல்ல.

கருத்தரங்குகளை விட பயிற்சிப் பட்டறைகள் மூலமே நாடகக்கலையை மேலும் வளர்க்க முடியும்எனத் தெரிவித்தார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ள இருந்த பேராசிரியர் கா. சிவத்தம்பி சுகவீனம் காரணமாக வரவில்லை. அவரால் அனுப்பி வைக்கப்பட்ட சிறப்புரை வாசிக்கப்பட்டது.

அதில், ''கொழும்பில் நாடகக் கலையின் ஈடுபாடு குறைந்து வருகின்றது.

60 களில் சிங்களவர் மத்தியில் காணப் பட்ட நாடகப் புத்தூக்கம் இன்றில்லை. சமூக ஒருமைப்பாட்டை பேணும் ஊடகம் நாடகமாகும்'' என நாடகக் கலையின் அவசியத்தை அவர் வலியுறுத்திக் கூறியிருந்தார்.

கே. கணேசலிங்கம் தனது ஆசி உரையில் ''நாடகக்கலையை நாம் ஒரு சமூக சேவையாகச் செய்ய வேண்டும். இன்று அரசியலிலும் நாடகம் தான் நடக்கின்றது. அரசியல் வாதிகள் பாடசாலை மற்றும் பல்கலைக்கழகங்களில் நாடகத்தைக் கற்றிருந்தால் இன்று சிறந்த ஆட்சியை நடத்தியிருக்க முடியும்'' என்றார்.

அஷ்ரப் அஸீஸ் தனது ஆசியுரையில் ''கலைகளை அறியவும் அனுபவிக்கவும் நுட்பமான அறிவு தேவை. ஒரு சமூகம் கலாசாரத்தில் மிளிரும் போது தான் அது மேன்மை அடைகின்றது'' என்றார்.

கலாபூஷணம் கே.ஏ.ஜவாஹரின் நன்றியுரையினைத் தொடர்ந்து கருத்தரங்கிற்கு எல்லோரையும் தயார்படுத்தும் முகமாக குளிர்பானமும் சிற்றுண்டிகளும் வழங்கப்பட்டன.

நாடகக் கருத்தரங்கை கிழக்குப் பல் கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவரும், விரிவுரையாளர்களும் நிகழ்த்தினர்.

இக்கருத்தரங்கினூடாக சாதாரணமாக நாம் பார்க்கும் நாடகங்களில் இத்தனை நுட்பங்கள் உண்டா? என அனைவரும் வியந்ததை அவதானிக்க முடிந்தது.

மேடை அமைப்புக்களை ''புரொஜெக்டர்'' மூலம் விளங்கப்படுத்தினார்கள். விரிவுரையாளர் பாலசுகுமார் நாடகப் பிரதியாக்கம் குறித்தும், நாடக நடிப்பு பற்றி விரிவுரையாளர் கே. விமல்ராஜ்ஜும், நாடக நெறியாள்கை பற்றி சி. ஜெயசங்கரும் கருத்துக்களை வழங்கினர்.

மதிய உணவிற்கு முன்னர் அனைவரது சோர்வையும் போக்குவதற்காக சிறு உள்ளக விளையாட்டுக்கள் நடத்தப்பட்டன.

மதிய உணவைத் தொடர்ந்து மேடை நாடக நடனம், நாடக ஒப்பனை, மேடை அவதானிப்புக்கள் குறித்து விளக்கப் பட்டது. நாடகத்தின் போது மேடைக்கு வழங்கப்படும் ஒளியமைப்புப் பற்றிய கை நூல்களை சட்டத்தரணியும், முன்னாள் கலைக்கழகத் தமிழ் நாடகக்குழுத் தலைவரு மான கா. சிவபாலன் வழங்கினார்.

மாலை நேர குளிர்பான, சிற்றுண்டிகளைத் தொடர்ந்து நாடகக் கலைஞர்கள் சிலர் கௌரவிக்கப்பட்டனர். இறுதியாக நாடகக் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

— வாகீசன்.



அண்மையில் தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற ஸ்ருதி — லய — அபிநய நிகழ்வில் சென்னை கலாஷேத்திர மாணவி ஜொசிதா பீற்றரின் நடனத்தோற்றத்தையே இங்கு காண்கிறீர்கள்.

# 'உதிரவேர்கள்' யுத்தத்தால் கிடைத்த ஆக்க இலக்கியம்




## நூல் விமர்சனம்

யுத்த வேள்வியில் ஆகுதியாகிக் கொண்டிருக்கும் எமது மண்ணின் மக்களைப் பற்றிப் பேசும் இன்னொரு சிறுகதைத் தொகுப்பு ஒன்று வெளிவந்துள்ளது. அதுதான் 'உதிர வேர்கள்'.

யுத்தம் விழுங்கிய பூமியின் கோரச் சுவடுகள் ஓவியர் முத்து இராதாகிருஷ்ணனின் கைவண்ணத்தில் சிறுகதைகளாகப் பரிணமித்துள்ளன.

நூலுக்கு வாழ்த்துரையை மேலதிக செயலாளர் எஸ். தில்லைநடராஜாவும் முன்னுரையை பேராசிரியர் கா. சிவத்தம்பியும் வழங்கியுள்ளனர்.

வழிந்துபோன வாழ்க்கையும் அந்த ஓவியக்களமும், வீடுபேறு, தர்மச்சக்கரம், ஒருமுடல் மட்டும், உதிரவேர்கள், பயணத்தில் பதிந்த கண்கள், அந்தப் பெட்டைக் குட்டிகள், வலி, கறுப்புச் சப்பாத்து என்ற ஒன்பது சிறுகதைகள் கொண்ட தொகுப்பு திருகோணமலை மதுஷா வெளியீடாக வெளிவந்துள்ளது.

யுத்த இடப்பெயர்வினால் ஏற்பட்ட உளவியல் பாதிப்பினை முதல் இரண்டு சிறுகதைகளில் காணலாம். யுத்தத்தின் கொடூரம் மானிட உணர்வுகளை எவ்வளவு தூரம் கொந்தளிக்க வைக்கிறது என்பதற்கு, உதிர வேர்கள் சிறந்த எடுத்துக்காட்டு. இது மட்டுமல்லாது, மொழியின் உயிர்த்துடிப்பு ஓவியமாக நீண்டு செல்லும் தரம் மிக்க கலைப்படைப்பாகவும் இச்சிறுகதை திகழ்கிறது. ஈழத்தின் சிறந்த சிறுகதைகளின் வரிசையில் 'உதிரவேர்கள்' நிச்சயம் இடம் பெறும்.

'வலி', சிறுகதை புதுமைப் பித்தனையும், குபராவையும் நினைவுபடுத்தி நவீனத்துவத்தின் எல்லையையும் கடக்க முயல்கிறது!

அட்டைப்படம் உட்பட ஒவ்வொரு சிறுகதைக்கும் தானே ஓவியம் வரைந்துள்ளார் ஆசிரியர்.

இராதாகிருஷ்ணனின் இதய ஆழத்தில் இருந்து எழும் உளநேர்மையை 'அந்தப் பெட்டைக் குட்டிகள்' சிறுகதை வெளிப்படுத்தி நிற்கிறது.

பேராசிரியர் கா. சிவத்தம்பி தனது முன்னுரையில்:

''இராதாகிருஷ்ணனிடத்தில் அல்லல்களை அவலங் களை நுண் உணர்திறனுடன் இனங்கண்டு கொள்ளும் ஒரு சமூக நோக்கு உள்ளது. போர்ச்சூழலையும், வாழ்க்கையில் காணும் சாதாரண சம்பவங்களையும் நுணுக்கமாக அவதானிக்கும் சக்தியும் உள்ளது'' என்கிறார்.

நேர்மையான படைப்பாளிக்குரிய இதய சுத்தியும், 'சிறுமை கண்டு பொங்கும்' மனப்பாங்கும் இராதாகிருஷ்ணனின் சிறுகதைகளில் வெளிப்பட்டிருக்கும் முக்கிய அம்சங்கள்.

மொத்தத்தில் உதிர வேர்களிலிருந்து பெரியதொரு விருட்சம் ஈழத்துச் சிறுகதைக்கு நிழலாக அமையப் போகிறது. அத்துடன் இத்தொகுப்பு ஒரே நேரத்தில் கவிதையாகவும், ஓவியமாகவும், சிறுகதையாகவும் ஒவ்வொருவரின் மனதிலும் இடம் பிடிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

கொடிய யுத்தமானது கோர அனர்த்தங்களோடு உயிர்ப்பான ஆக்க இலக்கியங்களையும் ஈழமண்ணுக்கு அள்ளித் தருகிறது என்றே சொல்ல வேண்டும்.

— சூரியா



# குடி தண்ணீர் வண்டிகள் குறைதீர்க்கும் விந்தை

தமிழ் நாட்டில் கடும் வரட்சியினால் மிகவும் மோசமான தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. சென்னைக்கு வெளியூரிலிருந்து ரயிலிலும், லொறிகளிலும் தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. லொறிகளிலிருந்து தாங்கிகளுக்கு தண்ணீர் நிரப்பப்படும் போது வீதியில் தண்ணீர் சிந்தி தேங்கியிருக்கும். அவ்விதம் தேங்கி நிற்கும் தண்ணீரை வீணாக்காமல் துணிகளைத் துவைத்துக் கொள்கிறார்கள் சில புத்திசாலிகள். அவர்களின் குறைகளையும், குடிதண்ணீர் வண்டிகள் தீர்த்து வைப்பது விந்தைதான்.



# ஒட்டிப் பிறக்காத அதிசய அழகிகள்


பல்கேரியா நாட்டில் அழகியர் கலந்து கொண்ட ஒரு ஆடை அணிகலன் கண்காட்சி நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட இந்த அழகியர் இருவரும் அனைவரையும் கவர்ந்தனர். இவர்கள் இருவரும் இரட்டைப் பிறவிகள். ஆனால் ஒட்டிப் பிறக்காத இரட்டைப் பிறவிகள். ஆயினும் ஒட்டிப் பிறந்தவர்கள் போல உருவகப்படுத்தி ஆடை அணிந்து வந்தனர். இவர்கள் ஒட்டி ஒட்டி நடந்தது அனைவரையும் கவர்ந்தது.

## மசாலா mix



# சண்டைக் கோழிக்கு கண்கட்டு வித்தைகள்

கோழிகளை பந்தயத்தில் சண்டையிட வைத்து பணம் திரட்டுவதில் குறியாக இருப்பார்கள் சிலர். தமிழகத்தில் சில கோயில் திருவிழாக்களில் சேவல் கோழிகளை மோத விட்டு பந்தயம் பிடிப்பார்கள். ஆனால் கோழிப்பண்ணைகளில் சேவல்கள் ஒன்றுடன் ஒன்று மோதிப் பலப் பரீட்சை நடத்துவது இயற்கை. சேவல்கள் இவ்விதம் மோதிக் கொண்டால் முட்டையிடும் பேட்டுக் கோழிகள் பாதிக்கப்படும். எனவே சேவல்களுக்கு கண்ணாடி அணிவித்து அவற்றைச் சாதுவான சேவல்களாக வளர்க்கிறார்கள் சிலர். இந்தக் கண்ணாடியை அணிந்த சேவலுக்கு அதன் உணவுதான் கண்ணில் படும். எதிரியின் முகம் தெரியாது எனவே மோதல் இல்லை.



# ஒளிந்திருக்கும் முகம் எது?

ஜூன் 24, சுடர்ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை ஜோதிகாவினுடையது சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு.

1. சுசகானா கிறிஸ்டிபோல், தலவாக்கலை.
2. எஸ்.பஸ்லுங் ஹக், அக்கரைப்பற்று—05.
3. எம்.மருதகாசி, வத்தளை.

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுகள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (01.07.2001) மசாலாமிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகர் யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் பெயர், விவரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது? தமிழ் பட உலகை ஆளவந்தவர் என்று கூறிக்கொள்பவர். மகாராணி முன்னிலையில் படம் எடுத்தவர்.



இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர்ஒளி'
36/2, பிரெட்ரிக்கா வீதி
கொழும்பு — 06.

# ஒட்டகக் கழுத்து பெண்ணுக்கு அழகா?

கிழக்கு மியன்மார் நாட்டுப் பெண்கள் ஒட்டகம் போன்ற நீண்ட கழுத்துடன் காட்சி தர விரும்புகிறார்கள். இதன் காரணமாக இளம் வயதிலேயே இவர்களின் கழுத்தில் உலோக வளையல்கள் பொருத்தப்படுகின்றன. வளையல்கள் அதிகரிக்கும் அளவுக்கு அவர்களின் கழுத்து நீளமாக வளர்ந்து விடுகிறது. இதனால் இவர்களின் கழுத்து வலு அற்றதாக ஆகி விடுகிறது. அந்நிலையில் வளையல்களின் துணை இல்லாமல் தலையைத் தாங்க முடியாத நிலை கழுத்துக்கு ஏற்பட்டுவிடும். 40 செ.மீ நீளத்துக்கு இவ்வாறு கழுத்தை நீட்டி வளர்த்து ஒரு பெண் 'கின்னஸ்' சாதனை நிலை நாட்டியிருக்கிறார்.





# மரதன் ஓட்ட வீரர்களால் மகிழும் காட்டு மலர்கள்

காட்டு மலர்கள் அழகானவை. எவ்வித இயற்கைக் கெடுபிடிகளையும் தாக்குப் பிடிக்கக்கூடியவை. மரதன் ஓட்ட வீரர்கள் புற்றரைகளில் ஓடிப் பயிற்சி பெறும் வேளைகளில் அவர்களின் கால்களால் மிதிபட்டு எத்தனையோ காட்டு மலர்கள் கசங்கிப் போய் விடுவதுண்டு. ஆயினும் அவற்றின் மலர்ச்சி குன்றி விடுவதில்லை.

# பயணிகளைச் சாகடிக்கும் சோதனைச் சாவடிகள்

## திருமலை முதல் கல்முனைவரை கெடுபிடிகள்!!

எமது நாட்டில் இனமோதல், அப்பாவிகள் அழிவு, பொருளாதாரச் சீரழிவு, பொதுவுடைமை அழிப்பு, பாலியல் வன்முறை என்று நீண்டு கொண்டு போகும் பட்டியலில், காவலரண்களிலும் தடை முகாம்களிலு முள்ள கெடுபிடிகளையும் சேர்த்தேயாக வேண்டும்.

இந்த கெடுபிடிகள் இலங்கையில் தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு—கிழக்குப் பகுதிகளில் அதிகமாகக் காணப் படுகின்றன.

திருமலை முதல் கல்முனைவரை மட்டக்களப்பு வீதியில் அமைந்துள்ள சோதனைச் சாவடிகளில் பயணிகள் படும் பாடு பெரும்பாடாக இருக்கிறது.

திருமலையில் இருந்து கல்முனைக்கு செல்லும் தூரம் 176 கிலோ மீற்றர்.

சாதாரணமாக ஐந்து மணித்தியாலங்களில் இந்த பயண த்தை முடித்துக் கொள்ள முடியும். ஆனால் இப்போது சோத னைச் சாவடிகளில் கெடுபிடிகள் அதிகரித்திருப்பதால் பத்து மணித்தியாலங்கள் வரை செலவிடவேண்டி இருக்கிறது.

காலை 6.30 மணிக்கு திருமலையில் இருந்து புறப்பட் டால் மாலை 4.30 மணிக்கே கல்முனையை அடைய முடியும்.

திருமலையில் இருந்து கல்முனைவரை தடை முகாம்கள், காவலரண்கள், சோதனைச் சாவடிகள், எல்லைப்படை முகாம்கள், தனித்த படையினர் முகாம் கள் என 72 காவல் நிலையங்கள் உள்ளன.

இவற்றில் பொலிஸ் நிலையங்கள், வீதி ஓரங்களில் காணப்படும் தனித்தனி காவலரண்கள் சேர்க்கப்பட வில்லை. திருமலை பஸ் நிலையத்தில் இருந்து அலுத் தோயா (கித்துளுத்துவ முகாம்) முகாம் வரை 20 காவல் நிலையங்கள் உள்ளன. ஆனாலும் 5 காவல் நிலையங்களே திருமலையில் இருந்து ஹபரண ஊடாகப் பயணம் செய்வோருக்குத் தலையிடியைக் கொடுக்கின்றன.

திருமலை பஸ் நிலையத்துக்குள் நுழையும் போதே சோதனை என்ற பெயரில் 'சோதனை' ஆரம்பமாகிறது. சோதனை அல்ல. ''தலையிடி'' என்று சொல்வதே சிறந்தது.

அடுத்த சோதனைச் சாவடிக்கு ஒரு கிலோ மீற்றர் கூட இடைவெளி இருக்காது. மீண்டும் ஒரு முறை இறங்கி ஏற வேண்டும். பயணிகளின் நிலை எப்படியிருக்கும்?

சாரதாபுர பொலிஸ் காவல் நிலையத்தை (6 ஆம் கட்டை — வைரவ ஊற்றுப் பிள்ளையார் கோயில் காவல் நிலையம்) பயணிகளுக்கு ''பாதை திறக்கும்'' வரத்தைக் கொடுக்கும் சோதனைச் சாவடி என்று சொல்லலாம்.

அதிகாலை 5 மணிக்கு வரும் வாகனம் கூட, காலை 8 மணி கடந்தும் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கும்.

மேற்கொண்டு பயணத்தைத் தொடங்குவதற்கு பாதை "கிளி யர்" என்ற செய்தி கிடைத்த பின்பே வழி திறந்து விடப் படுகின்றது. அதுவும் சும்மாவா? அத்தனை பயணிகளை யும் இறக்கி அவர்களையும் வாகனங்களையும் சல்லடை போட்டு சோதனையிட்ட பின்பே செல்ல அனுமதிக்கின்றனர்.

ஹபரண, பொலனறுவை, மட்டக்களப்பு, கல்முனை, அக்கரைப்பற்று, கொழும்பு, கண்டி மற்றும் திருமலை எனப் பல இடங்களுக்குச் செல்வதற்காகப் புறப்பட்ட அரச, தனியார் பயணிகள் வாகனங்கள், தனியார் வாகனங்கள், லொறிகள், வியாபார வாகனங்கள் என ஒரு தொகையான வாகனங்கள் காத்துக்கிடப்பதும், சிறுவர்கள், நோயாளர்களின் அழுகைக் குரலும் நெஞ்சை விட்டு நீங்காத காட்சிகள்.

முள்ளிப்பொத்தானை தடை முகாம் வேறொரு வகையில் பயணிகளுக்கு துன்பத்தைத் தருகின்றது.

வெளி இடங்களில் இருந்து திருமலை நோக்கி இரவுப் பயணம் மேற்கொள்வோர் இரவு எத்தனை மணியானாலும் இங்கு தடுத்து நிறுத்தப்பட்டு மறுநாள் காலை 8 மணிக்குப்



சோதனைச் சாவடி ஒன்றில் தவம் கிடக்கும் வாகனங்கள்

பிற்பாடே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

அதிகாலை இரண்டு மணிமுதல் காலை எட்டு மணிவரை ஆறுமணித்தியாலங்கள் ஒரு சோதனைச் சாவடியில் மழை, பனி, குளிர், நுளம்பு என்று பல தொல்லைகளை அனுபவிப் பது என்பது பயணத்தையே வெறுக்கச் செய்து விடும்.

கித்துளுத்துவ 84 ஆம் கட்டை சோதனைச் சாவடியில் நோயாளிகள், முதியோர், கர்ப்பிணிப் பெண்கள் என்று பாரபட்சம் பார்க்காமல் பயணிகள் அனைவருமே சோதனை யிடப்படு கின்றனர்.

பெயர், அடையாள அட்டை இலக்கம் என்பவற்றோடு எங்கி ருந்து வருவது? எங்கு செல்வது போன்ற விவரங்களையும் பதிவு செய்த பின்பே செல்ல அனுமதி அளிக்கப்படுகிறது.

சோதனைச்- சாவடிகளில் வேதனைச் சுமைகளை சுமந்து தவிப்போர் மன்னம்பிட்டி சோதனைச் சாவடியை மறந்திருக்க நியாயமில்லை.

ஒரு துரும்பையும் விடாது வாகனங்களை வேறாகவும், பொதிகளை வேறாகவும் ஆட்களை வேறாகவும் பிரித்து தேடுதல் எனும் பெயரில் குடைந்து எடுத்து விடுவார்கள் படையினர்.

கர்ப்பிணிப் பெண்கள், கைக்குழந்தைகள், பெண்கள் முதியவர்கள் , நோயாளிகள், சிறுவர்கள், மதகுருமார் என்று பல தரப்பினரையும் சோதிப்பதில் — சோதனைக்குள்ளாக்குவ தில் இங்கு கடமைபுரிபவர்களுக்கு அலாதிப் பிரியம். இது பற்றி எந்த அரசியல்வாதியும் குரலெழுப்பியதாகத் தகவல் இல்லை.

நீண்டு கொண்டே போகும் சோதனைச் சாவடிகளின் கெடுபிடிகளை எழுத்தில் அடக்க முடியாது. மன்னம் பிட்டி முதல் கல்முனை வரை 12 க்கு மேற்பட்ட இடங் களில் சோதனைகள் நடைபெறுகின்றன.

பாதை திறந்து விடப்படாத நிலையில் ஊர் வீதிகளால் பயணம் செய்வதை நினைத்தால் பயணமே வெறுத்து விடும்.

ஒற்றையடிப் பாதை போன்ற உள் வீதிகளில் ஒரு வாக னம் நுழைந்தால் அது குறிப்பிட்ட எல்லையைக் கடக்கும் வரை மறுபக்கத்தில் எந்த வாகனமும் நுழைய முடியாது.

நுழைந்தால் ஒன்றில் விபத்து அல்லது எவராவது ஒருவர் பின்நோக்கிச் செல்ல வேண்டும். இந்தச் சிரமமும், தாமதமும் பல இடங்களில் நிகழ்ந்த வண்ணம் உள்ளன.

திருமலை முதல் — கல்முனை வரை 72 காவல் நிலையங்கள் உள்ளன. இவற்றில் முப்படையினரின் முகாம்கள் —29 படையினரின் காவல் நிலையங்கள் — 26 சோதனைச் சாவடிகள் — 17.

இவற்றில் பொலிஸ் நிலையங்கள், உள்வீதிகளில் அமைந்துள்ளன. முகாம்கள், தனி அரண்கள் என்பன சேர்க்கப்படவில்லை.

சோதனைச் சாவடிகளில் சோதனைகள் மேற் கொள்ளப் படுவதோடு வாகனங்களையும் பதிவு செய்கின்றனர். இதனால் மேலும் தாமதம் ஏற்படுகின்றது. போதாக் குறைக்கு படையினரின் கடும் வார்த்தைகள் பயணிகளை எரிச்சலடையச் செய்கின்றன.

சில இடங்களில் அரைக் கிலோ மீற்றருக்கு ஒரு சோதனைச் சாவடி என அமைத்து பிரயாணிகளை வாட்டுகின்றமையை காணக்கூடியதாக உள்ளது.

இத்தகைய குறைகளை முற்றாக நிறுத்தாது விட்டாலும் ஓரளவுக்குக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கமும் படையினரும், தமிழ்க் கட்சிகளும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

திருமலையில் இருந்து கல்முனை செல்வோர் பாடு இதுவென்றால் அக்கரைப்பற்று, பொத்துவில், அம்பாறை ஆகிய இடங்களுக்குச் செல்வோர் பாடு எப்படி இருக்கும்?

மொத்தத்தில் சோதனைச் சாவடிகள் பிரயாணிகளைத் தான் சாகடிக்கின்றன.

— எஸ்.எஸ்.ஆர்

# ராசி பலன்

**08.07.2001 முதல் 14.07.2001 வரை**

**பொ.சந்திரன்.**

மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

இராசிநாதனை சுக்கிரன் பார்ப்பது விசேஷம். சனிபார்ப்பது நல்லதல்ல. எடுத்த காரியங்கள் தடைப்படலாம். கையில் பணம் தங்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரச்சிறப்பு உண்டு. வீடு, வாகனம் செலவை உண்டாக்கலாம். உறவினருக்குள் விரிசல் ஏற்படலாம். தேக ஆரோக்கியம் சிறிது பாதிக்கலாம். தொழில்துறை முன்னேற்றம் உண்டு. நண்பர்களால் பண விரயம் ஏற்படும்.

இடபம் : கார்த்திகை2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2

இராசிநாதன் ஆட்சியாய் இருப்பது விசேஷம். எடுத்தகாரியம் வெற்றியில் முடியும் .செவ்வாயின் பார்வை நன்மை செய்யும். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும் .உறவினர் விசுவாசமாய் இருப்பர். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறை முன்னேற்றம் உண்டு. நண்பர்களால் உதவி இருக்கும். திருமணப்பலன் உண்டு.

மிதுனம் : மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

இராசிநாதன் இராசியில் ஆட்சியாக இருப்பதால் எடுத்த கரியம் நல்லபடியாக நிறைவேறும். மேலும் பக்கபலமாக மூன்று கிரகங்கள் இருப்பது சமசுகம். பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையலாம். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனங்களால் இலாபம் இருக்கும். தேக ஆரோக்கியம் நன்று. தொழில் துறையில் பொறுப்புக்கள் அதிகமாகும். மனக்கஷ்டம் இருக்கும். நண்பர்களால் தொல்லை இருக்கும்.

கடகம் : புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.

இராசிநாதன் ஏழாம் இராசி முதல் பத்தாம் இராசி வரை சஞ்சாரம் செய்வது விசேஷம். சனியின் பார்வை இராசிக்கு கிடைப்பது [illegible] பலனைக் கொடுக்கும். பணத்தட்டுப்பாடு இருக்கும் . கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனங்களால் இலாபம் உண்டு. உறவினர் விசுவாசமாக இருப்பர். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு.

சிங்கம் : மகம், பூரம், உத்தரம் 1

இராசிநாதன் ஆட்சி பெற்ற புதனுடன் லாப ஸ்தானத்தில் குரு, ராகுவுடன் இருப்பது விசேஷம். எடுத்த கருமங்கள் வெற்றியில் முடியும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு வாகனங்களால் வருவாய் இருக்கும். உறவினர் விசுவாசமாக இருப்பர். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும் .வெளிநாட்டுப்பிரயாண வாய்ப்பு உண்டு .

கன்னி : உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2

இராசிநாதன் முயற்சி ஸ்தானத்தில் ஆட்சியாக இருப்பது விசேஷம். குரு, சூரியன், ராகு அங்கு இருப்பது மேலும் பலத்தை அதிகரிக்கும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும் .சகோதரச் சிறப்புண்டு. வீடு, வாகனங்களால் லாபம் உண்டு. உறவினர் அன்பாய் இருப்பர். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும்: தொழில்துறை முன்னேறும். நண்பர்களின் உதவி உண்டு.

துலாம் : சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3

இராசிநாதன் தனது இன்னுமொரு இராசியில் ஆட்சியாக இருப்பது விசேஷம். சனி, செவ்வாய் தொடர்பு நன்மையே செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனங்களால் செலவுக்கு இடமுண்டு. உறவினர் விலகி இருப்பர். உடல் ஆரோக்கியம் நன்று. தொழில் துறையில் சில பிரச்சினைகள் வர வாய்ப்புண்டு. திருமணப்பேச்சு வெற்றியாய் அமையும்.

விருச்சிகம் : விசாகம் 4, அனுஷம், கேட்டை

இராசிநாதன் ஆட்சியாய் இருப்பது விசேஷம். சுக்கிரன், சனியின் பார்வை நன்மையே செய்யும். பணத்தட்டுப்பாடு வரலாம். கல்வியில் ஆர்வம் குறையலாம். சகோதரச்சிறப்பு இருக்கும். வீடு, வாகனங்களால் லாபம் உண்டு. உடல் ஆரோக்கிய மாக இருக்கும். தொழில் துறையில் சில பின்னடைவுகள் ஏற்படும். நண்பர்களால் தொல்லை வரலாம். பிரயாணத் திற்குத் தற்காலிகத் தடை இருக்கும்.

தனு : மூலம், பூராடம், உத்தராடம்1.

இராசிநாதன் இன்பத்தானத்தில் இருப்பது நலம். மேலும் நல்லதும் கெட்டதுமான கிரகங்கள் அங்கு இருப்பதால் முன்னேற்றத் துக்கு சிறு தடை இருக்கும். பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையலாம். வீடு, வாகனங்களால் லாபம் உண்டு. தேகசுகம் சிறிது பாதிக்கலாம். திருமண வாய்ப்பு, பிரயாண வாய்ப்பு உண்டு. தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு.

மகரம் : உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2.

இராசிநாதன் ஆட்சி பெற்ற சுக்கிரனோடு புண்ணிய ஸ்தானத்தில் இருப்பது விசேஷம். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனங்களால் இலாபம் உண்டு. உறவினர் விசுவாசமாக இருப்பர். உடல் ஆரோக்கியமாக இருக்கும். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும். நண்பர்களால் உதவி இருக்கும். பிரயாண வாய்ப்பு பிரகாசமாக இருக்கும்.

கும்பம் : அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3

இராசிநாதன் சுபஸ்தானத்தில் ஆட்சி பெற்ற சுக்கிரனு டன் இருப்பது விசேஷம். குரு, சனி ஆகியோர் இராசியைப் பார்ப்பது நலம். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனம் இலா பம் தரும். உறவினர் விசுவாசமாக இருப்பர். உடல் ஆரோக்கியமாக இருக்கும். தொழில்துறை முன்னேறும். புதிய தொழில் வாய்ப்பு உண்டு. திருமண வாய்ப்பு உண்டு.

மீனம் : பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

இராசிநாதன் சுபஸ்தானத்தில் நல்லதும் கெட்டதுமான கிரகங்களோடு இருப்பது சமசுகம். பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையலாம். வீடு, வாகனங்களால் வரவும், செலவும் சமமாக இருக்கும். உறவினர் விசுவாசமாக இருப்பர். உடல் ஆரோக்கியமாக இருக்கும். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும். பதவி உயர்வு இருக்கும்:

# செல்லம்மாவின் பயணம்

செல்லம்மா தன் பயணம் இப்படி ஆரம்பத்திலேயே குழம்பிப் போகும் என்று எ தி ர் பா ர் க் க வி ல் லை . எத்தனை கற்பனைகள், ஆசைகள்? அவளது மனதில் பொங்கி வழிந்த உற்சாகமெல்லாம் அப்படியே அமுங்கிப்போனது.

செல்லம்மா மற்றைய 'அம்மாக்கள்' போல் வெளிப் பயணங்கள் செல்பவள் அல்ல. அதுவும் வன்னியி லிருந்து குடும்பத்துடன் திரும்பி வந்த பிறகு.....

தானுண்டு தன் வேலையுண்டு என வீட்டோடு கிடப்பாள்.

வயதோ எழுபதுக்கு மேல் ஆகிவிட்டது. பல்லுகள் கெட்டியாகவே உள்ளன. கண்பார்வையும் பழுதில்லை. உடனே யாரையும் அடையாளம் கண்டுகொள்ளும். காதுகளும் அப்படியே!

நீண்ட காலத்துக்குப் பிறகு செல்லம்மாவின் உறவு பெண் ஒருத்தி நயினாதீவு நாகபூஷணி அம்மனைத் தரிசிப்பதற்கு ஆட்களைத் திரட்டத் தொடங்கினாள். இது செல்லம்மாவின் காதுகளுக்கும் எட்டியது.

வீட்டில் ஒரே கூப்பாடு. "அடியே பெட்டையள், எங்கட நரசிங்கத்தின்ர பெட்டை பூவெல்லே நயினாதீவுக்கு போக ஆக்களை சேர்க்கிறாளாம். உங்களைக் கேக்கேல்லையே. நான் போகப்போறன். அவள் வந்து கேட்டால் சொல்லுங்கோ. என்ர மனப்பாரத்தை அம்மாளிட்டத்தான் போய் இறக்கவேணும்".

செல்லம்மாவின் உற்சாகம் வீட்டில் உள்ளவர் களுக்கு ஆச்சரியமாகத் தெரிந்தது.

"லேசில ஆள் வெளியாலை வெளிக்கிடாது. இப்ப என்ன வந்தது?" மூத்தவள் கேட்டாள்.

"வன்னியில இருந்து வரேக்க சொன்னவவெல்லே அம்மாளிட்ட போக வேணுமெண்டு" இளையவள் சொன்னாள்.

"என்னணை போகப்போறியே, உன்னால போக ஏலுமே?" மருமகன் சந்தேகப்பட்டார்.

"என்ன அம்மம்மா நயினாதீவு போகப்போறியோ? அங்க போட்டில ஏறியெல்லே போகவேணும். போட்டில் போறது சரியான பயம் அம்மம்மா" பேரக்குழந்தைகள் செல்லம்மாவைக் பயம் காட்டினார்கள்.

செல்லம்மா ஒன்றுக்கும் பயப்படவில்லை. "நீங்கள் என்ன சொன்னாலும் நான் அம்மாளிட்ட போகத்தான் போறன். நான் வன்னியில இருக்கேக்க நேர்ந்த நேர்த்திக் கடனொன்று கிடக்கு. அதை முடிச்சுப்போட்டு வந்து சாவம்."

செல்லம்மாவுக்கு கண்கள் கலங்கின. செல்லம்மா வின் பேச்சு எல்லோரையும் உலுப்பியது.

"என்ன இது மனுசி படத்தில வாற கிளைமாக்ஸ் காட்சி மாதிரி வசனம் பேசுது. கடைசி நேரம் வந்துட்டுதோ..."

எல்லோருக்கும் நெஞ்சு படபடத்தது.

"ஏனணை உப்பிடிக் கதைக்கிறாய். நீ போறதெண்டால் நாங்களென்ன மறிக்கவே போறம்" எல்லோரும் பச்சைக் கொடி காட்டினார்கள். செல்லம்மா நயினாதீவு போக நாட்களை எண்ணிக்கொண்டு இருந்தாள்.

அன்றுதான் பொக்கிஷமாய் வைத்திருந்த அந்தப் பழைய சூட்கேசுப் பெட்டியை திறந்து ஒரு சோடி– சேலையும் சட்டையுமாகத் தெரிவுசெய்து தோய்த்துப் போட எண்ணினாள்.

மனதில் செல்லம்மா குமரியாக நின்றாள். இப்போது வீட்டுக்குள் இருக்க அவளுக்குப் பிடிக்கவில்லை. நாலு சனத்துக்கு, தான் அம்மனிடம் போகும் விசயத்தைப் போட்டு உடைத்தால்தான் நிம்மதியாய் இருக்கும் போல் இருந்தது.

எவ்வளவு காலத்துக்குப் பிறகு இந்தப் பயணம். செல்லம்மா படலையடியில் நின்று வெற்றிலையை மென்றுகொண்டு தெருவில் தெரிந்தவர்கள் போனால் வலிந்து சிரித்து பேச்சுக்கு இழுத்தாள்.

"என்ன செல்லம்மா ஆச்சரியமாய் கிடக்கு. வெளியில வந்து நிற்கிறாய்—"

"நான் நயினாதீவுக்கெல்லே போகப்போறன். பிள்ளையள் கூட்டிக்கொண்டு போகினம்" குழந்தையாக செல்லம்மா சொன்னாள்.

மூத்தவனுக்கு பதினைஞ்சு வயசில நேர்ந்த நேர்த்திக் கடனுக்கு போகேக்க 'போட்' ஆடின ஆட்டத்தில மூத்தவள் பயந்து கத்தினதை அவள் இப்போது மற்றவர்களுக்கு மலரும் நினைவுகளாக்கினாள்.

புதன்கிழமை காலை ஆறு மணிக்கு மினிபஸ் வருமென தகவல் வந்தது. வீடு நாலு மணிக்கே அமளி யானது. செல்லம்மா இரவு நித்திரை கொள்ளவில்லை. புரண்டு புரண்டு படுத்ததுதான் மிச்சம். பொழுது விடிந்தது. தூரத்தில் வெடித்த ஷெல் சத்தத்தோடு எல்லோரும் ஆயத்தமாகி நின்றார்கள்.

செல்லம்மாவிடம் அயலார் வரும்போது கைக்கு கட்ட நூல் வாங்கி வரும்படி சொல்லியிருந்தார்கள்.

மறக்காமல் வாங்கிக் கொண்டு வரவேணும்.

ஆறரை மணிக்கு வீட்டு வாசலில் நின்ற மினிபஸ் சனத்தினால் நிரம்பி வழிந்தது.

"நரசிங்கத்தாற்றை மகள் கெட்டிக்காரிதான். நல்லாத்தான் ஆக்களை சேர்த்துப்போட்டாள்"

எணேய் இங்க வாரணை. இந்த ஜன்னல் பக்கமாய் இரணை"

ஜன்னல் பக்கமாய் இருந்த செல்லம்மாவுக்கு மகிழ்ச்சியில் தலைகால் புரியவில்லை.

எல்லோரும் ஏறிவிட்டார்கள். பஸ் புறப்பட்டது. வயது போனவர்களைத் தவிர மற்றவர்கள் நின்று கொண்டிருந் தார்கள்.

வன்னியில் இருக்கும் போது நேர்ந்த நேர்த்திக்கடன், இப்போது நிறைவேறப் போகிறதென்பதை நினைத்து அவள் அமைதி யடைந்தாள்.

விரைந்து ஓடிய பஸ் முதலாவது சோதனைச் சாவடியில் தனது வேகத்தைக் குறைத்தது. "இளம் ஆக்கள் எல்லாம் கெதியாய் இறங்கிப் போங்கோ. வயசான ஆக்கள் மாத்திரம் இருங்கோ. கையில அடை யாள அட்டையளை எடுத்து வைச்சுக் கொள்ளுங்கோ.

மினிபஸ் சாரதி சொல்லி முடித்தபோது பச்சை உடுப்புடன் பஸ்சில் உள்ளே ஏறியவன் ஒவ்வொருவரினதும் அடையாள அட்டைகளை வாங்கிப் பார்த்துக்கொண்டு வந்தான.

பொறுமையாக நிதானமாக தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை (ஆமி ஐசி) இரண்டையும் மிக அவதானமாகப் பரிசோதித்தான்.

இப்போது செல்லம்மாவின் பக்கம் வந்தான். செல்லம்மா நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

"அம்மா ஐசி எடுங்கோ" அவள் நீட்டினாள்.

"இது நஷனல் ஐசி. ஆமி ஐசியை எடுங்கோ" செல்லம்மா திடுக்கிட்டாள். பின்னந் தலையில் யாரோ பலமாக அடித்தது போன்ற வலி.

"அம்மா ஆமி ஐசியை எடுங்கோ" அவன் அதட்டினான்.

"ஆமி ஐசி எடுக்கேல்ல"

தான் வயசு போனவள் தானே எனப் பிள்ளைகள் ஆமி ஐசி எடுக்காமல் இருந்தது செல்லம்மாவுக்கு ஞாபகம் வந்தது.

"எங்கே ஆமி ஐசி" அவன் மறுபடியும் உலுக்கினான்.

மடியில் வைத்திருந்த தண்ணீர் போத்தல் நழுவி கீழே விழுந்தது.

"யாரோட வந்தது?" அவன் கேட்டான்.

பிள்ளைகள் உள்ளே வந்தார்கள். அவர்களைக் கண்டதும்.

"என்ன பிள்ளையள் நீங்கள் ஆமி ஐசி எடுக்காமல் இவ்வளவு நாளும் இருந்திருக்கிறியள்" பஸ் சாரதி புறுபுறுத்தார்.

"வயது போனவதானே எண்டு இருந்திட்டம்"

"ஆமி ஐசி முக்கியமெண்டு தெரியுமெல்லே. வழியில இன்னும் கனக்க சென்றிகள் கிடக்கு"

"ஒவ்வொண்டி லையும் நோண்ட வெல்லே போறாங்கள். ஐசி இல்லாட்டி கிழவியை வீட்டில விட்டிட்டு வந்திருக்கலாம். கிழவியால எல்லா சென்றியிலையும் பிரச்சினை வரப்போகுது"



- சி. கதிர்காமநாதன் -

செல்லம்மா வுக்குக் கண்கள் இருண்டு வந்தன. உடம்பு வேகமாக நடுங்கியது.

"இன்னும் சென்றியில நோண்ட வெல் லே போறாங்கள். சாரதி சொன் னது காதில் முட்டி மோதி எதிரொலித்தது. செல்லம்மா சீற்றில் கை களைப் பலமாக ஊன்றிக் கொண்டு எழுந்தாள்.

"எணோய் இரணை பஸ் வெளிக்கிடப் போகுது. இப்ப ஏன் எழும்பு றாய்?"

"பிள்ளையள் பஸ்சை நிப்பாட்டுங்கோ. நான் கோயிலுக்கு வரேல்ல. வீட்ட போகப் போறன்"

செல்லம்மா முகத்தில் வியர்வை வழிந்தோடச் சொன்னாள்.

"என்னணை அலம்புறாய். பேசாமல் இரணை"

"ஐயோ என்னை இறக்கி விடுங்கோ. நான் வரேல்ல. நான் வீட்டபோறன்"

* * *

விசேட அடையாள அட்டையின் மகத்துவம் செல்லம்மா வுக்கு இப்போதுதான் புரிந்தது. இவ்வளவு காலமும் அசட்டை யாய் எடுக்காமல் இருந்ததை நினைக்க உடல் நடுங்கியது.

"கடவுளே உவளவையும் பேசாமல் இருந்திட்டாளவை. நல்லகாலம் நான் தூர இடம் எங்கையும் போகாததால இவ்வளவு நாளும் தப்பி இருந்திட்டன். கெதியா ஆமி ஐசி எடுத்துப் போட வேணும்.

அவள் ஆத்திரத்துடன் பிள்ளைகளை திட்டித் தீர்த்தாள்.

இரவில் நித்திரையில் "பச்சை உடுப்புடன் இருவர் வந்து செல்லம்மாவை மிரட்டுவது போல் இருந்தது. அவள் பயந்து அலறினாள்.

ஆமி ஐசிக்கு மூன்று படங்கள் எடுக்க செல்லம்மாவை ஸ்ருடியோவுக்கு கூட்டிக்கொண்டுபோய் எடுத்துக்கொண்டு வந்தார்கள். வழியில் சந்தித்த எல்லோரிடமும் ஐசிக்கு படம் எடுத்துப்போட்டு வாறதாக பெருமைபடக் கூறினாள்.

"ஏன் செல்லம்மா இவ்வளவு நாளும் எடுக்காம இருந்தனீ..... உவளவை என்ன செய்தவளவை. உது எடுக்காமல் இனிமேல் வெளியில போகாதை"

செல்லம்மாவை அவர்கள் மேலும் பயப்படுத்தினார்கள்.

அடுத்த சில நாட்களில் ஐசிக்கான மூன்று படங்கள் கைக்கு வந்தன. செல்லம்மா படத்தைப் பார்த்து ஆனந்த மடைந்தாள். பழைய நினைவுகள் இப்போதைய யாழ்ப் பாணத்து மாரி போல் இடை இடையே வந்து மறைந்தன.

அடுத்த கட்டமாக கிராம சேவகரிடம் போய் படத்தைக் கொடுக்க, இவ்வளவு காலமும் அடையாள அட்டை எடுக் காததற்காகத் தன் பங்கிற்கு அவரும் நொந்து கொண்டார். காரணத்தை விளக்கிய கடிதமொன்றை இராணுவத் தினருக்கு எழுதிக்கொண்டு வருமாறு கூறினார்.

அடுத்த சில நாட்களில் கிராம சேவகர் தனது கடமைகளை முடித்து எல்லாவற்றையும் அவர்கள் கையில் கொடுத்து ஆமி காம்புக்குப் போகச் சொன்னார்.

காம்புக்குப் போனபோது அடுத்த சிக்கல் வந்தது. "அம்மா... நீங்க கையால எழுதிக்கொண்டு வந்திருக்கீங்க. தமிழிலை யும் நீங்க கடிதம் தரவேணும். அதாவது இங்கிலீசில மூன்று கொப்பி. தமிழில மூன்று கொப்பி. அதில உங்கட G.S சைன் பண்ணவேணும். பிறகு உங்கட AGA சைன் பண்ணவேணும். அதோட உங்கட நஷனல் ஐசியில மூன்று பமிலி போமில மூன்று கொப்பிகளும் எடுத்துக்கொண்டு வாங்கோ.

அந்த இராணுவ் சிவில் அதிகாரி அமைதியாகக் கூறினார். செல்லம்மாவுக்கும் மகளுக்கும் தலை சுற்றியது.

"உங்கட அசண்டையீனத்தைப் பாத்தியளே. இப்ப ஒண்டோடொண்டாய் அவங்கள் கேக்கிறாங்கள். அதைக் கொண்டு வா. இதைக் கொண்டு வா எண்டு. நாளைக்கு என்ர பல்லில ஒண்டையும் கேப்பாங்களோ தெரியாது" செல்லம்மா புலம்பினாள்.

"சரி வாணை யோசிச்சு என்ன செய்யிறது. வாற வழியில ஒருத்தர் டைப் அடிச்சுக்கொண்டு இருந்தவர். போய் விசயத்தைச் சொல்லி எல்லாக் கடிதங்களையும் அடிப்பம். பிறகு மற்றதைப் பார்ப்பம்"

மகள் செல்லம்மாவை அழைத்துக் கொண்டு வழியில் கண்ட டைப் அடிப்பவரிடம் போனாள், அவரிடம் விஷயத்தைச் சொன்னார்கள்.

செல்லம்மாவின் பெயரில் தொடங்கி அடையாள அட்டை நம்பர் ஈறாக இவ்வளவு காலமும் எடுக்காததிற்காக காரணம் காட்டி கடைசியில் அதனை சேர்த்தார். ... நானோ எனது குடும்பமோ அரசாங்கத்திற்கு எதிராக பயங்கரவாத நடவடிக் கைகளில் ஈடுபடவில்லையென உறுதிபடக் கூறுகிறேன்.

.... செல்லம்மா அவர் சொன்னதைக் கேட்டபடியே அப்படியே மயங்கிச் சரிந்தாள். "ஐயோ, என்ர அம்மா" என மூத்தவள் கத்தினாள்.

யாரோ சோடா வாங்க ஓடினார்கள்.

* * *

எல்லாம் முடித்து வீடுபோய் போட்டோ பிரதிகள் எடுக்க வேண்டியதை பிரதிகள் எடுத்து திங்கட்கிழமை கடமைக்கு வந்த கிராம சேவகரிடம் கடிதங்களைக் கொடுத்து கையொப்பம் வாங்கி அது முடித்த கையோடு பிரதேச செயலாளரிடம் (AGA) ஒப்பம் வாங்கி...

எல்லாவற்றையும் மூத்தவளே செய்து முடித்தாள். செல்லம்மாவை அவள் கூட்டிக்கொண்டு செல்லவில்லை.

செல்லம்மாவுக்கு இருந்த உற்சாகமெல்லாம் போய்விட்டது. தெருவில் பச்சை உடுப்புக்காரர்களைக் கண்டால் ஓடி ஒளிவாள்.

மூத்தவள் இராணுவ சிவில் அதிகாரியிடம் ஆவணங்களைக் கொடுத்தாள். அவற்றைப் பார்த்தவர், "எல்லாஞ் சரி போய் உங்கட அம்மாவை இங்க கூட்டி வாங்கோ. நாங்க கொஞ்சம் விசாரிக்க வேணும்...

மூத்தவள் தளர்ச்சியுடன் திரும்பினாள்.

"பிள்ளை எல்லாம் முடிஞ்சுதே" செல்லம்மா அவதிப்பட்டாள்.

உனனை காம்புக்கு வரட்டாம். கொஞ்சம் விசாரிக்க வேணுமாம்.

செல்லம்மாவின் உடல் அதிர்ந்தது. "எ..ன்..ன.. சொல்லுறாய்"

"அவங்கள் நீ குடுத்ததெல்லாம் உண்மையா என அறியத்தான் வரச் சொல்லுறாங்கள். நீ இந்த பைல்லில இருக்கிற எல்லாத்தையும் ஒருக்காப் படிச்சுப் பாரணை. பிறகு அவங்கள் கேள்வி கேக்கேக்க மாறிச் சொல்லக் கூடாது, நாளைக்குப் போவம்.

"பிள்ளை உடனே இங்க வராம வன்னியில ஏன் இருந்தனியெண்டு கேட்டால்..."

"அதையேன் நீ யோசிக்கிறாய். எல்லாத்தையும் குழப் பிப் போடாதே. அடிச்ச கடிதங்களை எடுத்துப் பார்".

கடவுளை தாலியக் கட்டின ஐசிக்கா வேண்டி படுறபாடு.

ஒரு மூலையில் சாய்மானக் கதிரையில் இருந்தபடி செல்லம்மா படிக்கத் தொடங்கினாள். எப்போது இடம் பெயர்ந்தது. வன்னியிலிருந்து எப்போது திரும்பி வந்தது. மாதங்கள், திகதிகள் எல்லாவற்றையும் மனப்பாடம் செய்தாள்.

மதியம் செல்லம்மாவுக்கு பசி எடுக்கவில்லை. நேரம் விரைந்து ஓட அவளுக்கு நடுக்கம் ஏற்பட்டது.

வன்னியில் யாரோட இருந்தனீ?

இயக்கத்தில் யாரும் இருக்கினமோ?

ஏன் உடன ஐசி எடுக்கேல்ல?

இரவு நித்திரை வரவில்லை. வந்தாலும் வழமையாக வருபவர்கள் வந்து அவளை மிரட்டினார்கள்.

செல்லம்மாவுக்கு மூச்சு வாங்கியது. வியர்த்துக் கொட்டியது.

போர்வையை உதறிப் போட்டுவிட்டு விளக்கைப் போட்டு பைல் கட்டை தூக்கினாள்.

..... நானோ எனது குடும்பமோ....

உறுதிபடக் கூறுகிறேன்.

விளக்கு வெளிச்சத்தில் பிள்ளைகள் முழித்தார்கள். "எணேய் போய் படணை விடிய வெள்ளன எழும்பவெல்லே வேணும்"

"எனக்கு நித்திரை வருகுதில்லை"

செல்லம்மா மறுபடியும் சாய்மனைக் கட்டிலில் சாய்ந்தாள்.

* * *

"தம்பி அம்மம்மாவை போய் எழுப்படா. இரா முழுக்க நித்திரை முழிச்சுப் போட்டு இப்ப விடிஞ்ச பிறகும் கிடக்கிறா"

"நீ போய் எழுப்பணை. எனக்கு பள்ளிக்கூடத்துக்கு நேரம் போகுது".

செல்லம்மாவை எழுப்பினார்கள். அவள் எழும்ப வில்லை. மடியில் கிடந்த படத்தில் இயக்கத்தில் இருக்கும் பேரனுடன் அவள் சிரித்தபடி நின்றாள். அவள் முகத்தில் தன் பேரனைக் காட்டிக் கொடுக்காத நிறைவு தெரிந்தது.

(யாவும் கற்பனை)

சுடர் ஒளி
சிறுகதை

# இன்று அர்ஜுனின் 'வேதம்'
## அசத்தலான காதல் அர்ஜுன்

விஜயகாந்த், பிரபு, முரளி, கார்த்திக் போன்ற நடிகர்கள் அறிமுகமான காலத்தில் உட்பிரவேசித்தவர் அர்ஜுன். ஆரம்பம் அசத்தவில்லையாயினும் எப்படியோ அவ்வப்போது தலைகாட்டி அர்ஜுன் என்ற நடிகர் திரையுலகில் இருக்கிறார் என்று ரசிகர்களுக்கு ஞாபகப்படுத்தினார்.

'சங்கர் குரு' பெயர் சொல்ல வைத்தது. ஆனாலும் பரபரப்பான ஒரு நிலை அர்ஜுனுக்குக் கிடைக்கவில்லை.

இப்படியே போனால் தாம் தாக்குப் பிடிப்பது கடினம்! என்று உணர்ந்து கொண்டவராக, ஏனைய படங்களில் இருந்து வித்தியாசமாக நாட்டுப்பற்றை வெளிக்காட்டும் வகையில் படங்களைத் தேர்ந்தெடுத்து நடிக்க ஆரம்பித்தார். 'சேவகன்', 'செங்கோட்டை', 'அடிமைச் சங்கிலி' என்று டைட்டில்களிலும் தேசப்பற்றை வெளிக்காட்டினார்.

சங்கருடன் அவர் இணைந்த 'ஜென்டில்மேன்' இளைஞர்களைக் கவர்ந்தது. தொடர்ந்து ஒரு நாள் முதல்வராக நடிக்கும் வாய்ப்பு அர்ஜுனுக்குக் கிடைத்தது. 'முதல்வன்' வெற்றி யில் திளைத்துக் கொண்டிருந்தவருக்கு 'வானவில்', 'ரிதம்' இதமான தென்றலாக வீசியது.



சாக்ஷி – அர்ஜுன் படம்: 'வேதம்'

அக்ஷன் காட்சிகளில் அடித்துத் தூள் கிளப்பியவர், 'அக்ஷன் கிங்' என்று பெயர் எடுத்து மக்கள் மனதில் நிறைந்தவர். நடிப்பதோடு மட்டும் நின்றுவிடாது, டைரக்ஷனிலும் தனது திறமையைக் காட்டிய அர்ஜுன் இப்போது காதல் ததும்ப கவர்ச்சி மயில்களோடு சேர்ந்து 'வேதம்' படத்தில் நடித்து வருகிறார்.

இதற்குக் காரணம் என்ன? இன்றைய நிலையில் தேச பக்திப் படங்கள் எடுபடாது என்று நினைத்தாரா? அல்லது வர்த்தக நோக்கமா?

கேள்விகளை வைத்துக் கொண்டு நாம் குழம்புவானேன். அக்ஷன் கிங் அர்ஜுனிடமே கேட்டு விடுவோமே? 'வேதம்' படப்பிடிப்பில் சாக்ஷியுடன் டூயட் பாடிவிட்டு அமர்ந்தவரை அணுகிப் பேச்சுக் கொடுத்தோம்.



சங்கவி – அர்ஜுன் படம்: 'அர்ஜுனா'

கே:— வணக்கம் ஸார்! டூயட் காட்சி போலிருக்கிறதே?

ப:— ஆமாம் 'வேதம்' படத்திற்கான பாடல் காட்சி.

கே:— 'வேதம்' படத்தைப் பற்றிக் கேள்விப் பட்ட செய்திகளிலிருந்து அது குடும்பப் படம் என்று நினைக்கிறோம். நாம் நினைப்பது சரியா?

ப:— சரி, இது ஒரு குடும்பக் கதை.

கே:— இதுவரை காலமும் தேசபக்திப் படங்களைத் தந்து கொண்டிருந்தீர்கள். திடீரென்று அக்ஷன்கிங் — அக்டிங் கிங்கானது எப்படி?

ப:— எந்த நேரமும் ஒரே மாதிரிப் படங்களைக் கொடுத்துக் கொண்டிருக்காமல் சிறிது மாறுபட்ட படமொன்றை . ரசிகர்களுக்குக் கொடுக்க நினைத்தேன் அவ்வளவே.

கே:— 'வானவில்' படத்தில் உங்களுடன் நடித்த அபிராமிக்கு வாய்ப்பு வாங்கித் தருவதாகக் கூறி ஏமாற்றி விட்டீர்கள் என்று அபிராமியே கூறியிருப்பது பற்றி..?

ப:—நான் அப்படி எதுவும் சொல்லவில்லையே.

கே:—'வேதம்' படத்தைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்?

ப:— குடும்பத்தில் கணவன் — மனைவிக்கிடையே இருக்க வேண்டிய அந்நியோன்யம் இல்லாமல் போனால் ஏற்படும் விளைவு என்னவென்பதை காதல் கலந்து சொல்லப் போகிறேன். புராணத்தில் நான்கு வேதங்கள். இப்போது ஐந்தாவதாக எனது 'காதல் வேதம்'. இதில் நானும் சாக்ஷியும் ஜோடி.

இன்னொரு ஜோடி திவ்யா உன்னி — வினீத்.

கே:— விஜயகாந்த், சரத்குமார் பரபரப்பாகி இப்பொழுதும் பேசப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கார்த்திக் , பிரபு போன்றோர் பரபரப்பாகி ஓய்ந்து பின்னர் பரபரப்பாகியிருக்கிறார்கள். நீங்கள் எந்த வகையிலும் சேராது சாதாரண நிலையிலேயே இருந்து கொண்டிருக்கிறீர்கள். இப்படி உயர்வுமற்ற தாழ்வுமற்ற நிலை ஏன்?

ப:— நல்ல கேள்வி கேட்டீர்கள். என்னைப் பொறுத்தவரைக்கும் நல்ல கருத்துக்கள் சினிமா மூலம் மக்களுக்குச் சொல்லப்பட வேண்டும். அதைத்தான் நான் செய்து கொண்டிருக்கிறேன். எனக்கு கிடைத்திருக்கும் நிலையே எனக்குப் போதும். அதிலிருந்து உயரவே நான் விரும்புகிறேன்.

கே:— இப்படிச் சொல்லும் நீங்கள் 'வேதம்' என்ற காதல் படத்தை எடுத்துக் கொண்டிருக்கிறீர்களே!

ப: 'காதல்' என்றால் தவறானது என்று ஏன் நினைக்க வேண்டும். நாடு நன்றாக இருப்பதற்கு வீடு நன்றாக இருக்கவேண்டும். அதைத்தான் வேதத்தில் சொல்லியிருக்கிறேன். 'வேதம்' கூறும் பாடத்தை மக்கள் ஏற்றுக் கொண்டால் ஒவ்வொரு வீடும் சந்தோஷமாக இருக்கும். அப்படி இருந்தால் நாட்டுக்கும் நல்ல பிரஜைகள் உருவாகுவார்கள்.

கே:— சங்கவியுடன் நடிக்கிறீர்களா?


ப:— அவருடன் நடித்ததெலுங்குப் படமொன்று 'அர்ஜுனா' என்ற பெயரில் 'தமிழ்பேச' வருகின்றது.

கே:— 'வேதம்' படத்தில் ஜோதிகாவை நடிக்கக் கேட்டபோது மறுத்து விட்டாராமே?

ப:— அதைப்பற்றி இப்போது எதற்கு? 'வேதம்' படத்தின் நாயகி சாக்ஷி.

—ஷாம்

# அலட்டிக் கொள்ளாதவர் மம்முட்டி



அவ்வப்போது தமிழுக்குத் தலை காட்டினாலும் தான் நடிக்கும் கதாபாத்திரத்தின் தன்மையினால் தமிழ் ரசிகர் நெஞ்சில் நிலைத்திருப்பவர் மம்முட்டி. மலையாளத்தில் சூப்பர் ஸ்டாராக இருந்த போதும் ஸ்டார் இமேஜ் பற்றியெல்லாம் அலட்டிக் கொள்ளாதவர். நடிகனுடைய இமேஜ் கதாசிரியர் இயக்குநர்களைப் பொறுத்தே அமைகிறது என்கிறார்.

# இனி இவர்கள்...

பிரமிட் பிலிம்ஸ் தேனப்பனின் தயாரிப்பில் கமல்ஹாசன் நடிக்கும் படத்தை கே.எஸ்.ரவிக்குமார் இயக்கப்போகிறார்.

**

'க்ளிக்' படத்தில் மீனா கதாநாயகியாக நடிக்கிறார். அவருடன் இன்னொருகதாநாயகியாக மலையாள முன்னணி நடிகை தேது மோகன் நடிக்கிறார்.

# இளசுகள் கலாட்டா.. டென்ஷனில் ஜோதிகா!

சமீபத்தில் ஜோதிகா நடிக்கும் படமொன்றின் படப்பிடிப்பு நடைபெற்றது. வேடிக்கைபார்க்க வந்த இளைஞர்கள் ஜோதிகாவை கிண்டல் செய்திருக்கிறார்கள். ஆரம்பத்தில் ஜோதிகா இதனைக் கண்டுகொள்ளவில்லையாம். ஏனென்றால் ஜோதிகாவிற்குத்தான் தமிழ் தெரியாதே. தொடர்ந்து கிண்டல் அதிகமானதும் ஜோதிகா தன்னுடைய உதவியாளரிடம் விஷயத்தைக் கேட்டிருக்கிறார். உதவியாளர் விளக்கமாகச் சொன்னதும் டென்ஷனாகிவிட்டாராம்.



# 'நரசிம்மா' ஒரே கவர்ச்சி மயம்

விஜயகாந்த் நடித்து வெளிவரப்போகும் படம் 'நரசிம்மா', இதுவரை இல்லாத அளவுக்குத் தனது ஆக்ரோஷமான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார்.

அக்ஷன், காதல், பாசம், நகைச்சுவை என்று ஜனரஞ்சகப் படத்திற்குத் தேவைப்படும் அனைத்து அம்சங்களையும் இணைத்துள்ளார்கள்.

போதாததற்கு மூன்று கவர்ச்சிப் பாடல்களை பிரபல நடிகைகளை வைத்துப் படமாக்கியிருக்கிறார்கள்.

இஷா ஒரு பாடலிலும் ரம்யா கிருஷ்ணன் ஒரு பாடலிலும் கவர்ச்சி நடனமாடி இருந்தாலும் போனஸாக மூன்றாவது பாட்டுக்கு இந்தித் திரையுலகின் கவர்ச்சி வெடி மம்தா குல்கர்னியையும் நடனமாட வைத்திருக்கின்றனர்.

'மண்டேலா மண்டேலா' என்ற பாடலுக்கான மம்தாவின் நடனம் படத்திற்கு ஹைலைட்டாக அமையும் என எதிர்பார்க்கின்றனர்.

விஜயகாந்தின் சொந்தப் படம் என்பதால் இலாபத்தைக் கருதியே 'நரசிம்மா' கவர்ச்சி மயமாக்கப்பட்டுள்ளது என சினிமா வட்டாரத்தில் பேசிக் கொள்கிறார்கள்.



மீனா

'பிஷ்' நடிகை நடன நடிகரின் வீட்டாரை எதிர்த்து திருமணம் செய்து கொள்ளப் போனார். ஆனாலும் முந்திக் கொண்ட பிஷ்ஷின் பெற்றோர் அவரை அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்று அங்கு வீட்டுச் சிறையில் வைத்திருக்கின்றனர்.

இதற்கு பாலசந்தரின் ஆஸ்தான நடிகையாக இருந்து மலையாள நடிகரைக் கரம்பிடித்த கண்ணழகி நடிகையும் உடந்தை என்று ஒரு செய்தி சமீபகாலமாகக் கோடம்பாக்கத்தில் பரவியது. 'பிஷ்' நடிகையோ அதனை மறுத்திருக் கிறார். ''ஜாலியாக டூர் போய் வந்தேன் அதற்குப் போய் இப்படி ஒரு கதையைக் கட்டி விட்டார்களே'' என்று அமெரிக்கப் போட்டோக்கள் சகிதம் ஸ்டேட்மென்ட் விடுத்து வருகிறார்.

* *

காமரசம் சொட்டும் படங்களில் கதா நாயகியாக நடித்து அசத்திய 'ஷகீ' நடிகை யும் காதலில் விழுந்துவிட்டார். மடிப்பு அம்சா வழியில் அம்மணியும் ரகசியத் திருமணம் செய்து அது பரகசியமாக்கப்படலாமாம். நிருபர்கள் அம்மணி பின்னால் பப்பராசிகள் டயானாவைத் துரத்தியது போல் துரத்திக் கொண்டிருக்கிறார்களாம்.

# திரை மறைவில்

* *

நடிகைகளில் விஜயசாந்தி, ரோஜாவுக்கு அடுத்து அதிக ரசிகர்மன்றங்களைப் பெற்றிருப்பவர் 'தாஜ்' நடிகை. ரசிகர்களை மதித்துப் பழகுவதில் அம்மணிக்கு நிகர் யாருமில்லையாம் — இது ரசிகர்களின் ஸ்டேட்மென்ட்.

* *

'குஷி' நாயகியும் கால்ஷீட் குளறுபடி செய்ய ஆரம்பித்துவிட்டார். தனது மும்பை காதலனைச் சந்திப்பதற்காக அடிக்கடி ரகசிய பயணம் சென்று விடுகிறாராம். இது தாய்க்குலத்திற்குப் பிடிக்கவில்லையாம். இன்னும் கொஞ்ச நாள் நடித்து உழைத்துத்தருவாள் என்று பார்த்தால் இப்படி பழைய காதலை புதுப்பித்துக் கொண்டு சுற்று கிறாளே என்று புலம்பு கிறாராம்.



கமல் — மனீஷா

'ஆளவந்தான்' படத்தில் கமலஹாசன் இரட்டை வேடத்தில் நடித்துள்ளார். இதில் வில்லன் கரெக்டருக்கே அதிக பாராட்டுக் கிடைக்குமென எதிர்பார்க்கிறார்கள்.

# ஆளவந்தானுக்கு மெருகூட்டும் வசனங்கள்

''கொஞ்சம் மனிதன், கொஞ்சம் மிருகம் சேர்ந்துச் செய்த கலவை நான். மனிதனைப் புதைத்துவிட்டு மிருகம் எழுந்து செயற்படுகிறதே'' என்று கமல் பேசும் வசனம் கரெக்டருக்கு மேலும் மெருகு சேர்க்கும் என்று நம்புகின்றனர் தயாரிப்புக குழுவினர். பொதுவாகவே தனது கரெக்டர்களில் அதிக கவனம் எடுத்துக் கொள்பவர் கமலஹாசன். ஆளவந்தானில் ஹீரோ கரெக்டரை விட நெகட்டிவ் கரெக்டரில் தான் அதிக சிரத்தை காட்டியிருக்கிறார். பருத்த தேகத்தையும் மொட்டைத் தலையையும் ரசிகர்கள் திட்டத்தான் போகிறார்கள்.

லைலா 'கள்ளழகர்', 'பார்த்தேன் ரசித்தேன்', 'தீனா' போன்ற படங்களில் நடித்திருக்கிறார். அனைத்திலும் கவர்ச்சி கலந்த கதாநாயகி வேடங்களே!

இப்போது பாலா டைரக்ஷனில் 'நந்தா' படத்தில் சூர்யாவுக்கு ஜோடியாக நடித்து வருகிறார்.

ஆளே அடையாளம் தெரியாதவாறு சூர்யாவை மாற்றிய பாலா லைலாவுக்குக் கனமான வேடத்தைக் கொடுத்திருக்கிறார். இப்படத்தின் மூலம் எனது நடிப்புத் திறமையும்

# கவர்ச்சிப் பெண் லைலா கரெக்டர் ரோலில்....

பளிச்சிடப் போகிறது என்று சொல்லிச் சொல்லி மகிழ்கிறார் லைலா. (ஓ! கவர்ச்சிப் பெண்ணுக்கு கரெக்டர் ரோலா!)



# மும்தாஜ் கும்...கும் குத்துச் சண்டை

கவர்ச்சியை மட்டுமே நம்பி கிளாமர் ரோல்களில் நடித்து வந்தவர் மும்தாஜ். எத்தனை நாளைக்குத்தான் கவர்ச்சியை நம்புவது. வயது ஏறிவிட்டால்? கிளாமர் ரோல்களுக்கு வேலையில்லை.

இது கவர்ச்சி நடிகைகளுக்கு வரும் லேட்டஸ்ட் ஞானோதயம். இப்போது மும்தாஜுக்கும் ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான் அடிதடிப்பக்கமும் கவனம் செலுத்த ஆரம்பித்திருக்கிறார்.

'மும்தாஜ்' படத்தில் கும்... கும்... குத்துச்சண்டை போடுகிறாராம்.



டைரக்டர் கதிரின் 'காதல் வைரஸ்' படத்தில் நடித்து வருகிறார் அப்பாஸ். ஆயினும் இப்படத்தில் நாயகனாக நடிப்பவர் ரிச்சர்ட். அப்படியானால் அப்பாஸுக்கு கௌரவ வேடமா? அவரிடமே கேட்டபோது, என்னை 'காதல் தேசம்' படத்தில் அறிமுகப்படுத்தியவர் கதிர். அந்த நன்றிக்கடனுக்காகவே 'காதல் வைரஸ்' படத்தில் என்னை நடிக்கக் கேட்டபோது மறுக்காமல் ஒப்புக்கொண்டேன் என்று கூறுகிறார்.



# அப்பாஸ் நன்றிக்கடன்

# திணறி விட்டார் போட்டோகிராபர்

''இந்தப் பொண்ணு முன்னுக்கு வர இடமிருக்குதப்பா. நாம எள் என்றால் பொண்ணு எண்ணெயாகி நிற்குதே'' என்று ப்ரியங்கா த்ரிவேதியைப் பற்றி ஆளாளுக்கு புகழாரம் சூட்டிக்கொண்டிருக்கின்றனர்.

'சுவாசம்' படத்திலேயே தனது தாராள மயக்கொள்கையை வெளிப்படுத்தினார். இப்போது 'எச் டூ ஓ' படத்தில் போட்டோகிராபரே திணறிவிடும் அளவுக்கு கவர்ச்சி போஸ் கொடுத்து அசத்தி விட்டாராம்.



எபி குஞ்சுமோன் – ப்ரியங்கா த்ரிவேதி

# 'அமீஷ' நடிகையின் மறுபக்கம்

'கஹோ நா பியார் ஹை' படத்தின் மூலம் அதன் நாயகன் ஹிருதிக் ரோசன் புகழின் உயர் மட்டத்திற்குப் போனார்.

அவருடன் இணைந்து நடித்தவர் 'அமீஷ' நடிகை. முதல்படமே சூப்பர்ஹிட் என்பதனால் அம்மணிக்கு பாலிவூட்டில் பரபரப்பான எதிர்காலம் காத்திருந்தது.

தயாரிப் பாளர்கள் ''கோடியாகக் கொட்டிக் கொடுக்கிறோம். கால்ஷீட் கொடுங்கள்'' என்று வரிசையில் நின்றனர்.

ஆனால் பாலிவூட் காரர்களை முந்திக் கொண்டு அம்மணியை கோடம்பாக்கத்திற்கு அழைத்து வந்தார் காதல் இளவரசனின் தந்தை. அவர் அப்படி அழைத்து வந்ததற்கும் காரணம் இல்லாமல் இல்லை. காதல் இளவரசனின் தந்தைக்கு ஒரு இலட்சியம் எப்போதுமே உண்டு. அது, மும்பையின் பிரபலங்கள் தன் ஒரே மகனுடன் ஜோடி சேர்ந்துவிட வேண்டும். அதுவும் ஒரு படத்தில் மட்டுமே! அடுத்த படத்தில் காதல் இளவரசனோடு அவர்களே நடிப்பதாகச் சொன்னாலும் தந்தைக் குலம் அனுமதிக்கமாட்டார்.



மகன் சஞ்சலப்பட்டு விடக்கூடாது என்ற பாதுகாப்பு உணர்வுதான் காரணம்.

'அமீஷ' நடிகையின் வீட்டிற்குள்ளும் தந்தைக் குலம் நுழைந்தார். தன் மகனுடன் நடிப்பதற்காக அம்மணியின் அழகை விலை பேசினார். காதல் இளவரசனின் முதல் தர நிலைகளும் எடுத்துரைக்கப்பட்டன.

அமீஷ' நடிகைக்கும் தமிழ்ப்படத்தில் நடிக்கும் ஆசை ஏற்பட்டது. தந்தைக் குலத்திடம் சம்மதம் தெரிவித்தார்.

அம்மணியை விசேஷ ஏற்பாடுகளோடு தடல்புடலாக சென்னைக்கு அழைத்து வந்தனர். 'கஹோ நா பியார் ஹை' நாயகி காதல் இளவரசனோடு நடிக்கிறார் என்று பெரிதாக விளம்பரப்படுத்தப்பட்டது.

படப்பிடிப்பும் தொடங்கியது.

அம்மணி வந்து போகவிமான டிக்கெட்டுகள், ஹோட்டல் வசதி, உணவு என்று அம்மணிக்கே ஏகப்பட்ட செலவு கள் ஏற்பட்டன. தயாரிப்பாளர் திணறி விட்டார். இதனால் அழகை விலைபேசிய படமும் பாதியில் நிற்கிறது. 'அமீஷ' நடிகை மும்பைசென்று விட்டார்.

'சன்னிடியோல்' நடிகையின் மனதைக் கவர்ந்து விட்டார் என்று மும்பை செய்திகள் தெரிவிக்கின்றன.

## சுடர் ஒளி தொடர் கதை

# முத்தமிடும் ரோஜா இதழ்கள்

இதழ் – 08

மு.சிவநேசன்



இதுவரை.....

தனது மகன் கடத்தப்பட்டதை எண்ணித் தவிக்கும் சுமராவுக்கு அவளது தோழி மோனா ஆறுதல் கூறுகிறாள். மோனாவின் நண்பனும் துப்பறியும் நிபுணனுமான றொபேட்டைச் சந்திக்க இருவரும் புறப்படுகிறார்கள். ஆனால் அவசர அலுவலாக வில்லியத்தைச் சந்திப்பதற்காக புறப்பட்டுச் சென்று விடுகிறான் றொபேட். கொள்ளையர்களின் இருப்பிடமென சந்தேகிக்கும் வனப்பகுதியை இராணுவத்தினர் சுற்றிவளைத்துக்கொள்கிறார்கள். அவர்களுடன் றொபேட்டும் வில்லியமும் செல்கிறார்கள்.

இனி....

தரையில் கண்ணில் பட்ட சிகரெட் லைட்டர் ஒன்றை தனது கைக்குட்டையால் பொத்தி எடுத்து தன் பொக்கெட்டில் இரகசியமாகப் பத்திரப்படுத்திக் கொண்டான் றொபேட். அதில் இருக்கும் கைரேகை பல லட்சங்களைச் சம்பாதித்துத் தரும் என்பதை அப்போது அவன் அறிந்திருக்க நியாயம் இல்லை. ஆனால் பல கேஸ்களில் இந்த லைட்டர்களில் உள்ள கைரேகைகள் அவனது வாதங்களைப் பலப்படுத்தியே வந்திருக்கின்றன.

கிரிமினல்களின் ஓயாத புகைக்கும் பழக்கமும் அவர்களால் தவற விடப்படும் வெற்று லைட்டர்களும் பெருமளவில் துப்புத்துலக்க உதவும் இரகசியங்களை எல்லாம் றொபேட் வெளியிடுவதில்லை.

ஆங்காங்கே இரத்தம் தோய்ந்த துணிகள் தென்பட்டன. பஸ் கொள்ளையின்போது காயப்பட்டவர்களின் இரத்தமாகவே அது இருக்கும் என எதிர்பார்த்தார்கள் அதிகாரிகள். அந்தத் துணிகள் சேகரிக்கப்பட்டன. வில்லியமும் றொபேட்டும் அவரவர் இரகசியமாகவே அடுத்தவருக்குத் தெரியாமல் இரத்தக் கறைகள் உள்ள சிறு துணித் துண்டுகளையும் பத்திரப்படுத்திக் கொண்டனர்.

அங்கே முகாம் அமைத்துப் பலநாள் இரண்டொருவர் தங்கி இருந்தமைக்கான அறிகுறிகள் தெளிவாகத் தெரிந்தன. பெண்களின் உள் ஆடைகளும் அழகுசாதனப் பொருட்களும்கூட அங்கே இருந்தன. ஆடைகளின் அளவுகளைக் கொண்டு அந்தப் பெண்களை அடையாளம் கண்டாக வேண்டும். அவற்றின் நெடிகூட ஆட்களை அடையாளம் காட்ட உதவும். அவற்றைப் பத்திரமாகக் கண்ணாடிப் பெட்டியொன்றில் மடித்து வைத்தான் வில்லியம்.

கைரேகைப் பதிவுகள் அனைத்தும் பெறப்பட்டன. காட்டிலும்கூட வசதியான படுக்கைகள் அந்தக் கூடாரத்தினுள் அமைக்கப்பட்டிருந்தன. அன்று சமைத்த உணவுகள்கூட கைவிடப்பட்டே இருந்தன. கோழிக்கறி வாசனை வாயில் நீரை வரவழைத்தது. காட்டுச் சமையல் என்றால் சொல்லவா வேண்டும்?

அது கொள்ளைக் கும்பலொன்றின் சொர்க்கபுரியாக நீண்டகாலமாக இருந்தமைக்கான அறிகுறிகள் தென்பட்டன. அதிரடிப்படையினரின் நடமாட்டம் கண்டு அவர்கள் விலகி மேலும் ஆழமான காட்டுக்குள் சென்றிருக்கலாம் அல்லது வெளியேறி இருக்கலாம்.

''முற்றுகையை தளர்த்த வேண்டாம். விடிந்ததும் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸார் வருவார்கள்'' என்று வில்லியம் அறிவித்தான்.

''இந்தச் சூழலை சற்று விரிவாக ஆராய வேண்டும். மரங்களில் ஏறி யாராவது பதுங்கிக்கொண்டிருக்கலாம்'' என்று வில்லியத்திடம் றொபேட் குசுகுசுத்தான். விடியும்வரை அங்கே தங்கிவிடத்தான் அவன் விரும்பினான்.

கிடைத்த தடயங்கள் அனைத்தையும் சேகரித்துக்கொண்டு அவர்கள் திரும்பும்போது நேரம் நள்ளிரவைக் கடந்துவிட்டது. இடம் வீடியோப் படம் எடுக்கப்பட்டது. அவர்கள் மீண்டும் வந்து வாகனத்தில் ஏறத் தயாரானபோது காலில் தட்டுப்பட்ட பொதி ஒன்றை றொபேட் கையில் எடுத்தான். அது ஒரு புத்தகப் பை.

அது வில்லியமின் மகன் ருஷனுடையது என்பதைக் கண்டுபிடிக்க அவர்களுக்கு அதிகநேரம் எடுக்கவில்லை. வில்லியம் உறைந்து போனான். அவ்விடத்தில் போதை மருந்து, மயக்க மருந்து, அவற்றை ஏற்றும் ஊசிகள் போன்றவையும் தேடுதலின்போது அகப்பட்டன.

உடனடியாக வில்லியம் வீட்டோடு தொடர்பு கொள்ளத் துடித்தான். காட்டிலிருந்து பிரதான சாலைக்கு மீளும்வரை அவனது தனிப்பட்ட செலுலர் தொலைபேசியைப் பாவிக்க இராணுவ அதிகாரிகள் அவனுக்கு அனுமதி அளிக்கவில்லை. அது வனப்பிரதேசத்தில் நிலைகொண்டிருந்த படையினரின் நலன்களைப் பாதிக்கலாம் எனக் கருதப்பட்டது.

வில்லியமின் நடவடிக்கைகள் அவனது உயர் அதிகாரிகளுக்குப் பிடிப்பதில்லை. அவன் தனது காரியத்தில் கண்ணாக இருப்பதும் மனைவியின் தொழிலுக்குத் தேவையான தடயங்களை சேகரிப்பதில் அலுவலகச் செல்வாக்கைப் பயன்படுத்த முனைவதுமே அதற்குக் காரணம். இவன் கோர்ட்டில் பொலிஸார் சார்பில் ஆஜராவதும் அவள் வழக்குரைக்க வருவதும் தவிர்க்க முடியாத சங்கடங்கள்.

எப்பொழுதும் ஏதாவது தலை போகிற விடயமாக வீட்டில் இருந்து அழைப்பு வந்துகொண்டிருக்கும் அவனுக்கு.

இதனால் பலரது எரிச்சலுக்கும் ஆட்பட்டிருந்தாலும் சுரணை இல்லாதவனாகவே அவன் நடந்து கொள்கிறான். அதனால் அவனது திறமைகள்கூட பெரிதும் பாராட்டுப் பெறுவதில்லை. அவசரமான இக்கட்டான நேரங்களில் கூட சுமராவால் அவனைத் தொடர்பு கொள்ள முடியாத சங்கடமான நிலைமையை இந்த உணர்வு உருவாக்கிவிட்டது.

சாலை வெளிச்சங்கள் தென்படத் தொடங்கியதும் சுமராவிடம் ருஷனின் சுகம் பற்றி விசாரிக்கத் துடித்தான் வில்லியம். விசாரித்ததும் கலக்கம் மேலும் அதிகரித்தது.

''ருஷன் கடத்தப்பட்டு விட்டான்'' என்று சுமரா தெரிவித்ததும் வில்லியம் அதிர்ந்து போனான். ஆனாலும் 'ருஷனை விடுவிப்பது தொடர்பாகப் பேரம் பேசப்பட்டிருப்பதால் அவனுக்கு ஆபத்து ஏதும் இருக்காது' எனவும் நினைத்தான்.

ஒரு பொலிஸ் அதிகாரிக்குரிய இயல்புடன் தன்னைச் சுதாகரித்துக் கொண்டான். அவதிப்பட்டால் அதிகாரிகளின் எரிச்சலுக்கு ஆளாக வேண்டிவரும் என அவனுக்குத் தெரியும். தன்னோடு கலந்து ஆலோசிக்காமல் எதையும் எவரிடமும் கதைக்கவேண்டாம் எனச் சுமரா கேட்டிருந்தாள். இவனது அவசர புத்தி ருஷனின் உயிருக்கு ஆப்பு வைத்துவிடக் கூடாது என்பதில் அவள் எச்சரிக்கையாக இருந்தாள்.

திரும்பும்போது வில்லியம் றொபேட்டின் காரில் தொற்றிக் கொண்டான். ருஷனைப் பாதுகாப்பாக மீட்பது பற்றிய ஆலோசனைகளில் இருவரும் இறங்கி இருந்தனர். பொறுப்பைத் தன்னிடம் விடும்படியும் உடனடியாக தனக்கு துப்பறியும் செலவுகளுக்கான முற்பணமாக ஐயாயிரம் டொலர்கள் தரும்படியும் றொபேட் கேட்டிருந்தான்.

அவன் ஒரு காசுப் பிசாசு எனத் தெரிந்திருந்தாலும் மகனின் உயிரோடு விளையாட விரும்பாத வில்லியம் அதற்கு உடன்பட்டான்.

''றொபேட் நீ இதில் இரகசியம் பேணாதபோது நான் பொலிஸிற்குத் தெரியாமல், அதுவும் எனது திணைக்களத்திற்குத் தெரியாமல் இந்த வழக்கை உன்னிடம் தந்த குற்றவாளி ஆகிவிடுவேன். எனக்கு முதலில் மகன் உயிருடன் வேண்டும். அடுத்தது உன்னிடம் இதை ஒப்படைத்தது பற்றி யாருக்கும் தெரியக் கூடாது.''

''நானும் அதைத்தான் சொல்கிறேன், கேஸ் என்னிடம் இருப்பது உனக்கும் எனக்கும் மட்டும்தான் தெரிய வேண்டும். தப்பினால் பையனைக் கண்டுபிடிப்பது கஷ்டம்''

'சுமராவிடம்கூட இதை மூச்சுவிட முடியாது. ஆவேசத்தில் அவள் ஏதாவது ஏறுமாறாகச் சொல்லிக் கொண்டே இருப்பாள். சொல்லி லாபம் இல்லை. முடிவு நல்லதாக அமைந்தால் சரி!' என்பதே வில்லியமின் எண்ணம்.

அவர்களது கார் சாலையோரத்தில் இருந்த ஒரு காசு பெறும் தன்னியக்க இயந்திரத்தின் அருகில் நின்றது. வில்லியம் இறங்கி வந்து தனது அட்டையை இயந்திரத்தில் நுழைத்து அதன் இரகசிய இலக்கத்தை டைப் செய்தான். ஐயாயிரம் டொலரைப் பணமாக்கிக் கொண்டான். மீண்டும் வாகனம் புறப்பட்டது. பணப் பிசாசான றொபேட்டின் கரங்களுக்கு டொலர்கள் எட்டிவிட்டன.

இனி ருஷன் கண்டுபிடிக்கப்படும்வரை றொபேட் கறந்துகொண்டே இருப்பான். அதுமட்டுமா? அங்கும் இங்கும் இவன் செலவில் விமானத்தில் பறந்து தனது அலுவல்களையெல்லாம் கவனித்து விடுவான். வில்லியமை இயன்றவரை பயன்படுத்தி பொலிஸ் தரப்புக்குள் மூக்கை நுழைத்து ஏதாவது பிடுங்கிக் கொண்டிருப்பான்.

இதையெல்லாம் தெரிந்திருந்தும் வேறு வழியின்றி வில்லியம் அவனிடமே சரணாகதி அடையவேண்டி இருந்தது. ருஷனைக் கண்டுபிடிக்கும் அபார சக்தி றொபேட்டிடம்தான் இருக்கிறது என்கின்ற நம்பிக்கை வில்லியமிற்கு.

கடத்தல்காரர்கள் கோரும் தொகையில் அரைவாசியையாவது தான் கறந்து கொண்டுதான் ருஷனை றொபேட் வெளிப்படுத்துவான் என்பதும் வில்லியமின் எண்ணம். எனவே பணத்தைப் புரட்டித் தயாராக வைத்திருக்க வேண்டும். ருஷன் அகப்பட்டதும் றொபேட்டின் பிடுங்கல் புத்தி உச்சம் காணும். அவனை வெளிப்படுத்த பெரிய பந்தா எல்லாம் போடுவான்.

தனது ஏஜென்சியை வந்தடைந்த றொபேட் மிகவும் களைப்பாக இருந்தாலும் வீட்டுக்குப் போக மனமின்றி மோனாவைத் தொலைபேசியில் அழைத்தான். ஏதாவது பணம் புரளும் வாய்ப்புக்கள் அவளது கேஸில் கிடைக்கலாம் என்றால் இவனுக்கு எப்படி உறக்கம் வரும்? மோனாவும் உடனே புறப்பட்டு வருவதாகத் தெரிவித்தாள்.

சுமரா தான் ஏஜென்சியை நாடும் விடயம் எவருக்கும் தெரியக் கூடாது என்றும் வில்லியம் அறிந்தால் தான் தப்ப முடியாது என்றும் மோனாவிடம் தெரிவித்தாள். அவளுக்கும் றொபேட்டின் திறமைகள் தெரியும். மோனா புறப்படத் தயாராகவும் வில்லியமும் வந்து சேர்ந்தான்.

இரத்த மாதிரிகளை அவசரமாக ஆராயவேண்டி அதிகாலைக்கு முன்னரே ஆய்வு கூடத்தை அழைத்தான் வில்லியம். மரபணு பற்றிய பரிசோதனைகள் அவசரப்பட்டு நிகழ்த்த இயலாதவை. எனினும் அவனிடமிருந்த மாதிரிகளை அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

சுமராவைத் தேற்றும் முயற்சியில் தோற்று அவன் உறங்கிப் போனான். அவனுக்கு அவசரமாக வந்த அழைப்புகளுக்கெல்லாம் அவளே அழுதபடி பதில் சொல்லித் தீர்த்தாள். புத்தகப்பை பொலிஸ் பொறுப்பில் இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்து அனுதாபமும் தெரிவித்தனர். தாம் செயலில் இறங்கிவிட்டதாகவும் தகவல் சொன்னார்கள்.

பொலிஸ் திணைக்களம் வில்லியமிற்காக முழுவீச்சில் இயங்கும் என்பது அவளது அச்சத்தை மேலும் கூட்டியே இருந்தது. 'நேரடி மற்றும் அதிரடி நடவடிக்கைகள் ருஷனுக்கு ஆபத்தையே தரும்' என அவள் கலங்கினாள்.

(அடுத்த வாரம் தொடரும்...)

## வாசகர் இதயம் பேசுகிறது

யுத்த கொடூரங்களையும் அதை அனுபவித்துவரும் வடக்கு–கிழக்கு மக்களின் மனநிலையையும் படம்பிடித்துக் காட்டும் 'சுடர் ஒளி'யே, நீயுத்தத்திற்குத் துணைபோகும் பேரினவாதிகளின் போக்கை சுட்டிக்காட்டி உரைக்கும் பாங்கு வியக்கவைக்கிறது.

ஜெ. பிறேம்குமார், கொக்குவில்.

'சுடர் ஒளி'யிலே வெளிவரும் ஆந்தையாரின் க்ரைம் டயறி படு சூப்பர். படம் பார்ப்பதுபோல் 'த்ரில்'லாக இருக்கிறது. மசாலா மிக்ஸ், சிறுகதை, தொடர் கதை என்பன வாரா வாரம் எதிர்பார்த்திருக்கத் தூண்டுகிறது.

செந்தூரா துஷாந்தி, உடசன்.

வாரம் ஒருமுறை வரும் ''சுடர் ஒளி''யே உன் வரவே நான் சுவாசிக்கும் மூச்சு. நீ என்னருமை சேராவிட்டால் மனதுக்குள் ஒருவகை ஏக்கம். ''நீ வந்துவிட்டாயோ...'' எனக்குள்ளே ஒருவகை ஊக்கம். உன்பணி மென்மேலும் தொடர வாழ்த்துகிறேன்.

துரைராஜ் விநோகாந், வட்டகொடை.

வன்னிப் பயணிகளின் அவலத்தை தவன்னி மைந்தன் விரிவாகத் தந்திருந்தார். மற்றும் 'சுடர் ஒளி'யில் வெளிவரும் அனைத்தும் மிக மிகச் சிறப்பாகவே உள்ளன. 'சுடர் ஒளி'யைப் பாராட்டிக் கொண்டே இருக்கலாம். வாழ்த்துக்கள்.

பி. பிறேம், வவுனியா.

அட்டைப் படம் சூப்பர்! வித்தியாசமான படங்கள். நுணுக்கமான தலையங்கங்கள். வித்தியாசமாக வரும் 'சுடர் ஒளி'யை யாவரும் விரும்புவது ஆச்சரியமில்லை. 'சுடர் ஒளி'யில் அத்தனையும் சூப்பர். அதிலும் முகப்பு படு சூப்பர்.

M.H.M. கியால், M.அஸ்வி, M.I. அஸீம் கம்பளை.

'சுடர் ஒளி'யே நீ ஒளிச்சுடராய் தினம் வருதல் வேண்டும் என் மனதினிலே புதுவசந்தம் நீ தருதல் வேண்டும். பலருடைய தாக்கங்களையும் வஞ்சகமின்றித் தாங்கிவரும் 'சுடர் ஒளி'க்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள் உரித்தாகுக!

இ. விஜயசுமன், அல்வையூர்.

'சுடர் ஒளி' பத்திரிகையை ஆரம்பம் முதல் இன்று வரை வாசித்து வரும் வாசகன் என்ற வகையில் பத்திரிகையின் வளர்ச்சிக்கு எனது பாராட்டுக்களைக் காணிக்கையாக்குகின்றேன். மென்மேலும் சிறப்புற வாழ்த்துக்கள்.

ரகு, பொகவந்தலாவ.

'சுடர் ஒளி'யைத் தொடர்ந்து படித்து வரும் வாசகர்களில் நானும் ஒருவன். இங்கு நடைபெறும் புதினங்களை 'சுடர் ஒளி'யைப் படித்த பின்னரே அறிந்து கொள்கிறோம். தேடி, அரட்டை, பக்கத்து வீடு, அரசியல், கவிதைப்புனல் என்பவை மகுடமான அம்சங்கள். வாழ்த்துக்கள் பல.

பிரம்மஸ்ரீ சு.க. சுதர்சனக்குரு, புத்தூர்.

'சுடர் ஒளி' பத்திரிகை நல்ல பல அம்சங்களுடன் துணிச்சலான விடயங்களைத் தாங்கி வருகிறது. பாராட்டுதல்களும் வாழ்த்துக்களும்.

சி. இன்பராஜ், மீசாலை.

''சுடர் ஒளி'' ஒளிச்சுடராய் தினம் வருதல் வேண்டும். என் நெஞ்சினிலே புதுவசந்தம் நீ தருதல் வேண்டும். 'சுடர் ஒளி'க்கு என் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்!

கி. விஜயன், தெஹிவளை.

வடக்கு–கிழக்கு மாகாணங்களில் வசிப்பவர்களுக்கான தகவல்களை கூடிய அளவு சேர்த்துக்கொண்டுள்ளமை மனதுக்கு நிறைவைத் தருகின்றது. குறிப்பாக வன்னியில் வசிக்கும் என் போன்றவர்களுக்கு எம் உடன் பிறப்புக்களின் தகவல்கள், செய்திகளைத் தெரிந்து கொள்வதற்குச் 'சுடர் ஒளி' பெரிதும் உதவியாக இருக்கின்றது.

ஆ. தங்கவேலாயுதம், மாங்குளம்.

உள்ளதை உள்ளபடி கூறும் 'சுடர் ஒளி'யே! உன் பணி ஓங்கி, உன் ஒளி உலகெங்கும் பரவ, உனை இதய சுத்தியுடன் வாழ்த்துகின்றேன்.

ந. குருபரன், முள்ளியவளை.

ஆஞ்சநேயர் குறித்த கருத்து மோதல்கள் சிந்தனையைத் தூண்டுகின்றன. நம்பிக்கையில்லாப் பிரேரணையை — அவநம்பிக்கைப் பிரேரணை என்று சாதுரியமாகத் தலைப்பிட்டு எழுதப்பட்ட ஆசிரியத் தலையங்கத்திற்கு சபாஷ்!

ஞானேந்திரன், கொம்பு - 06.

# கோபம் வரும்போது ஏற்படும் நெஞ்சுப்படபடப்பு ஒரு நோயா?

கே : ஒரே மருந்து வெவ்வேறு பெயர்களுடன் (Brand Name) வெவ்வேறு விலைகளில் பார்மசிகளில் விற்பனையாகின்றது. இவற்றில் விலை குறைவான மருந்துகள் தரக் குறைவானவையா? இதனைப் பாவிப்பதால் தீய விளைவுகள் ஏதாவது ஏற்படுமா? இந்த விலை வித்தியாசத்திற்கு காரணம் என்ன?

ப : *தரக்குறைவான மருந்துகளை விற்பனை செய்வது சட்ட விரோதம் ஆகும். தரமானவை என உறுதி செய்யப்பட்ட பின்பே மருந்துகள் பார்மசிகளில் விற்பனைக்கு வருகின்றன. ஒரே மருந்து மிகப்பெரிய விலை வித்தியாசத்தில் வெவ்வேறு பெயர்களுடன் (Brand Name) விற்பனையாகின்றது. இவ்விலை வித்தியாசத்திற்கு முக்கிய காரணங்கள், அவை எங்கிருந்து இறக்குமதியாகின்றன என்பதும், அவை எப்படி தயாரிக்கப்படுகின்றன என்பதும், அவை எவ்வாறு பொதி செய்யப்பட்டிருக்கின்றன என்பவை ஆகும். இவற்றின் விலையில் பாரிய வித்தியாசம் இருக்கின்ற பொழுதிலும் அவற்றில் இருக்கும் இரசாயனப் பதார்த்தம் ஒரே மாதிரியானதே. எனவே நீங்கள் விலை கூடிய மருந்தைத்தான் வாங்கிப் பாவிக்க வேண்டும் என்ற அவசியமில்லை.*

கே : 33 வயதைப் பூர்த்தி செய்துள்ள எனக்கு கடந்த ஐந்து மாதங்களாக நெஞ்சில் ஒரு படபடப்பு ஏற்படுகிறது. அதாவது இருதயம் ஒரு கணம் நின்று மீண்டும் இயங்கு வதுபோன்ற ஒரு உணர்வு ஏற்படுகின்றது. இது குறிப் பாக கடுமையாகக் கோபப்பட்டு பேசும் நேரங்களிலேயே ஏற்படுகிறது. பல சோதனைகள் செய்தும் இது என்ன நோய் என்பது இன்னும் கண்டறியப்படவில்லை. இந்த நோயை எவ்வாறு குணப்படுத்தலாம்?

ப : *உங்களுக்கு இருப்பது ஒரு நோய் அல்ல. நீங்கள் விவரித்துள்ள இந்த அறிகுறி இருதயத்தில் இடையிடையே ஏற்படுகின்ற மேலதிக இதயத்துடிப்பினால் வருகின்றது. இளம் வயதில் சுகதேகியாக இருக்கும் பலருக்கு இது காணப்படுகின்றது. இதற்கு எந்தவிதமான பரிசோதனைகளோ மருந்தோ தேவையில்லை. இதனால் உங்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்படமாட்டாது. உணர்ச்சிவசப்படும் பொழுதோ, குடி வகைகள் பாவிக்கும் பொழுதோ அல்லது கோப்பி அருந்தும் பொழுதோ இது அடிக்கடி ஏற்படக்கூடும். எனவே இவற்றைத் தவிர்த்துக் கொள்வது நல்லது.*

கே : மனிதனில் உடல் உறுப்பு (ஈரல், சிறுநீரகம், இருதயம்) மாற்றுச் சிகிச்சை செய்வதற்காக விலங்கு களின் உடல் உறுப்புக்களைப் பயன்படுத்த முடியாதா?

ப : *மனிதனில் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு பன்றி, மாடு போன்றவற்றிலிருந்து எடுக்கப்படும் இன்சுலின் பயன்படுத்தப்படுகிறது. மனிதனுக்கு சில நோய்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு விலங்குகளின் குருதியிலிருந்து பிரித்தெடுக்கப்படும் ஒரு திரவம் பயன்படுத்தப்படுகிறது. மனிதனின் இருதய வால்வுகள் பழுதடையும் போது அவை விலங்குகளில் இருந்து பெறப்பட்ட இருதய வால்வுகளினால் மாற்றீடு செய்யப்படுகின்றன. ஆனால் உடல் உறுப்பு மாற்றுச் சிகிச்சைக்காக விலங்குகளின் உடல் உறுப்புகளை பாவிக்குமளவுக்கு விஞ்ஞானம் இன்னும் வளர்ச்சியடையவில்லை. இது சம்பந்தமாக பல ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எதிர்காலத்தில் இது சாத்தியமாகலாம்.*

கே : எனது மகனுக்கு இப்போது 6 வயது பூர்த்தியாகிறது. 3 வருடங்களுக்கு முன்பு இவனை சோதித்துப்பார்த்த டாக்டர்கள் இவனுக்கு இருதயத்தில் ஒரு துவாரம் இருப்பதாகவும் அதனை சத்திரசிகிச்சை மூலம் நிவர்த்தி செய்ய வேண்டும் என்றும் கூறினார்கள். ஆனால் என் மகன் இப்பொழுது சுகதேகியாக இருக்கிறான். இருதய நோய் எதுவும் இருப்பதற்கான அறிகுறிகள் இல்லை. இந்த நிலையில் சத்திரசிகிச்சை அவசியமா? சத்திரசிகிச்சை செய்வதனால் உயிர் ஆபத்து ஏதும் ஏற்படமாட்டாதா?

ப : *உங்களுடைய மகனுக்கு 3 வருடங்களுக்கு முன்பு இருதயப் பிரிசுவரில் துவாரம் இருப்பதுகண்டு பிடிக்கப்பட்டு சத்திரசிகிச்சை தேவையென டாக்டர்களினால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் அவருக்கு நோய்க்கான கடுமையான அறிகுறிகள் எதுவும் இல்லாத பொழுதும் சத்திரசிகிச்சை அவசியமாகும். சத்திரசிகிச்சையை நீண்ட காலத்திற்குத் தள்ளிப்போடுவதனால் நுரையீரலுக்கான குருதிக் குழாய்கள் நிரந்தரமாகப் பழுதடையக்கூடும். எனவே தாமதிக்காது டாக்டரைச் சந்தித்து நோயை உறுதிப்படுத்திக்கொண்ட பின் சத்திரசிகிச்சைக்கு சம்மதம் தெரிவிப்பது நல்லது. துவாரம் சிறியதாகவும் இருதயப் பிரிசுவரின் மேற்பகுதியிலும் காணப்படுமாயின் சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய அவசியம் இல்லை.*

கே : நோயாளி ஒருவரினால் டாக்டருக்கு சொல்லப்படும் தகவல்களின் இரகசியத் தன்மை பாதுகாக்கப்படுமா? ஒருவருக்கு ஒரு நோய் இருப்பது கண்டறியப்படின் அதனை ஒருவருக்கும் சொல்ல வேண்டாம் என்று டாக்டரை கேட்டுக்கொள்ளும் உரிமை நோயாளிக்கு இருக்கிறதா?

ப : *நோயாளியின் அனுமதியில்லாமல் அவர் பற்றிய எந்தத் தகவல்களையும் வெளியிடும் உரிமை வைத்தியருக்கு இல்லை. ஒருவருக்கு AIDS நோய் இருப்பது கண்டறியப்பட்டால் கூட அவரின் அனுமதியில்லாமல் அவரின் மனைவிக்கே அதனைத் தெரியப்படுத்த முடியாது. நோயாளி பற்றிய இரகசியத்தைக் காப்பாற்ற வேண்டியது வைத்தியரின் கடமை. இருந்த பொழுதும் இதற்கு சில விதிவிலக்குகள் இருக்கின்றன. உதாரணமாக ஒருவருக்கு சயரோகம், கொலரா, நெருப்புக்காய்ச்சல் போன்ற தொற்றிப் பரவும் நோய்கள் ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்து அதனை மேலும் பரவாமல் தடுக்கும் உரிமை வைத்தியருக்கு உண்டு. ஒருவர் காயப்பட்டு வந்தாலோ அல்லது நஞ்சூட்டப்பட்டிருந்தாலோ அது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கும் கடமை வைத்தியருக்கு உண்டு. இலங்கையிலே நோயாளியின் நோய் பற்றிய இரகசியத்தன்மையை பாதுகாப்பதில் பல நடைமுறைப் பிரச்சினைகளும் குறைபாடுகளும் இருக்கின்றன. இவற்றைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.*

**இலவச மருத்துவ ஆலோசனை**

இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் சிவன்சுதன், நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:—

இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர்ஒளி'
36/2, பிரெட்றிகா வீதி,
கொழும்பு — 06.

# கவிதைப் பூங்கா

## ஆயுள்வரை...

அந்த வானத்தைப்போல்
எனக்குள்ளும் ஆசைகள்...
அடைந்து முடிந்த ஆசைகள்...
அடைய முடியாத ஆசைகள்...
பற்றிக் கொண்ட
கொழுகொம்புக் கொடியாய்
உன்மீது எனக்காசை!

உன் சில்லறைச் சிரிப்பினில்...
தரை வந்து வந்து போகும்
வானம்பாடியாய்
விழுந்து விழுந்து
மறுபடியும் எழ எத்தனிக்கின்றேன்
ஆனால்—
உதிர்நட்சத்திரமாய் — நான்
உருக்குலைந்து போகின்றேன்!

உன் வாயிலிருந்து
சங்கீதம் குழையும்போது
மௌனம் எனக்கு ஆடைகட்டி
அழகு பார்க்கின்றது
உன்னைப் பார்க்கும்போதெல்லாம்
நானொரு ஊமைப் பாடகனாய்
உலா வருகின்றேன்!

ராத்திரியில் — என் மனப்பாதையில்
உன் நினைவுகள்
யாத்திரை போகையில்
சித்திரை வெயிலாய்
நித்திரை தகிக்கும்!

என் ஆசைகள் உதய சூரியனாய்
பிரகாசிக்குமென்றே — நான்
பிரயத்தனப்படுகின்றேன்
ஆனாலவை
அஸ்தமனத்தை நோக்கியே
பயணித்துக் கொண்டிருக்கின்றன
என்பது எனக்குத் தெரியாது
வானம் இடிந்து விழுந்துவிடுமென
குருட்டு நம்பிக்கையில்
காலைத் தரையுயர்த்தி
ஆள்காட்டி உறங்கிடுமே...
அதுபோல்தான் நானும்
என் நம்பிக்கைகளும்!
ஆள்காட்டிக்கு இரவுகள் மட்டும்!
எனக்கு — ஆயுள் முழுவதும்!!

கலையன்பன் நிலாம்,
தாராபுரம்

## —தேசத்தின் நாட்குறிப்பு—

கதிரவனின் கண்விழிப்பு
காலைநேரக் கலகலப்பு
அருவிகளின் சலசலப்பு
ஆலயத்தின் மணி ஒலிப்பு

பறவைகளின் சிறகசைப்பு
பாவைகளின் குழலிசைப்பு
புலர்பொழுதின் புன்சிரிப்பு
பூக்களவை இதழ் விரிப்பு

துப்பாக்கிச் சடசடப்பு
தூரத்தில் வெடிவெடிப்பு
உள்ளத்தில் படபடப்பு
ஊரெல்லாம் சலசலப்பு

எதிர்கால வாழ்விருப்பு
ஏங்கியே துடிதுடிப்பு
வசந்தத்தின் கையசைப்பு
வாழ்வுகளின் காத்திருப்பு

சமாதானக் கருத்தரிப்பு
சாவுகளே பிரசவிப்பு
ஆயுதங்கள் பெருங்குவிப்பு
அழிவுகளே தொடர் இருப்பு

தென்றலிங்கே சுடுநெருப்பு — இது
தேசத்தின் நாட்குறிப்பு

— விஜயா.எவ், யாழ்ப்பாணம்

## வெற்றிக்கொடி கட்டக்கவி!

நாட்டில் ஆடும் தீமைதீர
திரண்ட தோளை ஏற்றுவோம்!
நாடி நிற்கும் துன்பம் ஓட
மனித வேள்வி பூட்டுவோம்!
மாற்றங் கண்ட பூமிமீது
மிதித்து வெற்றி கொள்ளுவோம்!
தூற்றுவார்கள் தூற்ற இங்கு
தேர்வு ஞானம் ஏந்துவோம்!
வீழ்ந்த வாழ்வு எழுந்து ஆட
ஆற்றல் இங்கு கூட்டுவோம்!
சூழ்ந்த பேய்கள் வெருண்டு ஓட
படை தொடுத்து வெல்லுவோம்!
நாமிருக்கும் நாடு என்று
ஒற்றை நாட்டைக் கட்டுவோம்!
துமிகளாலே வெள்ளம் பாயும்
பண்பை இங்கு காட்டுவோம்!
நேசக் கரங்கள் இணைத்து — மெல்ல
தேச வலியை ஊட்டுவோம்!
பாசக் கணையை நாணிலேற்றி
மாசு அகற்றி வீசுவோம்!
சங்கெடுத்து வெற்றி ஊதி
உலகை மேவி வாழுவோம்!
பொங்குகின்ற மனிதர் நாங்கள்
நாளை வெற்றி காணுவோம்!

—லோ.துஷிகரன்

## காதலித்துப்பார்!

நீளமான நிம்மதிகள் கூட
நிர்மூலமான மாதிரி
உணர்வு உன்னுள்
உனக்கே உணவாகும்.
காதலித்துப்பார்!

எழுதுகோலுக்கும் உனக்கும்
இடம்பெற்ற இல்லறத்தில்
காகிதங்கள் எத்தனையோ
கன்னிகழிந்திருக்கும்
காதலித்துப்பார்!

அவனை(ளை)
நினைக்கையில்
நரம்புகளும் நாணம்
கொண்டு
உன்னை உன்னுள்
நையப் புடைக்கும்
காதலித்துப்பார்!

உன் சிந்தனைக்குக்
கட்டுப்பாடே இருக்காது
கட்டில்கள் கதிரைகளாகும்
கதிரைகள் கட்டில்களாகும்
காதலித்துப்பார்!

உடலெங்கும் உணர்ச்சிகள்
ஊர்வலம் போகும்
உனக்கான உறவுகளில்
ஒன்று வரவாகும்
காதலித்துப்பார்!

உன்னை நினைக்கையில்
உனக்கே வெறுப்பாகும்
அவனை(ளை)
நினைக்கையில்
உன்மேலும் விருப்பாகும்
காதலித்துப் பார்!

— துஷாரா

## சீதன வைரஸ்

நாளுக்கு நாள்
அகிலமே வியக்கும்
வண்ணம் ஆயிரம்
கண்டு பிடிப்புகள்
விஞ்ஞான வளர்ச்சியை
கண்ணுற்றால்
மலைப் பாய்த்தானுள்ளது
இன்றென்ன
நாளையென்னவென்று
உலகமே விழித்திருக்கும்
கணினி யுகத்தில்
ஏழை ரோஜாக்களைத்
தாக்கும்
சீதன வைரஸ் இற்கும்
தடுப்பூசி கண்டு பிடித்தால்
எத்தனை பெற்றோரின்
சுமைகள் நீங்கி
இதய வலி குறையும் ...

ஸபீர் மொஹமட்,
புத்தளம்

## தாய்மொழி புரியலையோ?

அரசியல் என்னும் அரிவாளோ அட
தமிழரை பிரிக்கிறதே!
அருந்தமிழ் என்னும் ஆரமுதோ நமை
இணைத்திட எழுகிறதே!

அருகினில் இருக்கும் உடன்
பிறப்புக்களையும்
பகையெனச் செய்திடுமே!
அரசியல் போல அருந்தமிழ் இல்லை
கடல் கடந்தும் கைதருமே!

சுயநலம் மிகுந்த அரசியலோ தமிழர்தம்
சீனப்பெரும் மதிலே!
நயம்தரும் தமிழோ உயர்த்திடும் ஏணி
தமிழனே! ஏறு அதிலே?

எதிரிகளோடும் கூட்டணி வைக்கும்
அரசியல் நோயலவோ
இது பிழை மகனே நம்மணி
சேரென்பாள்
நம் தமிழ் தாயலவோ?
தமிழனை அழிக்க தமிழனே கருவி
அதுவென்ன அரசியலோ?
''எமக்கின்னல் செய்பவர் என் இரத்தம்
இல்லை''
தாய்மொழி புரியலையோ!

— திருமலை
சந்திரன்

## அருள் வேண்டி அம்மானை!

அம்மானை அம்மானை
அருந்ததியாம் அம்மானை
இம்மாநிலத்தின்
இருள்வாழும் ஜீவன்களை
உம்மார்பின் பாலூட்டி
உயிர்ப்பென்ற நேர்காட்டும்
அம்மானாய் நின்றருளி
அருள் வரந்தா அம்மானை!

இடது பதம் தூக்கித்தான்
இருந்திட்ட தடம்மறைதது
படரும் கொடிப் பூங்கொத்தில்
பழி கண்டு கழு ஏற்றி
தொடரும் பணி தன்னில்
திரிகின்ற (உ)ருத்திரனின்
நடனமதில் நெஞ்சம்
நிலைத்திட்டாய் அம்மானை!

பார்த்திருக்க முன்னாலே
குழிபறிக்கும் வல்லமைகள்
காத்திரமாய் தன்னுள்ளே
கலை வழியாய்க் கொண்டியங்கி
நேத்திரத்தில் நன்மாண்பு
நயந்தறியா (து) சர்வமுமாய்
தோத்திரங்கள் செய்பவர்க்கு
செழிப்பருள்வாய் அம்மானை!

மலை நின்று நதியோடிய
முனையொன்றும் தெரியாது
அலை தன்னில் துரும்பாகி
அலைக் கழிந்து கரையேறி
தொலை தூரக் குறியோடுன்
கரத்துக்கைப் பிரம்பானேன்
நிலையான பதவியொன்று
எனக்கருளாய் அம்மானை!

—பட்டணத்தடிகள், கொழும்பு—05

# குடும்ப வாழ்க்கை அழகிய நந்தவனம்



குடும்ப வாழ்க்கை குழப்பமடைவதற்கும் அதனால் பிரச்சினைகள் ஏற்படுவதற்கும் காரணம் என்ன? கணவன் – மனைவி இருவருக்கிடையே பரஸ்பரம் நம்பிக்கையும், புரிந்துணர்வும் இல்லாமை தான்.

நிலைமை அப்படியிருக்க, குடும்ப வாழ்க்கை என்பது போலியானது, பொய்யானது என்ற எண்ணம் இன்றைய இளம் சந்ததியினர் மனங்களில் ஆழமாக வேரூன்றிவிட்டது.

ஓர் ஆணும் பெண்ணும் அன்பு, பாசம், அரவணைப்பு ஆகியவற்றுடன் ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து கொண்டு வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டும்.

அதற்கு மாறாக சமூகத்தினதும், பெற்றோரினதும் நிர்ப்பந்தத்தின் பேரில் ஒருவருக்கொருவர் நம்பிக்கையற்றவர்களாக வாழ்க்கையில் நுழையும் போது பிரச்சினைகளும், சிக்கல்களும் உருவாகி அதனால் குடும்ப வாழ்க்கை ஆட்டம் காணத் தொடங்கி விடுகின்றது.

திருமணத்தின் பின் இப்படி... இப்படி எல்லாம் வாழவேண்டும் என்ற கற்பனைகளுடன் இருக்கும் ஆணும், பெண்ணும் திருமணம் முடிந்த பின் கற்பனைகளைப் பகிர்ந்து கொண்டு குடும்ப வாழ்க்கையை இன்பமாக அனுபவிக்கத் தெரியாமல் தவிக்கின்றனர்.

இறுதியில் ஆணைப் பெண்ணும் பெண்ணை ஆணும் குறை சொல்லித் தாம்பத்தியம் என்பது பொய் என்ற நிலையை உருவாக்கி விடுகின்றனர். பெற்றோருக்காகவும், சமூகத்துக்காகவும் போலியான வாழ்க்கையை வாழ வேண்டிய நிலைக்கு உள்ளாகி விடுகின்றனர்.

கணவன் – மனைவி இருவரும் தமது விருப்பங்களையும், எதிர்பார்ப்புக்களையும் ஆசாபாசங்களையும் உள் மனதில் புதைத்து விட்டுத் தயக்கத்துடன் தாம்பத்தியத்தில் ஈடுபடும் போது நிறைவான மகிழ்ச்சி அவர்களுக்குக் கிடைக்காமல் போகின்றது.

''மற்றவரது சந்தோஷத்தை அனுசரித்துப் போதல்'' என்ற குணம் குடும்ப வாழ்க்கையில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பொருந்தாது. நாளடைவில் இருவருக்கும் இடையேயான தூரத்தை அது அதிகரித்து விடும்.

இருவருக்கும் இடையில் காணப்படும் இந்த இடைவெளி சலிப்பை ஏற்படுத்தி காலப்போக்கில் இருவரினது மனங்களிலும் ''தாம் குறைபாடு உள்ளவர்'' என்ற எண்ணத்தை ஏற்படுத்தி விடும்.


குடும்ப வாழ்க்கை என்பது அழகிய நந்தவனம். அந்த நந்தவனத்தைப் பார்த்து மற்றவர்கள் பெருமையடைய வேண்டும், பாராட்ட வேண்டும். நாமும் இப்படி இவர்களைப் போல வாழ வேண்டும் என்று உங்களை முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும்.

எனவே புதிய வாழ்க்கையில் அடி எடுத்து வைக்கும் ஆணும், பெண்ணும் முதலில் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். உங்களுக்கு உள்ள சந்தேகங்களையும், பிரச்சினைகளையும் உங்கள் துணையுடன் கலந்து பேசி அவற்றைத் தீர்க்க வேண்டும்.

ஏனெனில் உங்கள் சந்தேகங்களுக்கும், பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் வெளியே இல்லை. அது உங்களிடம் தான் உள்ளது.

எனவே பிரச்சினைகளைத் தீர்த்து, அன்பு, பாசம், அரவணைப்பு ஆகிய கயிறுகளால் உங்களைப் பிணைத்துக் கொள்வீர்களானால் நீங்கள் நிச்சயம் சந்தோஷமாக இருப்பீர்கள். முன்னுதாரணமான தம்பதியராகத் திகழ்வீர்கள்.

# சாயம் போகிறதா? கவலை வேண்டாம்!



விரும்பி வாங்கும் சில உடைகளை முதல் முறையாகத் தண்ணீரில் தோய்த்து எடுக்கும் போது அவற்றின் சாயம் போய் விடுகிறது என பல பெண்கள் கவலைப்படுகின்றனர்.

தாவரச்சாயம், விலங்குச்சாயம், செயற்கைச் சாயம் என மூன்று வகையான சாயங்கள் இருக்கின்றன.

இவற்றில் செயற்கைச் சாயங்கள் ஓரளவுக்குத் தாக்குப்பிடிக் கின்றன. ஆனால் சூழலையும், மண்வளத்தையும் அவை பாதிப்படையச் செய்து விடுகின்றன.

பொலியெஸ்டர், டெரிலின், நைலோன் போன்ற செயற்கை இழைகளால் தயாரிக்கப்படும் ஆடைகள் பெரும்பாலும் சாயம் போவதில்லை.

பருத்தி, கம்பளி போன்ற இயற்கை இழைகளால் தயாரிக்கப்படும் ஆடைகளில்தான் சாயம் அதிகமாகப் போகின்றது.

உடைகளின் சாயம் போகிறது என்று கவலைப்படும் பெண்கள் பின்வரும் விடயங்களைப் பின்பற்றுங்கள்.

1. வேலைகளை இலகுபடுத்துவதற்காக உடைகளை அடிக்கடி சலவைக்குப் போட வேண்டாம்.
2. வண்ண ஆடைகளை குளோரின் கலந்த நீரிலும், உப்புநீரிலும், கடின நீரிலும் துவைப்பதைத் தவிருங்கள்.
3. வண்ண ஆடைகளை நீண்ட நேரம் சலவைத் தூளில் (Washing Powder) ஊற வைப்பது கூடாது.
4. உடைகளை நிழலில் காய விடுவதே சிறந்தது.
5. கடுமையான நிறங்களில் உள்ள ஆடைகளை ''அயன்'' பண்ணும் போது, மேலே மெல்லிய துணிகளைப் போட்டுக் கொள்ள வேண்டும்.
6. செயற்கை இழையி னால் ஆன உடைகளை எப்போதும் மெல்லிய சூட்டிலேயே ''அயன்'' பண்ண வேண்டும்.
7. உடைகளில் உள்ள கறைகளைக் கவனமாக அகற்ற வேண்டும்.

மேற்கூறப்பட்ட ஆலோசனைகளைப் பின்பற்றினால் முழுமையாக இல்லா விட்டாலும், ஓரளவுக்காவது உடைகளின் சாயம் போவதைத் தவிர்க்க முடியும்.

## பெண்

பிரதீபா — பவீனா

# காலகளைப் பாதுகாப்போம்



நாம் ஆடி ஓடி வேலை செய்ய எமக்கு உதவியாக இருப்பவை கால்கள். நமது உடலைத் தாங்கும் கால்களை நாம் உரிய முறையில் கவனிப்பதே இல்லை.

* நேராக நிமிர்ந்து நிற்பதே கால்களுக்குச் சிறந்த பயிற்சியாகும்.
* உடலின் நிறை சமமாக இருக்க கம்பீரமாக நிமிர்ந்து நடக்க வேண்டும்.
* கூனி, வளைந்து நடந்தால் உடலின் எடை ஏதாவது ஒரு பக்கத்துக்குச் சாய்ந்து கால்களிலும், முதுகிலும் வலி ஏற்படும்.
* தினமும் குறிப்பிட்ட தூரம் வெறுங்கால்கள் நிலத்தில் படும்படி நடப்பது கால்களுக்கு மிகவும் நல்லது.
* தவறான, பொருந்தாத பாதணிகளை அணிவதே கால்களில் பித்த வெடிப்பு, கண்டல் காயங்கள், ஆணிகள் முதலானவை ஏற்படக் காரணம்.

நாகரிகம் கருதி கால்களை இறுக்கும் பாதணிகளைப் போடும் போது அவை கால்களை இறுக்கிப் பிடித்து, இரத்த ஓட்டத்தைத் தடைசெய்து விடுகின்றன. அதனால் ஆணிகளும் கண்டல் காயங்களும் ஏற்படுகின்றன.

* குதி உயர்ந்த செருப்புகள் அணிவதைத் தவிர்ப்பது நல்லது. நீண்ட தூரம் நடப்பவர்கள், அதிகநேரம் நின்றபடி வேலை செய்பவர்கள், அவசரமாகப் போக வேண்டியவர்கள். இப்படியானவர்கள் குதி உயர்ந்த செருப்புகளை அணியவே கூடாது.
* கால்களை எப்போதும் சுத்தமாகவும், ஈரலிப்பில்லாமலும் வைத்திருக்க வேண்டும். இரவில் படுக்கைக்குப் போகும் முன் வெது, வெதுப்பான நீரில் கால்களைச் சற்று நேரம் வைத்திருப்பது நல்லது.
* கால்களைச் சுத்தமான காற்றுப் படும்படியாக வைத்திருக்க வேண்டும்.
* கால்களில் நகம் வளர்க்கக் கூடாது. நகங்களைச் சீராக வெட்டி நகங்களுக்கிடையேயுள்ள அழுக்குகளை அகற்றிச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

இனி என்ன உங்கள் அழகிய ஆரோக்கியமான கால்களைப் பார்த்து எல்லோரும் ஆச்சரியப்படப் போகிறார்கள்!

# இதமாக பேசுங்கள்



பேசுவது என்பது ஒரு கலை. இதமாகப் பேசவும், இடமறிந்து பேசவும் நாம் சிறுவயதிலிருந்தே பழகிக் கொள்ள வேண்டும்.

''இனிய உளவாக இன்னாத கூறல்
கனி இருப்ப காய் கவர்ந்தற்று''

எனவே எப்போதும் நாம் மற்றவர்களுக்கு இதம் அளிக்கக் கூடிய சொற்களையே பேச வேண்டும்.

சில வீடுகளில் பெற்றோர் தமது குழந்தைகளை மோசமான வார்த்தைகளால் திட்டுவார்கள். குழந்தைகளும் பெரியவர்களைப் பின்பற்றித் தாமும் கடுமையான வார்த்தைகளைப் பேசுவதைக் காண்கிறோம். எனவே பெற்றோர், குழந்தைகள் முன்னிலையில் மறந்தும் கெட்ட வார்த்தைகளைப் பேசக் கூடாது.

பொது இடங்களில் யாரைப் பற்றியும் விமர்சிக்க வேண்டாம். சுற்றியிருப்பவர்கள் உங்களுக்கு அறிமுகமில்லாதவர்களாக இருக்கலாம். ஆனால் உங்களால் விமர்சிக்கப்படுபவர்களுக்கு அவர்கள் வேண்டியவர்களாக இருக்கலாம் அல்லவா?

பொது இடங்களில் உங்களிடம் உள்ள நகைகளைப் பற்றியும், சொத்துக்களைப் பற்றியும் பேசாதீர்கள்.

வீட்டைப் பூட்டிவிட்டு வெளியூருக்குப் போவதாக இருந்தால் ஊரெல்லாம் விளம்பரப்படுத்தாமல் பாதுகாப்புக்காக அயல் வீட்டுக்காரருக்கு மட்டும் சொல்லி விட்டுப் புறப்படுங்கள்.

கணவன் – மனைவியிடையேயும், சகோதரர்களிடையேயும் பிணக்குகள் ஏற்பட்டு உங்களிடம் ஆலோசனை கேட்க வருபவர்களிடம் மிகவும் எச்சரிக்கையாகப் பேசுங்கள்.

அன்பு மேலீட்டாலும் உரிமையின் ஆதிக்கத்தாலும் ஏற்பட்ட நெருடல்கள் இவை. அறிவு பூர்வமாகச் செயற்படும் போது எல்லாம் சரியாகிவிடும்.

அதற்கு நீங்கள் ஒரு பக்கம் சார்பாகப் பேசினால் உறவின் நெருக்கத்தை அது பாதித்து விடும்.

எனவே ''குடும்பம் என்றால் ஆயிரம் பிரச்சினைகள் இருக்கும். அவற்றை எல்லாம் பெரிது படுத்தாமல் இருந்தால் பிரச்சினைகள் ஏற்படமாட்டா'' என்று நாசூக்காகச் சொல்லிவிடுங்கள். சமாதானமடைந்து சமரசம் ஆகிவிடுவார்கள்.

விதண்டாவாதம் பேசுபவர்களுடன் அவசியம் என்றால் மட்டும் பேசுங்கள். அவர்களுடன் பேசுவதால் பயன் ஏற்படப் போவதில்லை.

எனவே அளவாகவும், இதமாகவும், இடமறிந்தும் பேசி மற்றவர்கள் மனதில் இடம் பிடித்துக் கொள்ளுங்கள்.

# சார்ப் எவ்.ஏ. கால்பந்தாட்டத்தில் முன் காலிறுதிச் சுற்று ஆரம்பம்

இலங்கைக் கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் எவ்.ஏ. கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டிகள் முன்காலிறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன.

இத்தொடரின் மூன்றாவது சுற்றுப்போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இதில் யங்ஸ்டார்ஸ் கழகம் ஜுபிட்டார்ஸ் கழகத்தை 3-0 கோல்களால் தோற்கடித்து அதிர்ச்சியை ஏற்படுத்தியது.




அண்மையில் முடிவுற்ற பிரீமியர் லீக் போட்டிகளில் ஜுபிட்டார்ஸ் கழகம் மூன்றாவது இடத்தையும் யங்ஸ்டார்ஸ் கழகம் 21ஆவது இடத்தையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் ஜுபிட்டார்ஸ் அணியில் தேசிய அணியைச் சேர்ந்த இரு வீரர்களும் இடம்பெற்றிருந் தனர்.

மற்றொரு போட்டியில் ஜாவா லேன் கழகம் பெட்டா யுனைட்டட் கழகத்தை 2-0 கோல்களால் தோற்கடித்தது. பெட்டா யுனைட்டட் அணியில் தேசிய அணி வீரர்களான ஈ.பி. சன்னா, கசுன் ஜயசூரிய ஆகிய இருவரும் இடம் பெற்றிருந்தனர்.

இப்போட்டியின்போது கசுன் ஜயசூரிய, ஜாவா லேன் அணி வீரரான எம். குமார் ஆகிய இருவருக்கும் சிவப்பு அட்டை காட்டப்பட்டது.

இலங்கையின் முன்னணி கழகங்களான ரட்ணம், சோண்டார்ஸ், நீர்கொழும்பு யூத்,புளூ ஸ்டார் ஆகியன முன் காலிறுதிச் சுற்றின் மூலம் சாப் எவ்.ஏ கிண்ணப் போட்டியில் களமிறங்குகின்றன.

### முன் காலிறுதிச் சுற்றுக்கான கால அட்டவணை

| | |
|---|---|
| 30.06.01 | சோண்டார்ஸ் -ஹைலைன் |
| 01.07.01 | யங்ஸ்டார்ஸ் -வின்னர்ஸ் |
| 02.07.01 | விமானப்படை -பொலிஸ் |
| 03.07.01 | ரட்ணம் -மாளிகாவத்தை யூத் |
| 05.07.01 | கடற்படை -ரினோன் |
| 06.07.01 | இராணுவம் -ஜாவாலேன் |
| 07.07.01 | நீர்கொழும்பு யூத்-ஓல்ட் பென்ஸ் |
| 07.07.01 | விக்டரி-புளூ ஸ்டார் |

இப்பிரிவின் சகல போட்டிகளும் கொழும்பு ரீட் அவெனியூவிலுள்ள ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் மாலை 4.15 தொடக்கம் நடைபெறுகின்றன.

### மகளிர் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

மகளிர் அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் நடைபெறவுள்ளது. இலங்கைக் கால்பந்தாட்டச் சம்மேளனம் இதற்கான ஏற்பாடுகளை செய்துவருகிறது.

லீக் அணிகளுக்கிடையில் இப்போட்டி நடைபெறும். அணிக்கு தலா ஏழு வீராங்கனைகளைக் கொண்டதாக இப்போட்டிகள் நடை பெறும்.

இதில் பங்குபற்ற விரும்பும் அணிகள் இலங்கைக் கால்பந்தாட்டச் சம்மேளனத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளன.

# லூவிஸுடன் மோதுவதற்கு கோடி டொலர் கேட்கும் ரஹ்மான்

"முன்னாள் அதிபார குத்துச்சண்டைச் சாம்பியன் லெனொக்ஸ் லூவிஸுடன் போட்டியிட வேண்டுமானால் எனக்கு ஒரு கோடி அமெரிக்க டொலர்கள் வழங்க வேண்டும்." இவ்வாறு உலக அதிபார குத்துச் சண்டைச் சாம்பியன் ஹசிம் ரஹ்மான் கூறியுள்ளார்.

கடந்த ஏப்ரல் 22ஆம் திகதியன்று தென்னாபிரிக்காவில் நடைபெற்ற குத்துச் சண்டைப் போட்டியில் இவ்விருவரும் மோதினர். இதில் எதிர்பாராதவிதமாக லூவிஸை தோற்கடித்தார் ரஹ்மான்.

அப்போட்டிக்கு முன் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின்படி மீண்டுமொரு தடவை இவர்கள் போட்டியொன்றில் மோத வேண்டும்.



ரஹ்மான் — லூவிஸ்

ஆனால் முதல் போட்டியில் வெற்றியீட்டிய பின் அதிக பணம் கிடைக்கக் கூடிய போட்டிகளில் பங்கேற்கவே ரஹ்மான் விரும்பினார்.

ரஹ்மானை தோற்கடித்து மறுபடியும் புகழை எட்டிப் பிடிக்க விரும்பினார் லூவிஸ். இந்நிலையில் ரஹ்மான் நைஜீரியாவின் டேவிட் ஐஸனுடன் போட்டியிட திட்டமிட்டிருந்தார். இப்போட்டி ஆகஸ்ட் 5ஆம் திகதி சீனாவில் நடைபெறவிருந்தது.

இதனால் தமது ஒப்பந்தத்தை ரஹ்மான் மீறுவதாகக் கூறி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார் லூவிஸ்.

'ரஹ்மான் அடுத்ததாக லூவிஸுடனேயே மோத வேண்டும். அல்லாவிடின் ரஹ்மானுக்கு 18 மாத தடை விதிக்கப்படும்.' இவ்வாறு நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்தது.

"லூவிஸுடன் முதலில் போட்டியிட ஆட்சேபனையில்லை. ஆனால் அப்போட்டிக்காக எனக்கு ஒரு கோடி டொலர்கள் (சுமார் 90 கோடி ரூபா) வழங்க வேண்டும்." இவ்வாறு ரஹ்மான் கூறுகிறார்.

ஆனால் இது நகைப்புக்கிடமானது என்கிறார் லூவிஸின் சட்டத்தரணியான ஜூட் பார்ஸ்டெய்ன்.

"இந்தப் போட்டிக்காக ரஹ்மானுக்குப் ஒரு கோடி டொலர் கொடுக்கத் தேவையில்லை. மாடுகள் பறக்கும் நிலை வந்தால் தவிர ரஹ்மானுக்கு ஒருகோடி டொலர் கிடைக்காது." இவ்வாறு பார்ஸ்டெய்ன் கூறுகிறார். 31.5 லட்சம் டொலர்களை மாத்திரம் இப்போட்டிக்காக வழங்க லூவிஸ் தரப்பினர் முன்வந்துள்ளனர்.

ஆனால் போட்டிக்கான பணத் தொகை எட்டு இலக்கத்தில் இருப்பது அவசியம் என்று தொடர்ந்து கூறிவருகிறார் ரஹ்மான்.

## விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

# விம்பிள்டன் வரலாற்றில்...

டென்னிஸ் உலகில் அதிமுக்கிய சுற்றுப்போட்டியாக இங்கிலாந்தின் விம்பிள்டன் சுற்றுப்போட்டிகள் கருதப்படுகின்றன.

2001ஆம் ஆண்டுக்கான விம்பிள்டன் போட்டிகள் தற்போது நடைபெறுகின்றன. இவ்வேளையில் விம்பிள்டன் போட்டிகளைப் பற்றிய சில சுவையான தகவல்கள் இங்கே தரப்படுகின்றன.

1868 இல் அகில இங்கிலாந்து டென்னிஸ் சங்கம் விம்பிள்டன் எனும் இடத்தில் ஆரம்பிக்கப் பட்டது. 1877 இல் முதன்முதலில் (ஆண்கள் ஒற்றையர்) போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன.

### டென்னிஸ் போட்டியாளர்களின் ஆடைகள்; அன்றும் இன்றும்



கோர் (1909) — கோர்லொட் ஸ்டெர்ரி (1908) — அலெக்ஸான்ட்ரா ஸ்ரீவன்ஸன் (1999)

1884இல் ஆண்கள் இரட்டையர், பெண்கள் ஒற்றையர் போட்டிகள் அறிமுகமாக்கப்பட்டன.

1913இல் பெண்கள் இரட்டையர் கலப்பு இரட்டையர் போட்டிகள் அறிமுகமாகின.

1925 இல் முதன்முதலில் பார்வையாளர் கட்டணம் அறவிடப்பட்டது. தகுதிகாண் சுற்றுப் போட்டிகள் ஆரம்பமாகின.

1927இல் வானொலி நேர்முக வர்ணனை ஆரம்பம். நடுவர் கதிரை அறிமுகம்.

1937இல் தொலைக்காட்சி ஒளிபரப்பு ஆரம்பம்.

1957இல் முதன்முதலில் ஒரு கறுப்பின வீராங்கனை (அல்தியா கிப்ஸன்) சாம்பியனானார்.

1968 இல் பரிசுப் பணம் வழங்கப்பட்டது. ஆண்கள் ஒற்றையர் சாம்பியனுக்கு 2000 பவுண்கள், பெண்கள் சாம்பியனுக்கு 750 பவுண்கள்.

1971 இல் 8-8 புள்ளிகளில் 'ரை பிரேக்கர்' முறை அறிமுகம்.

1975இல் போட்டியாளர்கள் களத்தில் ஓய்வெடுப்பதற்குக் கதிரைகள் வழங்கப்பட்டன.

1979இல் 'ரை பிரேக்கர்' புள்ளி நிலை 6-6 ஆகக் குறைக்கப்பட்டது.

1980 இல் பந்துகள் விழுந்த இடத்தை அவதானிக்க 'மெஜிக் ஐ' அறிமுகம்.

1981 இல் முதன் முதலாக வீரர் ஒருவருக்கு (ஜோன் மெக்கன்ரோ) அபராதம் விதிக்கப்பட்டது.

1986 இல் முதன்முதலில் மஞ்சள் நிறப் பந்துகள் பயன்படுத்தப் பட்டன.

போட்டியாளர்கள் ஆடை விடயத்தில் கழுதை தேய்ந்து, கட்டெறும்பான கதைதான். ஆரம்ப காலங்களில் ஆண்கள் நீண்ட காற்சட்டை அணிந்தே பங்குபற்றினர். பெண்களின் ஆடைகள் நிலத்தைத் தொடும் வண்ணம் நீண்ட கவுன் அணிந்திருந்தனர்.

1933இல் தான் முதன்முதலாக எச். டபிள்யு. ஆஸ்டின் என்பவர் கட்டைக் காற்சட்டை அணிந்து களமிறங்கினார்.

பெண்கள் படிப்படியாக உடையின் நீளத்தைக் குறைத்தனர். எனினும் நீண்ட காலுறை அணிந்திருந் தனர். 1929 இல் தென்னாபிரிக்காவின் பில்லீ டப்ஸ்கொட் என்பவர் முதன்முதலாக காலுறை அணியாமல் களமிறங்கியமை அப்போது பிரதான செய்தியாகியது. இவர் காலிறுதி வரை முன்னேறினார்.

விம்பிள்டன் போட்டிகளில் மிக இளம் வயதில் சாம்பியனானவர்கள்: ஆண்களில் பொரிஸ் பெக்கர் -வயது 17 வருடங்கள் 227 நாட்கள் (1985). பெண்களில் லோட்டி டொட் 15 வருடங்கள் 285 நாட்கள் (1887).

அதிகூடிய வயதில் சாம்பியன் ஆனவர்கள்: ஆண்களில் ஏ.டபிள்யு கோர் 41வரு. 182 நாட்கள் (1909). பெண்களில் கோர்லொட் ஸ்டெர்ரி 37வரு. 282 நாட்கள் (1908)இல்.

### ஆஷஸ் போட்டிகள்

இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான ஆஷஸ் டெஸ்ட் தொடர் ஜூலை 5ஆம் திகதி ஆரம்பமாகிறது.

போட்டிகளின் விவரம்:

முதல் டெஸ்ட்: ஜூலை 5-9 எட்பஸ்டன்
2ஆம் டெஸ்ட்: ஜூலை 19-23 லோர்ட்ஸ்
3ஆம் டெஸ்ட்: ஆகஸ்ட் 2-6 ட்ரென்ட் பிரிட்ஜ்
4ஆம் டெஸ்ட்: ஆகஸ்ட் 16-20 ஹெடிங்லி
5ஆம் டெஸ்ட்: ஆகஸ்ட் 23-27 ஓவல்

## தேசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகளில்
# திறமை காட்டிய திருமலை வீரர்

தேசிய கனிஷ்ட பிரிவு மெய்வல்லுநர் போட்டிகள் அண்மையில் கொழும்பு சுகததாஸ அரங்கில் நடைபெற்றன.

1500க்கும் அதிகமான வீரர்களும் வீராங்கனைகளும் இதில் பங்குபற்றினர்.

16,18,20 ஆகிய வயதுப் பிரிவுகளில் இப்போட்டிகள் நடைபெற்றன.

இதில் 16 வயதின் கீழ் பிரிவில் ரி.ரஜன் 200 மீற்றர், 400 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் முதலாமிடம் பெற்று அனைவரது கவனத்தையும் ஈர்த்தார். 100 மீற்றர் ஓட்டத்தில் இவர் இரண்டாமிடத்தைப் பெற்று கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிகளில் அவர் 200 மீற்றரை 23.3 செக்கன்களிலும், 400 மீற்றரை 52.0 செக்கன்களிலும், 100 மீற்றரை 11.6 செக் கன்களிலும் ஓடி முடித்தார்.

அண்மைக்காலத்தில் வேகமாக முன் னேறி வரும் இளம் குறுந்தூர ஓட்ட வீரராக ரஜன் கருதப்படுகிறார்.

கடந்த செப்டம்பர் மாதம் நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்டப் போட்டியில் 15 வயதின் கீழ் பிரிவில் இவர் பங்குபற்றினார். அதில் 200 மீற்றர் ஓட்டத்தில் 24.1 செக்கன்களில் ஓடி மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

அதைத் தொடர்ந்து ஒக்டோபர் மாதம் வென்னப்புவையில் நடைபெற்ற பாடசாலை மெய்வல்லுநர் சங்கத்தின்போட்டிகளில் பங்குபற்றி 200, 400 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்றிருந்தார்.

இதில் 200 மீற்றரை 23.5 செக்கன்களிலும் 400 மீற்றரை 54.6 செக்கன்களிலும் ஓடியிருந்தார்.

கடந்த 22-24ஆம் திகதிவரை நடைபெற்ற தேசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகளில் இவர் திருமலை மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தின் சார்பில் பங்குபற்றினார்.

இம்முறை திருமலை மாவட்டத்திலிருந்து 4 வீரர்களும் 6 வீராங்கனைகளும் பங்குபற்றினர்.

இவர்களில் 16 வயதின் கீழ் பிரிவில் 27.3 மீற்றர் தூரம் ஈட்டி எறிந்த கே. மனோரூபி இரண்டாமிடத்தைப் பெற்றார்.

20 வயதிற்குட்பட்டோர் பிரிவில் ஆர்.ரதீஷன் கோலூன்றிப் பாய்தலில் 3.40 மீற்றர் உயரம் பாய்ந்து மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். இவ்வனைவருக்கும் எஸ். விஜயநீதன் பயிற்சிகளை வழங்கி வருகிறார்.

இம்முறை தேசிய கனிஷ்ட பிரிவு போட்டிகளில் 18 புதிய சாதனைகள் ஏற்படுத்தப்பட்டன. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் அஸ்லி ஹேரத் இவ் விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

# மகளிர் கிரிக்கெட்டில் ஐ.சி.சி. ஆர்வம்

மகளிர் கிரிக்கெட் துறையை அபவிருத்தி செய்வதற்கு சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி.) திட்டமிட்டுள்ளது. இதன்படி சர்வதேச மகளிர் கிரிக்கெட் பேரவையுடன் (ஐ.டபிள்யூ.சி.சி.) இணைந்து, ஐ.சி.சி. புதிய நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்துள்ளது.

அதன் ஒரு பகுதியாக லினேட் லார்ஸன் என்பவர் 'மகளிர் கிரிக்கெட் பேரவையில் ஆராய்ச்சி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

12 மாத காலத்திற்கான இப்பணிக்காக மகளிர் கிரிக்கெட் பேரவைக்கு ஐ.சி.சி. நிதியுதவி வழங்கவுள்ளது.

மகளிர் கிரிக்கெட் பேரவைக்கு ஐ.சி.சி நிதியுதவி வழங்குவது இதுவே முதற் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

"ஐ.டபிள்யு-ஐ.சி.சி. ஆகியவற்றுக்கிடையிலான எதிர்கால உறவுகளையும் இத் திட்டம் ஆராயவுள்ளது."

இவ்வாறு ஐ.சி.சியின் அபிவிருத்தி முகாமையாளர் அன்ரூ ஏட் கூறுகிறார்.

லினேட் லார்சன் அவுஸ்திரேலியாவின் முன்னாள் கிரிக்கெட் வீராங்கனை ஆவார். 1986 இல் அவ்வணிக்குத் தலைமைதாங்கினார்.

1998 இல் நடைபெற்ற மகளிர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் லினேட் லார்சன் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி சாம்பியனாகியமை குறிப்பிடத்தக்கது.

# போதை மருந்து வேட்டை

வோஷிங்டனில் ஒதுக்குப்புறமான பகுதியொன்றிலுள்ள அந்தக் கல்லறைத் தோட்டத்தில் மிகவும் அமைதியான முறையில் அந்தச் சவ அடக்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ஒரு காலத்தில் மிகவும் பிரபலம் பெற்றிருந்த 'பொப்'இசைப் பாடகன் ஹாரிஸின் இறுதிச்சடங்கு அது. அளவுக்கு அதிகமான போதை மருந்தை உட்கொண்டு இறந்துபோயிருந்தான் அவன். அவனது இறுதிச்சடங்கில் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலான எண்ணிக்கையானோரே கலந்து கொண்டிருந்தனர்.

அவனது இளம் மனைவி மார்த்தா அழுது அழுது வீங்கிப்போன முகத்துடன் நின்று கொண்டிருந்தாள். அவளுக்குச் சற்றுப் பின் புறமாக இன்ஸ்பெக்டர் டேவிஸ் மற்றும் அவரது மனைவி ஸ்டெல்லா ஆகியோர் நின்று கொண்டிருந்தனர்.

இன்ஸ்பெக்டர் டேவிஸின் மனைவி, ஹாரிஸின் தீவிர ரசிகை. அவளின் வற்புறுத்தலின் பேரிலேயே இன்ஸ்பெக்டர் டேவிஸ் தனது அவசர கடமைகளை ஒதுக்கிவிட்டு இந்த மரணச் சடங்கில் கலந்து கொண்டிருந்தார்.

சடங்குகள் முடிந்து ஹாரிஸின் உடல் புதைக்கப்பட்டதும் மார்த்தாவிடம் விடைபெற்றுக் கொண்டு ஒவ்வொருவராகப் புறப்பட ஆரம்பித்தனர். இன்ஸ்பெக்டர் டேவிஸும், ஸ்டெல்லாவும் மார்த்தாவுக்கு ஆறுதல் கூறிவிட்டுப் புறப்பட்டனர்.

அப்போதுதான் இன்ஸ்பெக்டர் அந்த இரு நபர்களையும் கவனித்தார். மார்க், ரோக்கோ என்ற பெயர்களைக் கொண்ட அந்த இருவரும் போதை மருந்துக் கடத்தல் விவகாரங்கள் பலவற்றோடு சம்பந்தப்பட்டவர்கள். அவர்களைச் சிறையில் அடைப்பதற்கு முறையான ஆதாரங்கள் கிடைக்காததால் அந்த வழக்குகளிலிருந்து தப்பித்து வெளியே உலாவிக் கொண்டிருந்தார்கள்.

அருகிலிருந்த ஹாரிஸின் உறவினர் ஒருவரிடமிருந்து அந்த இரு நபர்களும் ஹாரிஸின் நெருங்கிய நண்பர்கள் என்பதை அறிந்து கொண்டார் இன்ஸ்பெக்டர். அவரது மனதில் ஹாரிஸைப் பற்றியும் சிறியதொரு சந்தேகம் முளைவிட ஆரம்பித்தது.

* * *

மறுநாள் காலை. முன்னைய தினம் ஹாரிஸின் இறுதிச் சடங்கு நடைபெற்ற அதே கல்லறைத் தோட்டத்தில் பொலிஸார் நிறைந்திருந்தனர். முதல்நாள் அடக்கம் செய்யப்பட்ட ஹாரிஸின் சடலம் சவப்பெட்டியோடு காணாமல் போயிருந்தது.

ஹாரிஸின் ரசிகர்கள் அவனது உடலை எடுத்துச் சென்றிருக்கலாம் என்று சிலர் கருத்துத் தெரிவித்தனர்.

ஆனால் அந்தக் கருத்துக்களில் இன்ஸ்பெக்டர் டேவிஸுக்கு உடன்பாடு இருக்கவில்லை. இந்தப் பிணக்கடத்தலில் ஏதோ வில்லங்கமான விவகாரம் இருப்பதாக அவர் கருதினார்.

அன்று மதியம் நகரின் ஒதுக்குப்புறப் பகுதியிலிருந்த குப்பை மேட்டிலிருந்து ஹாரிஸின் உடல் கண்டெடுக்கப்பட்டது.

இன்ஸ்பெக்டர் டேவிஸின் எண்ணம் சரியாகி விட்டது. ரசிகர்கள் ஹாரிஸின் உடலைக் கடத்தியிருந்தால் இப்படிக் குப்பைமேட்டில் எறிந்திருக்கமாட்டார்களே!

* * *

இன்ஸ்பெக்டரின் ஜீப் ஹாரிஸின் வீட்டினுள் நுழைந்த போது மார்க், ரோக்கோ இருவரும் அந்த வீட்டினுள்ளிருந்து வெளியேறிக் கொண்டிருந்தார்கள். அவரைக் கண்டதும் இலேசாகப் புன்னகைத்துவிட்டு நழுவி விட்டார்கள்.

'இந்த இரண்டு நச்சுப் பாம்புகளும் இங்கே சுற்றிக் கொண்டிருக்கின்றனவே' என்று எண்ணியவாறு உள்ளே சென்றார் அவர்.

மார்த்தா அழுதுகொண்டிருந்தாள். இன்ஸ்பெக்டரைக் கண்டதும் அவசர அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டு அவரை வரவேற்றாள்.

"இப்போது வெளியே போகிறார்களே இருவர், அவர்கள் உங்களை ஏதும் துன்புறுத்தினார்களா மிஸிஸ் ஹாரிஸ்?"

"..................." மார்த்தாவிடமிருந்து பதிலேதும் வரவில்லை. அவள் விசும்பத் தொடங்கினாள். இன்ஸ்பெக்டர் அவளைச் சமாதானப்படுத்திய பின்னர் மார்த்தா மெல்லப் பேச ஆரம்பித்தாள்.

"என்னுடைய கணவரிடம் ஒரு பார்சலை அவர்கள் கொடுத்தார்களாம். அதைக் கேட்டு என்னைத் தொந்தரவு செய்கிறார்கள். இவர்கள் தான் ஹாரிஸின் உடலையும் எடுத்துச் சென்று குப்பைமேட்டில் வீசியிருப்பார்கள் என்று நினைக்கிறேன்."

"நீங்கள் கவலைப்படாதீர்கள். இனியும் அவர்கள் உங்களைத் தொந்தரவு செய்தால் கூறுங்கள். உங்களுக்குப் பொலிஸ் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்கிறேன்."

"நன்றி இன்ஸ்பெக்டர். நான் இந்த வீட்டை விற்று விட்டு தென் பகுதியிலுள்ள எனது சொந்த ஊருக்குச் சென்று விடலாம் என்று இருக்கிறேன். அவர் இல்லாத வீட்டில் தனியாக வாழ எனக்கு இஷ்டமில்லை."




"நல்லது. நான் ஒரு தடவை உங்கள் வீட்டைச் சுற்றிப் பார்க்கலாமா?"


"தாராளமாக. வாருங்கள் நானே சுற்றிக்காட்டுகிறேன்."

வீட்டைச் சுற்றிப்பார்த்த இன்ஸ்பெக்டர் இறுதியாக ஹாரிஸின் அலுவலக அறைக்கு வந்து சேர்ந்தார்.

"மேடம் எனக்கு குடிப்பதற்குக் கொஞ்சம் தண்ணீர் தருவீர்களா?"

"இதோ எடுத்து வருகிறேன்..."

மார்த்தா அந்த இடத்தை விட்டு அகன்றதும் இன்ஸ்பெக்டர் மிக வேகமாகச் செயற்பட்டார். ஹாரிஸின் அலுவலக அறையில் அவனது நண்பர்களான இருபோக்கிரிகளைப் பற்றிய தடயங்கள் ஏதாவது சிக்காதா என்பதே அவரது தேடலின் நோக்கமாக இருந்தது. அவ்வாறு தேடியவரிடம் ஒரு பத்திரம் அகப்பட்டது.




அது ஹாரிஸின் மரண அத்தாட்சிப் பத்திரம். டாக்டர் மோஸஸ் என்பவர் வழங்கியிருந்த அந்தப் பத்திரத்தில் ஹாரிஸ் மாரடைப்பால் இறந்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் பிரேத பரிசோதனையின் பின்னர் டாக்டர்கள் சமர்ப்பித்த மரண அறிக்கையில் ஹாரிஸ் போதை மருந்தை அளவுக்கு அதிகமாகப் பாவித்ததால் மரணம் சம்பவித்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

"எங்கேயோ உதைக்கிறதே! ஒருவனுடைய மரணத்துக்கு இருவேறு காரணங்களும் — இருவேறு மரணச் சாட்சிப் பத்திரங்களுமா?" இன்ஸ்பெக்டர் தனக்குத்தானே இந்தக் கேள்வியைக் கேட்டுக்கொண்டிருந்தபோது மார்த்தா தண்ணீர் கிளாசுடன் உள்ளே வந்தாள்.

"எங்கேயோ உதைக்கிறதே! ஒருவனுடைய மரணத்துக்கு இருவேறு காரணங்களும் — இருவேறு மரணச் சாட்சிப் பத்திரங்களுமா?" இன்ஸ்பெக்டர் தனக்குத்தானே இந்தக் கேள்வியைக் கேட்டுக்கொண்டிருந்தபோது மார்த்தா தண்ணீர் கிளாசுடன் உள்ளே வந்தாள்.

தண்ணீரைக் குடித்து விட்டு நன்றி கூறிக் கிளம்பிச் சென்றார் இன்ஸ்பெக்டர் டேவிஸ். அவரது உள்ளத்தைப் பல கேள்விகள் குடைந்து கொண்டே இருந்தன.

* * *

டாக்டர் மோஸஸை விசாரணை செய்தபோது சில உண்மைகள் தெரியவந்தன.

முதலில் தனக்கும் இந்த விவகாரத்துக்கும் சம்பந்தமில்லை என்று மறுத்தார் டாக்டர். ஆனால் இன்ஸ்பெக்டர் அவரே கொடுத்திருந்த மரண அத்தாட்சிப் பத்திரத்தைக் காட்டியதும் வழிக்கு வந்து உண்மைகளைக் கூறினார்.

"நான் ஹாரிஸிடம் பெரும் தொகைப் பணத்தைக் கடனாக வாங்கியிருந்தேன். அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்க வழியில்லாமல் திணறிக் கொண்டிருந்தேன். அந்த வேளையில்தான் ஹாரிஸ் என்னிடம் வந்து தான் கூறுவதுபோல் தனக்கு மரண அத்தாட்சிப் பத்திரம் ஒன்றை ஏற்பாடு செய்து தரும்படி கேட்டான்.

"அவ்வாறு செய்து தந்தால் எனது கடன் பத்திரங்களைத் திருப்பிக் கொடுத்து விடுவதாகவும் சொன்னான்" இப்படி தான் மரண அத்தாட்சிப் பத்திரம் கொடுக்க நேர்ந்த சம்பவத்தை விவரித்தார் டாக்டர்.

'டாக்டர் மோஸஸின் கூற்றுப்படி ஏதோ ஒரு பெரிய திட்டத்துக்காக தனது மரண அத்தாட்சிப் பத்திரத்தை முற்கூட்டியே பெற்றுவைத்திருந்திருக்கிறான் ஹாரிஸ். ஆனால் அவன் எதிர்பாராத விதத்தில் மரணம் சம்பவித்திருக்கிறது. இது தற்செயலான மரணமா? அல்லது அவன் கொலை செய்யப்பட்டானா? அல்லது தற்கொலையா?' இன்ஸ்பெக்டர் தனக்குத்தானே பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டார்.

* * *

மறுநாள் இரவு. ஹாரிஸின் வீட்டினுள் —

"ஏய் மார்த்தா. நாங்கள் கொடுத்த பார்சலை எங்கே மறைத்து வைத்திருக்கிறாய் என்று கூறிவிடு. இல்லையேல் ரோக்கோவின் கையிலிருக்கும் கத்தி உன் கழுத்தை அறுத்துத் தள்ளிவிடும்!" என்று மார்த்தாவை மிரட்டிக் கொண்டிருந்தான் மார்க்.

"எனக்கு எந்தப் பார்சலைப்பற்றியும் தெரியாது..." மார்த்தா பயந்து நடுங்கியபடி பதிலளித்தாள்.

"ரோக்கோ! இவள் வழிக்கு வரமாட்டாள். நீ உன் வேலையைக் காட்டு!" மார்க் கடுப்புடன் கூறினான்.

ரோக்கோ தன் மஞ்சள் பற்களைப் பயங்கரமாக இளித்துக் காட்டியபடியே மார்த்தாவை நெருங்கினான். அவள் கன்னத்தில் கத்தியை வைத்தான். கத்தியின் அழுத்தம் அவள் கன்னத்தைக் கன்றிப் போக வைத்தது.

மார்த்தா நடு நடுங்கினாள். அந்தக் கிராதகர்கள் தன்னைக் கொலை செய்யவும் அஞ்சமாட்டார்கள் என்பது அவளுக்கு நன்கு புரிந்தது.

"என்னை ஒன்றும் செய்யாதீர்கள். உண்மையைக் கூறிவிடுகிறேன்."

"ஹாரிஸ் உங்களுடன் கூட்டாக போதை மருந்துக் கடத்தலில் ஈடு பட்டது எனக்கும் தெரியும். ஒரு நாள் அவர் என்னிடம் இனி தான் இந்தக் கடத்தலில் ஈடுபடப் போவதில்லை என்றும், இறுதியாக நீங்கள் கொடுத்த பார்சலை விற்று விட்டுப் பணத்தோடு என்னையும் அழைத்துக் கொண்டு வேறு இடத்திற்குப் போய் வாழப்போவதாகவும் கூறினார்."

மார்த்தா நிறுத்தி நிதானிக்க மார்க் தொடர்ந்தான் —

"அதற்காக தான் இறந்து விட்டதாக நாடகமாடவும் தீர்மானித்தான். சவப்பெட்டி யில் தனது உடலுக்குப் பதிலாக போதை மருந்துப் பார்சலை வைத்து புதைத்து விடுவதென்றும், பின்னர் அதைக் கிளறி எடுத்துக் கொண்டு தலைமறைவாகி விடுவதென்றும் திட்டம் தீட்டினான்."

"ஆனால் சவப்பெட்டியை நாங்கள் திறந்த போது அவனது உடல்தானே அங்கே இருந்தது?" என்றான் ஆத்திரத்துடன் ரோக்கோ.

"எதிர்பாராமல் அவர் போதை மருந்தை அதிகமாகப் பாவித்து இறந்து போய்விட்டார்" மார்த்தா தழுதழுத்த குரலில் கூறினாள்.

"அவன் இறந்துபோனால் என்ன? அந்தப் பார்சல் எங்கே என்று உனக்குத் தெரியும் தானே?" மார்க்கின் குரல் அதிகாரத்துடன் ஒலித்தது.

"இல்லை. அதைப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அது ஹாரிஸ் மட்டுமே அறிந்த ரகசியம்."

"ரோக்கோ உன் வேலையைக் காட்டு. வேறு வழியில்லை" மார்க் ஜாடை செய்தான்.

ரோக்கோ மார்த்தாவை சட்டென நெருங்கி அவள் கழுத்தை அழுத்திப் பிடித்தான். அவனது கண்கள் கோபத்தையும் காமத்தையும் ஒருங்கே வெளிப்படுத்தின. போதை மருந்துகளுடனேயே வாழ்ந்து பழகிய அவனுக்கு மார்த்தாவின் அழகு வெறியேற்றியது. மார்க்கின் அனுமதியும் கிடைத்துவிட்டது பிறகென்ன?

மார்த்தாவைப் பிடித்து தரையில் தள்ளி அவள்மேல் படர்ந்தான். மார்த்தாவின் ஆடைகளைத் தாறுமாறாகக் கிழித்தெறிந்தான். அவனது மூர்க்கத்தனத்தைத் தாங்க முடியாத மார்த்தா துவண்டு போனாள். எதிர்த்துப் போராடவும் திராணியில்லாமல் தவித்தாள்.

அப்போது எதிர்பாராத இடத்திலிருந்து உதவி வந்து சேர்ந்தது மார்த்தாவுக்கு. முதுகில் விழுந்த பலமான அடியால் சுருண்டு விழுந்தான் ரோக்கோ. இன்ஸ்பெக்டர் டேவிஸ் ஒரு கையில் துப்பாக்கியை ஏந்தியவாறு நின்று கொண்டிருந்தார். அவரைத் தொடர்ந்து வீட்டினுள் நுழைந்த பொலிஸார் ரோக்கோ, மார்க் இருவரையும் கைது செய்தனர்.

பயத்தினால் வெலவெலத்துப் போயிருந்த மார்த்தாவை ஆசுவாசப்படுத்தி உட்காரவைத்தார் இன்ஸ்பெக்டர். ஆசுவாசப்படுத்திக் கொண்ட மார்த்தாவை நோக்கி ஒரு குண்டையும் வீசினார், "மார்த்தா உன்னையும் கைது செய்கிறேன்" என்று.

* * *

ஹாரிஸின் மரணம் தொடர்பான விசாரணைகள் நீதிமன்றத்தில் நடைபெற்ற போது இன்ஸ்பெக்டர் டேவிஸ் பல உண்மைகளை வெளியிட்டார்.

ஹாரிஸ் போதைமருந்தை விற்றுப் பணத்தை எடுத்துக் கொள்ளத் திட்டம் தீட்டியபோது மார்த்தாவின் மனதில் வேறொரு திட்டம் உருவாகியிருக்கிறது.

மார்த்தா ஹாரிஸை விட வயதில் மிகவும் இளையவள். ஹாரிஸுடனான மணவாழ்வு அவளுக்கு திருப்தியைத் தரவில்லை. எனவே போதை மருந்தை விற்றுக் கிடைக்கும் பணத்தை தான் எடுத்துக் கொண்டு எங்காவது போய் உல்லாசமாக வாழ நினைத்தாள். ஹாரிஸ் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் போதை மருந்தை ஊசி மூலம் அதிகமாக ஏற்றி ஹாரிஸின் கதையை முடித்து விட்டாள்.

ஆனால் ஹாரிஸ் முன்னரே டாக்டர் மோஸஸிடம் மரண அத்தாட்சிப் பத்திரத்தைப் பெற்று வைத்திருந்தது அவளுக்குத் தெரியாது. அது இன்ஸ்பெக்டரிடம் சிக்கியது.

ஹாரிஸின் உடல் மீண்டும் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது மேலும் சில தடயங்கள் அகப்பட்டன. வீட்டை அண்டிய பகுதிகளிலும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது ஹாரிஸின் உடலில் போதை மருந்தைச் செலுத்த மார்த்தா பாவித்த ஊசி போன்றனவும் பொலிஸாருக்குக் கிடைத்தன.

கொலைக் குற்றத்துக்காக மார்த்தாவுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. போதை மருந்துக் கடத்தல் மற்றும் மார்த்தா மீதான கொலை முயற்சி ஆகிய குற்றங்களுக்காக மார்க், ரோக்கோ இருவருக்கும் தலா ஒன்பது வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

# நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்

# தேர்-தீர்த்தோற்சவ சிறப்பிதழ்



## அம்பாளின் அருட்கடாட்சம்

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று வளங்களும் கொண்ட ஒரு ஆலயம் பக்தர்களின் குறைதீர்க்கும் அருள் கடாட்சம் நிறைந்தது . நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயம் அத்தகைய கீர்த்தியைப் பெற்ற திருத்தலம் ஆகும்.

திரு மஞ்சத்தில் வீதி உலா வந்து நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் அருள்மாரி பொழியும் காலம் இது. ''பாமர ஜன பாலினி, துஷ்ட அனுக்ரக காரணி'' எனப் போற்றப் படுகின்றாள் நயினை உறைநாயகி ஸ்ரீ நாகபூஷணி.

வன்னி மரத்தைத் தல விருட்சமாகக் கொண்ட நாக பூஷணி அம்மனின் ஆண்டு மகோற்சவம் கடந்த மாதம் 21 ஆம் திகதி ஆரம்பமானது. இம்மாதம் 3ஆம் திகதி சப்பறத் திருவிழா, 4ஆந் திகதி தேர்த்திருவிழா, 5ஆம் திகதி தீர்த்தத் திருவிழா நடைபெற்று 6ஆம் திகதி தெப்பத் திருவிழாவுடன் மகோற்சவம் இனிது நிறை வேறுகிறது.

ஈழமணித் திருநாட்டின் பூர்வீகக் குடிகள் நாகர்கள், அவர்கள் தான் ஆதி திராவிடர்களான தமிழர்கள் என்பது வரலாறு.

அந்த வரலாற்றின் சரித்திரச் சான்றாகி சுயம்பு மூர்த்தமாகத் தோன்றி நயினையில் எழுந்தருளி அருள் பாலிப்பவளே நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்.

நாகர்களால் வழிபாடு செய்யப்பட்ட பூர்வீக ஆலயம் இது. ஆலயத்தின் மூலக் கருவறையில் அம்பாளுடன் இணைந்த ஐந்து தலை நாக விக்கிரகம் பல்லாயிரம் ஆண்டு காலம் பழைமை வாய்ந்தது. — இவை விஞ்ஞான ஆய்வாளர்களின் மூலம் தெரியவந்த உண்மைகளாகும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மகத்துவத்துடன் திகழும் இவ் வாலயத்தின் சொத்துக்கள் செப்புத்தேர், பவளத்தேர் என்பனவே. — இவை அந்நிய ஆட்சியாளர்களால் அழிக்கப்பட்டன.

ஆயினும் அம்பாள் ஆலய வடகிழக்கு கரையில் அமைந்திருந்த ''பாம்பு சுற்றிய கல்'' ''கருடன் கல்'' ஆகிய கடற்பாறைகளை அந்நியரால் அழிக்க முடியவில்லை.

அவை வரலாற்றுச் சின்னங்களாகக் காட்சி தருகின்றன.

நயினை நாகபூஷணி அம்பாளின் வருடாந்த மகோற்சவமான திருவிழா 1960 ஆம் ஆண்டுக்கு முன் 11 தினங்களே நடைபெற்றன. இருந்தும் அன்றைய அறங்காவலர் சபையின் தலைவராக இருந்த முன்னாள் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் ம.ஸ்ரீகாந்தாவின் தலைமையில் தான் அம்பாளின் சித்திரத்தேர் நிர்மாணிக்கப்பட்டது.

அம்பாளின் வருடாந்த மகோற்சவ தினம் 16 தினங்களாக மாற்றப்படுவதற்கு முன் 4 ஆவது திருவிழா கொழும்பு வாழ் நயினை வர்த்தகர்களின் திருவிழாவாக நடைபெற்றது. இத்திருவிழாவே பின்னர் மஞ்சத் திருவிழாவாக மாற்றம் செய்யப்பட்டு அழகிய திருமஞ்சம் செய்யப்பட்டு 12.07.1981ல் வெள்ளோட்டம் நடைபெற்றது.

அகிலத்தில் வாழும் அனைத்து மக்களுக்கும் தன் அருட்கடாட்சத்தை நல்கும் நயினை ஸ்ரீநாக பூஷணி அம்பாளின் மகோற்சவம் சிறப்பாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

1986ஆம் ஆண்டு நிகழ்ந்த அசம்பாவித சம்பவங்களின் போது நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயம் பாதிக்கப்பட்டது. அம்மன் திருமஞ்சம், விநாயகர் , சுப்பிரமணியர், தேர்கள், கிழக்குக்கோபுரவாசல் கதவுகள் ஆகியன தீக்கிரையாயின.

அறங்காவல் சபையினர் நயினை அம்மன் அடியார்களின் உதவியுடன் ஆலயப்புனரமைப்பு வேலைகளைப் பூர்த்தி செய்தனர். அம்பாள் மீண்டும் தமது புத்திரர்கள் தம்மோடு தேரேறி பவனிவரும் காட்சியை அடியார்களுக்கு வழங்குகிறாள்.


RETINA INSTITUTE OF BUSINESS STUDIES
Kids Computing
MS Office
Diploma in Computer Studies
Graphic Designing
Web Designing
Tofel
Spoken English Classes
2 1/2, Edward Lane, Colombo - 03.
Tel: 507781, 507782

RETINA RECRUITING
வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஸ்தாபனம்
ஆண், பெண் இருபாலாருக்குமான வேலைகள்
Cyprus, Dubai, Qatar, Saudi-Arabia
மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தொழில் பெற்றுத் தருவோர்
RETINA RECRUITING
2 1/2, Edward Lane, Colombo - 03.
Tel: 507781, 507782

RASI SILKS
Wellawatte
திருமணம் மற்றும்
சகல வைபவங்களுக்கும்
ஏற்ற பட்டுப்புடவைகளை
உங்கள் தெரிவுக்கேற்ப
பல்வேறு டிசைன்களில்
மலிவான விலையில்
பெற்றுக்கொள்ள வெள்ளவத்தை
RASI SILKS
No.6&10, 53rd Lane, (off HAMPDEN LANE)
Wellawatte, Colombo - 06. Tel : 500973.
WE HAVE NO BRANCHES

OASISS Rest
Air Conditioned & Non A/C Rooms With
T.V, Telephone & Attached Bathrooms
IDD Calls, Local Calls, Fax, Bridging Calls
No.135, Maliban Street, Colombo 11, Sri Lanka.
Tel : 338437, 433225, 074-716998

Dealers in 22kt Gold Jewellery
தங்க நகை உலகில் மங்கா
புகழ் பெற்ற ஸ்தாபனம்
அன்றும் இன்றும் என்றும்
22 கரட் நகைகளுக்கு
Sangeetha Jewels
335C, Galle Road, Wellawatte,
Colombo - 06. Tel : 500682, 585321

Hotel Westeern (Pvt) Ltd
Sea Side Hotel
Located at 1/4 Km away from Colombo's best shopping Complex Majestic City Centre
Facilities Are:
A/C Rooms, Telephone, I.D.D., T.V., Mini Bar, Restaurant, Bar, Room service, Pool Tables, A Port Transfers, Rent-A-Car and Transport.
Food
Eastern, Western, Indian and Sri Lankan Cuisine.
Tourist Hotel Approved by Ceylon Tourist Board

EESTEE Rest
Air Conditioned and Non A/C Rooms With
T/V, Telephone & Attached Bathrooms
IDD Calls, Local Calls, Fax, Bridging Calls,
Laminating Service & Photo Copy
No.27, Jaya Road, Bambalapitiya,
Colombo-4. Sri Lanka.
Tel : 599190, 599191 Fax : 594163
(Near Manaperuma Car Sale)

POOBALASINGHAM BOOK DEPOT
Importers, Exporters, Sellers &
Pbulishers of Books, Stationaries and News Agent
TRUST COMPLEX
340, 352, Sea Street,
Colombo - 11.
Tel: 422321
Fax: 337313
e-mail: pbdho@sltnet.lk
Branch:
309 A - 2/3, Galle Road,
Wellawatte,
Colombo - 06.
Tel: 074 - 515775
4 A, Hospital Road,
Bus Stand, Jaffna

MAKKMILAN Book Depot
Book - Sellers - Stationers & Puplishers
No.195, Olcott Mawatha, Colombo - 11.
Tel : 449565, Fax : 0041-449565.

AJANTHA REST INN
AJANTHA HOTELS LTD.
Luxury Rooms and lodging, Local Calls & IDD T.Phone Service
Colombo - Batticaloa Luxury Bus Service
125, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-11.

SATHA VIDEO
Photo Graphers & Video Graphers Album
And Duro Gard Makers and CD Transfer
SATHA VIDEO
MARUTHY SERVICES
Orchard Building
7-2/8, Second Floor, Galle Road, Colombo-06.
Phone : 584191, Fax: 941-591812 Mobile : 077-304027, 077-681058

# உளவாளிகள் ஊடுருவல் புலிகளுக்கு புதிய சவால்

## தகவல் தருமாறு கிழக்கில் ஒலிபெருக்கி மூலம் கோரிக்கை

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகளைக் குறிவைத்துத் தாக்கும் செயல்களில் படையினரும், படையினருடன் இணைந்து செயற்படும் குழுவினரும் ஈடுபட்டுள்ளனர்.

சில வாரங்களுக்கு முன் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான பாவற்கொடிச் சேனைப் பகுதியில் கிளைமோர் தாக்குதல் மூலம் புலிகளின் உளவுப் பிரிவைச் சேர்ந்த தளபதி தரத்தில் உள்ள நிஷாம் என்பவர் கொல்லப்பட்டார்.

அதன் பின்னர் கடந்த 24ஆம் திகதி புலிகளின் பகுதியான புலிபாய்ந்த கல் பகுதியில் மயிலவெட்டுவான் என்னும் இடத்தில் உள்ள பிரதான வீதி ஓரமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த அமுக்கக் கண்ணிவெடி ஒன்று புலிகளால் கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

இதேபோன்று கன்னன்குடாப் பகுதியிலும் ஒரு கிளைமோர்க் குண்டை புலிகள் கண்டெடுத்தனர் என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனை அடுத்து உளவாளிகள் பற்றிய தகவல்களைக் கோரி புலிகளினால் ஒலிபெருக்கிமூலம் படுவான் கரைப்பகுதி எங்கும் பகிரங்க வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

''அன்பார்ந்த பொதுமக்களே! இராணுவத்தினர் கொடுக்கும் அற்ப சலுகைகளுக்காக இராணுவ உளவாளிகள் எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவி வெடிப் பொருட்களைப் புதைக்கின்றனர். இதற்காக சிலருக்குப் பணம் கொடுத்து அவர்களைப் பயன்படுத்துகின்றர்.

''எனவே எமது பகுதிகளில் சந்தேகத்துக்கிடமானவர்கள் அல்லது புதியவர்கள் நடமாடினால் அருகில் உள்ள புலிகளின் அலுவலகங்களில் அறிவிக்குமாறு பணிவாகவும் உரிமையாகவும் அன்பாகவும் வேண்டுகின்றோம்.''

இப்படி ஒலிபெருக்கி மூலமாகவும் துண்டுப்பிரசுரம் மூலமாகவும் புலிகள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து தமது பகுதிகளுக்கு வருவோரை புலிகள் தீவிரமாக விசாரணை செய்கின்றனர். அவர்களது பொதிகளும் கடுமையாகச் சோதனை செய்யப்படுகின்றன.

கிளைமோர்த் தாக்குதலில் கொல்லப்பட்ட நிஷாம் தொடர்பான விசாரணைகளை புலிகள் முடுக்கிவிட்டுள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் பலர் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்றும் சிலர் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்றும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான பண்டாரியாவெளியில் உள்ள ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வருடாந்த உற்சவத்துக்குச் சென்ற பொது மக்களில் சந்தேகத்துக்கு இடமானவர்களை புலிகள் விசாரணை செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயத்தில் புலிகளின் உறுப்பினர்கள் பரவலாக காணப்பட்டனர் என்றும்—

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இருந்து பத்தாயிரத்துக்கு மேற்பட்ட அடியார்கள் வந்து பொங்கல் பானைகளில் பொங்கி நாகதம்பிரான் ஆலய வருடாந்த பூசைகளில் கலந்து கொண்டனர் என்றும்— தெரிவிக்கப்படுகிறது.

—நேரன்

## மட்டக்களப்பில் நூலக வாரம்

கிழக்குப்பல்கலைக்கழகத்தின் நூலக வாரம் கடந்த 22 ஆம் திகதி பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் மா. செ.மூக்கையாவினால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

காலையில் பல்கலைக்கழக பதில் நூலகர் திருமதி தவமணி அருள்நந்தி தலைமையில் ஆரம்ப நிகழ்வுகள் நடைபெற்றன.

உதவி நூலகர் தீசன் ஜெயராஜின் வரவேற்புரையுடன் ஆரம்பமான நிகழ்வில் திருமதி தவமணி அருள்நந்தி தலைமை உரை நிகழ்த்தினார்.

நூலகக்குழுத் தலைவர் பேராசிரியர் மா. செ. மூக்கையா உரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து 'மஸ்டி இன்போம்'' சிறப்பிதழ் வெளியீடும் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கல்விப்பீட பேராசிரியரின் உரையும் இடம்பெற்றன.

ஆசிரியர்கள் சார்பில் நுண்கலைத் துறை விரிவுரையாளர் எஸ்.ஜெய்சங்கர் மாணவர் சார்பில் வணிக முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த எஸ். ராகுலன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

நன்றியுரையை நூலக உதவியாளர் பி. சுப்பையா நிகழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் இடம் பெற்றன.

இதில் யுனைட்டட் புத்தகசாலை, சக்திநூல் நிலையம், கொழும்பு ஜெயா புத்தக நிலையம், பூபால சிங்கம் புத்தகசாலை, மற்றும் இராமகிருஷ்ணமிஷன் புத்தகசாலை, குமரன் பதிப்பகம், இந்து சமய கலாசார பண்பாட்டலுவல்கள் அமைச்சின் வெளியீட்டு பிரிவு, சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் ஆகியவை கலந்து கொண்டன.

நூல் வெளியீட்டாளரும் எழுத்தாளருமான பௌசர், இலக்கியவாதி எஸ்.எல்.எம். ஹனிபா ஆகியோரது சேகரிப்புக்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

—சத்துருக்கன்

## குடிசன மதிப்பீட்டு பணிகள் இடைநிறுத்தம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் குடிசன மதிப்பீட்டை நடத்த வேண்டாம் என்று புலிகள் சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்களை எச்சரிக்கை செய்துள்ளனர்.

குடிசன மதிப்பீட்டுப்பணிகள், பயிற்சி வகுப்புக்கள் என பலதரப்பட்ட பணிகள் கடந்த மாதம் முதல் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுறுசுறுப்பாக மேற்கொள்ளப்பட்டுவந்தன.

புலிகளின் எச்சரிக்கை வெளியானதை அடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் செய்வது அறியாது திண்டாடுகின்றனர்.

இதனையிட்டு பிரதேச செயலர் ஒருவர் தெரிவிக்கையில் ''புலிகளின் இந்த எச்சரிக்கை தொடர்பாக நாம் மாவட்ட அரச அதிபருக்கும் மற்றும் அதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளோம். அவர்களின் முடிவு வரும் வரை குடிசனமதிப்பீட்டுப் பணியை இடை நிறுத்தியுள்ளோம்'' என்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிப்பளை, வெல்லாவெளி, வவுணதீவு, வாகரை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளாகவும் ஏனைய பிரிவுகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிகளாகவும் இருந்து வருகின்றன.

## கடலட்டை பிடிப்போரால் வயிற்றிலடி!

மட்டக்களப்பு கடற்பரப்பில் இரவு பகலாக கடலட்டை பிடிக்கும் தொழிலில் பலர் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாக இப்பகுதி மீனவர்கள் பலர் தமது தொழிலை இழக்கும் நிலை ஏற்பட்டிருப்பதாக முறையிடப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களாக கடல் அட்டை, கலர்மீன் பிடிக்கும் நடவடிக்கைகள் கல்லடி, நாவலடி, முகத்துவாரம், காத்தான் குடி, பூநொச்சி முனை ஆகிய பிரதேசங் களில் உள்ள கடற் பரப்பில் இடம்பெற்று வருகின்றன.

சுமார் 20 இயந்திரப் படகுகள் இரவு பகலாக இந்த தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

இதனால் அன்றாடம் வயிற்றுப் பிழைப்புக்காக மீன்பிடிக்கும் மீனவர்கள் அந்த கடற்பரப்பில் தொழில் செய்ய முடியாது பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடலட்டை, கலர் மீன் பிடிக்கும் நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும் என்றும்—

நூறு குடும்பங்கள் வரை பாதிக்கப் பட்டுள்ளன என்றும்—

கடல் அட்டை பிடிப்பது நிறுத்தப் படாவிடில் மீனவர் சங்கங்களை இணைத்துப் போராடப் போவதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.


LINK-Salt to taste LINK-Salt to taste LINK-Salt to taste

சிறந்த தரத்திற்கான சர்வதேச விருதுபெற்ற லிங்க் அயடீன் கலந்த உப்பு

Link Imports & Exports (Pvt)Ltd.

86/1, Chatham Street, Colombo - 01.

Tel : 321085 TeleFax : 435959E-Mail :link@scienceland.lk

161


## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 11.00-11.30 | | | | | | குட்டிச் சுட்டி | காலைக்கதிர் குட்டிச் சுட்டி |
| 11.30-12.00 | | | | | | | |
| 12.00-12.30 | | | | | | சின்னச்சின்ன ஆசைகள் | |
| 12.30-13.00 | | | | | | | |
| 13.00-13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கெண்ட் மெட்னி | சக்தி வீக்கெண்ட் மெட்னி |
| 13.30-14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00-14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30-15.00 | | | | | | | |
| 15.30-16.00 | | | | | | நலந்தானா | திரைத்தென்றல் |
| 16.00-16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | கோபி |
| 16.30-17.00 | சுப்பர் 10 | கலைச்சோலை | நம்மநேரம் | மீண்டும்மீண்டும் சிரிப்பு | திரை விமர்சனம் | அரட்டை அரங்கம் | நீங்கள் கேட்ட பாடல் |
| 17.00-17.30 | தமிழ் கார்ட்டூன் | தில்லானா தில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | தமிழ் கார்ட்டூன் | பூஞ்சோலை | சன் டி.வி நிகழ்ச்சிகள் |
| 17.30-18.00 | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | இளமைபுதுமை | சன் டி.வி நிகழ்ச்சிகள் |
| 18.00-18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா. | கங்கா ஜமுனா.. | பெப்ஸி உங்கள் சாய்ஸ் | காற்றாய் வருவேன் | ஆலோசனை நேரம் | இப்படிக்கு நீங்கள் |
| 18.30-19.00 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | புதுப்பாடல் | ஆனந்தபவன் |
| 19.00-19.30 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | சாவித்ரி | சப்தஸ்வரம் |
| 19.30-20.00 | சின்னத்திரை | தித்திக்கும் ஓசை | புஷ்பாஞ்சலி | சீமான்களே சீமாட்டிகளே | பணம், பெண் பாசம் | இளையகானம் | பஞ்சவர்ணம் |
| 20.00-20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30-21.00 | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | இயந்திரப்பறவை | ஜன்னல் |

# முஸ்லிம் காங்கிரஸ் கோஷ்டிகள் எம்.பி பதவி பறிப்பதில் கவனம்

முஸ்லிம் காங்கிரஸின் இரு தரப்பினரும் இப்போது ஒளித்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். எம்.பி. பதவி பறிப்புக்கு தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ரவூப் ஹக்கீம் கோஷ்டியில் அவரோடு இன்னும் ஆறு பேர்.


பேரியல் அஷ்ரப்

பேரியல் அஷ்ரப் கோஷ்டியில் அவரோடு இன்னும் 3 பேர்.

இவர்கள் நான்கு பேரையும் முஸ்லிம் காங்கிரஸில் இருந்து விலக்கிவிட்டதாக ஹக்கீம் கோஷ்டியினர் கூறுகின்றனர்.

ஆனால் தமக்கு அது சம்பந்தமான அறிவித்தல்கள் எதுவும் முஸ்லிம் காங்கிரஸிடம் இருந்து கிடைக்கவில்லை என்கிறார் பேரியல் அஷ்ரப் கட்சியில் உள்ளவர்களில் ஒருவரான மருதூர் கனி எம்.பி

மற்ற மூவருக்கும் கூட அப்படியான அறிவித்தல் எதுவும் போய்ச் சேரவில்லை என்றும் அவர் 'சுடர் ஒளி' நிருபரிடம் தெரிவித்தார்.

தாம் முஸ்லிம் காங்கிரஸின் ஆரம்ப கால உறுப்பினரும் காங்கிரஸின் மூத்த துணைத் தலைவரும் என்ற நிலையில் எதுவித மாற்றமும் இல்லை என்றும் அவர் சொன்னார்.

ஆனால் இவர்கள் முஸ்லிம் காங்கிரஸில் இருந்து விலக்கப் பட்டுவிட்டதை அடுத்து இவர்களை எம்.பி பதவியில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து வரப்படுவதாக ஹக்கீம் கோஷ்டியினர் தெரிவித்தனர்.

இந்த நால்வரையும் எம்.பி பதவியில் இருந்து நீக்குவதில் ஒரு சிக்கல் இருக்கிறது. அதை ரவூப் ஹக்கீம் சுட்டிக் காட்டினார்.

இவர்கள் நால்வரில் மூவர் பொதுஜன ஐக்கியமுன்னணி வேட்பாளர்களாக போட்டியிட்டு வெற்றிபெற்றவர்கள். ஒருவர் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியல் எம்.பியாக நியமனம் பெற்றவர்.

முஸ்லிம் காங்கிரஸில் இருந்தும் அதன் இணைக் கட்சியான தேசிய ஐக்கிய முன்னணியில் இருந்தும் (நுஆ) இந்த நால்வரும் நீக்கப்பட்டுவிட்டால் அவர்கள் தமது எம்.பி பதவியை இழந்து விட்டார்கள் என்று பொதுஜன ஐக்கிய முன்னணிக்குத் தான் அறிவிக்க வேண்டும்.


மருதூர் கனி

பொதுஜன ஐக்கிய முன்னணி செயலாளர் தான் அதை தேர்தல் ஆணையாளருக்கு தெரிவிக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் அவர்கள் பதவி இழப்பார்கள்.

இன்றுள்ள முறுகல் நிலையில் இந்த நால்வரும் எம்.பி பதவியை இழந்து விட்டார்கள் என்று பொதுஜன ஐக்கிய முன்னணி தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்குமா? இது தான் சிக்கல் என்றார் ரவூப் ஹக்கீம்!

ரவூப் ஹக்கீமுடன் எதிர்க்கட்சிக்கு சென்று விட்ட ஆறு பேரில் மூவர் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் சின்னத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர்களாக போட்டியிட்டவர்கள். அவர்கள் மூவரையும் பொதுஜன ஐக்கிய முன்னணி எப்போது எம்.பி பதவியிலிருந்து நீக்கும் என்று பேரியல் அஷ்ரப் கோஷ்டியினர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த மூன்று பேரும் மற்ற நால்வருடன் எதிர்க்கட்சி வரிசைக்குச் சென்று விட்டபோதிலும் இன்னும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்குப் பாதகமாக நடக்கவில்லை.

நாடாளுமன்றத்தில் அரசுக்கு எதிராக என்றைக்கு வாக்களிக்கிறார்களோ அன்றைய தினம் அவர்களின் எம்.பி பதவிக்குக் கத்தி வைக்கப்படும் என்று கூறப்படுகிறது.

ஆறாம் திகதி அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதமும் வாக்களிப்பும் நாடாளுமன்றத்தில் நடைபெறுகின்றன. மூன்று பேரும் அரசாங்கத்தின் பிரேரணையை ஆதரித்து வாக்களித்தால் அவர்களை எம்.பி பதவியிலிருந்து நீக்குவதற்கு எந்த முகாந்திரமும் கிடையாது. எதிர்த்து வாக்களித்தால் அவ்வளவுதான். எம்.பி பதவி பறிபோகலாம்.


ஹக்கீம்

இதற்கிடையில் ரவூப் ஹக்கீம் கோஷ்டியினர் ஏழு பேரில் ஆறு பேர் மக்கா சென்றுவிட்டார்கள். அவர்கள் எப்போது நாடு திரும்புவார்கள் என்பது பற்றி இன்னும் திட்டவட்டமான தகவல் இல்லை.

இப்போது நீதிமன்றத்தீர்ப்பை அடுத்து பேரியல் அஷ்ரப் தேசிய ஐக்கிய முன்னணித் தலைவர் பதவியில் இல்லை. அந்தப் பதவியையும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான ரவூப் ஹக்கீமே வகிக்கிறார்.

இரு கோஷ்டியினருக்குமிடையே கொழும்பில் சூடு தணிந்திருக்கிறது. ஆனால் வெளியிடங்களில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் ஆதரவாளர்களிடையே உரசல்கள் நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன.

– பாத்திமா ஷாதீரா

# சண்டையின்றிச் சமத்துவமாக வாழச் சமஷ்டிதான் ஒரே வழி

ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க ஒரு நேர்மையான அணுகுமுறை தேவை. இதுவரையில் எம்மை நாம் ஏமாற்றியது போதும். இனிமேலாவது விழிப்புணர்வுடன் நாம் செயலாற்றவேண்டும்.

சேர் பொன் இராமநாதன், சேர் பொன் அருணாசலம் ஆகிய இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் தமது இறுதிக்காலத்தில் சிங்கள வர்களால் ஏமாற்றப்பட்டு ஏக்க உணர்வோடு வாழ்ந்தார்கள்.

**கொழும்பிலுள்ள ''மார்கா'' நிறுவனத்தில் ''ஈழத்தமிழர்களின் அரசியல் வேட்கைகள்'' என்னும் தலைப்பில் மா.க. ஈழ வேந்தன் சொற்பொழிவாற்றினார். அவர் நிகழ்த்திய உரையின் சுருக்கம் இது.**

இலங்கைத் தேசிய காங்கிரஸை உருவாக்கிய சேர் பொன் அருணாசலம் ஏன் அதிலிருந்து பிரிந்து தமிழ்ப்பேரவையை உருவாக்கினார்? இவற்றுக்குரிய காரணங்கள் என்ன? டொனமூர்சீர்திருத்தங்களை ஏன் சேர்பொன் இராமநாதன் எதிர்த்தார்?

டொனமூர் என்னில் இனிமேல் தமிழர் இல்லை என்று கூறினார் இராமநாதன். போதிய பாதுகாப்பு தமிழருக்கு அற்ற நிலையில் டொனமூர் சீர்திருத்தச் சட்டத்தை நாம் ஏற்போமாயின் வெறிகொண்டகும்பலிடமே எமது ஆட்சி போய்ச்சேரும் என்று எச்சரித்தார். இச்சட்டம் எமக்கு 'சாவோலை' என மேலும் கூறினார்.

தீர்க்க தரிசனத்தோடு அவர் கூறிய கூற்றுக்கள் இப்போது மெய்ப்பிக்கப் பட்டுவிட்டன.

தமிழ் இனத்தின் தலைமைப் பீடத்தைப் பின்னர் ஏற்றுக்கொண்ட ஜீ.ஜீ. பொன்னம்பலம் சோல்பரி, தமிழினத்தின் ஆன்மாவைப் புதைக்க வந்துள்ளார் (Soulbury has come to bury this soul of the Tamils) என்று எச்சரித்தார். பல்மொழி, பல்லினம் வாழும் ஒரு நாட்டில் ஒற்றையாட்சி உதவாதென ஓங்கி ஒலித்தார்.

ஓர் இனம் தனது உரிமை பற்றிப் பேசுகையில் பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூறினார். விடுதலை என்பது ஓர் இனத்தின் பிறப்புரிமை என மேலும் வலியுறுத்தினார். தன் உரிமை நிலைநாட்டல் என்பது -- சுய நிர்ணயக் கோட்பாடு என்பது தமிழனுடைய பிறப்புரிமை என்று கூறினார்.

''தமிழர் தாயகம்'' என்ற கோட்பாட்டுக்கு சிங்கள இனம் ஒத்துப் போக வேண்டும். மாநில அரசுகளின் அதிகாரங்களில் மைய அரசு தலையிடக் கூடாது. மாநில அரசுகளைக் கலைப்பது என்ற பேச்சுக்கே இடமிருக்க கூடாது.

மைய அரசிடம் வெளிஉறவு அதிகாரங்களும், பாதுகாப்பு அதிகாரங்களும் மட்டும்தான் இருக்க வேண்டும். மற்றைய அதிகாரங்கள் அனைத்தும் தன்னாட்சி அமைப்புக்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும்.

இணைப்பாட்சி என்பது நாட்டைப் பிளவுபடுத்துவதோ அல்லது உருக்குலைப்பதோ அல்ல. அதிகாரங்களைப் பன்முகப் படுத்தும் ஒரு வழிமுறை ஆகும். இணைப்பாட்சியில் நாட்டின் அடிப்படை ஒற்றுமைக் காக்கப்படும். அத்தோடு இனக் குழுக்கள் தமது தனித்துவத்தையும் பேணிச் செயற்பட வாய்ப்பளிக்கப்படும்.

ஒற்றுமை என்பது ஒற்றை ஆட்சி அல்ல. இணைப்பாட்சி என்பது நாட்டைப் பிடிக்கும் முயற்சியும் அல்ல.

இணைப்பாட்சியில் இனிய வாழ்வு காண்போம் என்று செல்வநாயகம் கூறினார். அவர் அவ்விதம் கூறுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே ''கண்டியச் சிங்களவர்களும் கரையோரச் சிங்களவர்களும், தமிழர்களும் திட்டவட்டமான எல்லைப் பரப்புகளில் ஒன்றாக வாழ்ந்தனர். தமது மொழியை, தமது பண்பாட்டை, நாகரிகத்தைப் பேணிக் காத்தனர்.

இவ்விரு இனங்களும் இவற்றை முற்றாக இழந்து ஒன்றாக வேண்டும் என ஒருவன் கனவு காண்பானாயின் அவன் ஒரு பொறுப்பற்ற வெறியனாவான். (It is only a rash man who will envisage the merger of these two communities) என்று கடுஞ் சொல் கொண்டு அன்று எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா கூறினார்.

நாம் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் ஈழத் தமிழர் சிக்கலில் இந்தியா தனது பங்களிப்பைச் செய்தே தீர வேண்டும். ஆனால் அப்படிச் செய்கையில் இந்தியாவோடு பின்னிப்பிணைந்துள்ள தமிழக மக்களின் நலனையும் உணர்வையும் மதித்தே செயற்பட வேண்டும். தமிழக மக்களின் நலன் புறக்கணிக்கப்பட்ட நிலையில் இந்தியா எடுக்கும் எந்த முடிவும் பயன்தரமாட்டாது.

''இணைப்பாட்சியில் இனிய வாழ்வு காண்போம்'' என்று தந்தை செல்வா கூறிய சொற்கள் எமக்குத் தாரக மந்திரமாக விளங்கட்டும்.


சட்டத்தரணி பி.காராளசிங்கம் ஞாபகார்த்தமாக அண்மையில் வகுப்பறைத் தொகுதிகள் கொண்ட கட்டடம் சுதுமலை சின்மய பாரதி வித்தியாலயத்தில் திறந்து வைக்கப்பட்டது. இதனை நிர்மாணித்து வழங்கிய அவரது புதல்வரான இந்திரன் காராளசிங்கம் நாடாவை வெட்டி கட்டடத்தைத் திறந்து வைப்பதைப் படத்தில் காண்க. வித்தியாலய அதிபர் குபேரநாதன், பிராந்திய கல்விப் பணிப்பாளர் தனபாலசிங்கம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

# மலையக தமிழ்ப் பெண்ணுக்கு தலை நகரில் நிகழ்ந்த கொடூரம்

## ஜனாதிபதி என்ன நடவடிக்கை எடுத்தார் என்று தலைவர்கள் சீற்றம்

தலைநகரில் மலையகப் பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார். பொலிஸார் மீதும் படையினர் மீதும் இது தொடர்பாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பெண் ஒருவரின் ஆட்சியில் தமிழ்ப் பெண்கள் வடக்கு – கிழக்கில் மட்டும் அல்ல நாட்டின் எந்தப் பகுதியிலும் சுதந்திரமாக வாழ முடியாத நிலைமை உருவாகி இருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தொழிலுக்காகவும் மற்றும் தேவைகளுக்காகவும் தினமும் ஆயிரக்கணக்கான பெண்கள் வெளியில் சென்று வருகின்றனர்.

ஆனால் சோதனைச் சாவடிகளில் உள்ளவர்களின் கண்களுக்கு இந்த அப்பாவித் தமிழ்ப் பெண்கள் மட்டும் தானா தெரிகிறார்கள்? இது ஏன்? அவர்கள் சிறுபான்மையினர் என்பதாலா?

அவசர காலச்சட்டத்தைக் கையில் வைத்திருக்கிறது அரசாங்கம். அதையே தனது பாதுகாப்புக் கவசமாகப் பயன்படுத்தி வருகிறது.

பாலியல் குற்றச் செயல்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கும் வகையில் குற்றவியல் சட்டக்கோவை திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. விசேட சட்டவரைவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது ஏட்டளவில் மட்டுமே உள்ளது. செயலளவில் இல்லை.

வடக்கு– கிழக்கு யுத்தப் பிரதேசத்தில் பாடசாலை மாணவி கிருஷாந்தி முதல் பலர் காமவேட்டைக்குப் பலியாகி உள்ளனர். அச்சம் காரணமாகவும் அவமானம் காரணமாகவும் மூடி மறைக்கப்பட்ட சம்பவங்கள் அநேகம். இன்று அதிபாதுகாப்புப் பிரதேசமான கொழும்பிலேயே இது இடம் பெற்றுள்ளது.

''எம்மால் என்ன செய்ய முடியும்? இங்கு நடைபெறும் அட்டூழியங்களை சர்வதேச சமூகத்துக்கு அம்பலப்படுத்துவதைத் தவிர வேறு வழி இல்லை'' என்கின்றனர் தமிழ் அரசியல் வாதிகள்.

ஜூலை 6ஆம் திகதி வடக்கு – கிழக்கு மாகாணத்தில் ஹர்த்தால் நடத்தவும், கொழும்பில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தவும், மலையகத்தில் அதே தினம் சில மணி நேரம் வேலைப் பகிஷ்கரிப்பை மேற்கொள்ளவும் தமிழ், முஸ்லிம் , மலையக அரசியல் கட்சியினர் கூட்டாகத் தீர்மானித்துள்ளனர். இவர்களின் துணிச்சல் வரவேற்கத்தக்கது.

சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட பல சர்வதேச அமைப்புகள் தலைநகரில் மலையகப் பெண்ணுக்கு நிகழ்ந்த கொடூரத்தை வன்மையாகக் கண்டித்துள்ளன.

இதற்கு இலங்கை அரசினதும் அதன் தலைவி என்ற வகையில் ஜனாதிபதியினதும் நிலைப்பாடு என்ன?

''சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்'' என்ற உத்தரவாதம் மட்டுமே.

உத்தரவாதம் அளித்த ஜனாதிபதி என்ன நடவடிக்கை எடுத்தார்? பாதுகாப்புப் படையினரையும் பொலிஸாரையும் பாதுகாப்பான இடங்களுக்கு இடமாற்றம் செய்தார் அவ்வளவுதான்.

யுத்த பிரதேசத்தில் குற்றச் செயல்களில் ஈடுபட்ட பலர் தண்டனை, என்ற பெயரில் தமது சொந்த இடங்களுக்கே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இது தான் குற்றவாளிகளுக்கு வழங்கப்படும் தண்டனையா? இதனால் குற்றச் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டதா? இந்தக் கேள்விகளுக்கு இன்னமும் விடை கிடைக்கவில்லை.

பம்பலப்பிட்டிப் பொலிஸ் நிலையத்தில் இரண்டு யுவதிகள் பட்டப்பகலில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர் என்று குற்றஞ் சாட்டப்பட்டது.

''இப்பாலியல்வல்லுறவுச் சம்பவம் பொலிஸ் நிலையத்தில் இடம்பெறவில்லை, பொலிஸாருக்கும் இச்சம்பவத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை'' என பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமர்ப்பித்த அறிக்கையை பிரதி பொலிஸ்மா அதிபரும் ஏற்றுக்கொண்டு விட்டார்.

இதன்மூலம் குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. மாறாக அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூடு தணியும் முன்னரே மருதானையில் மலையகப் பெண் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது. பசறை கோணகலைத் தோட்டத்தைச் சேர்ந்தவர் இப்பெண். இரண்டு பிள்ளைகளுக்குத் தாயார்.

குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக வேலை செய்யும் இப்பெண் வேலை முடிந்து வீடு திரும்பும் நேரத்திலேயே இந்த பாலியல் வல்லுறவுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பம்பலப்பிட்டி சம்பவத்தில் தொடர்புடையவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண்டனை வழங்கப்பட்டிருந்தால், மருதானை பாலியல் வல்லுறவில் ஈடுபட்டவர்களுக்கு இந்தளவு துணிச்சல் ஏற்பட்டிருக்காது என மலையகத் தலைவர்கள் பலர் குற்றஞ்சாட்டி உள்ளனர்.

இ.தொ.கா பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான், மலையக மக்கள் முன்னணி அமைப்பாளர் மனோ கணேசன் உட்பட பல தலைவர்களும் மற்றும் இந்து மாமன்றம் உட்பட பல தமிழ் அமைப்புக்களும் தமிழ்கட்சிகளும் இந்தச் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ளன.

இது தொடர்பாக அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவிக்கையில்:

''மருதானைச் சம்பவம் அநாகரிகமான, காட்டு மிராண்டித்தனமான ஒன்றாகும். தமிழ்ப் பெண்கள், தலைநகரில் பயம் இன்றி நடக்க முடியாதநிலை உருவாகி உள்ளது.

''சொந்த இடங்களில் தொழில் கிடைக்காமல் குடும்பத்தைக் காப்பாற்ற கொழும்பில் வேலைக்கு வந்த இரண்டு பிள்ளைகளின் தாய் பலாத்காரப்படுத்தப்பட்டுள்ளார்.

''தமிழ்ப் பெண்கள் வெளியில் நடமாட முடியாமல் வீட்டுக்குள்ளேயே முடங்கிக்கிடக்க வேண்டிய அச்ச உணர்வை இச்சம்பவம் ஏற்படுத்தியுள்ளது.

''வேலியே பயிரை மேய்ந்த கதையாக பொலிஸாரே இந்தக் காட்டு மிராண்டித்தனமான செயலைப் புரிந்துள்ளமை வேதனைக்குரியது. இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதோடு, இனிமேலும் இப்படியான சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்'' என்றார்.

மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் தெரிவிக்கையில்—

''சம்பந்தப்பட்டவர்கள் மீது விசாரணை மேற்கொள்ளப்படும். குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவோம். எவராக இருந்தாலும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர் என்ற ஜனாதிபதியின் வாய்வார்த்தைகளை நாம் எதிர்பார்க்கவில்லை.

''பெண்மணி ஒருவரால் ஆட்சி செய்யப்படும் நாட்டில் தமிழ் பெண்கள் அரச படையினரால் சீரழிக்கப்படுகின்றனர்.

''ஜனாதிபதி என்ற முறையிலும், ஒரு தாய் என்ற உணர்வுடனும் இச்சம்பவங்களை ஜனாதிபதி நோக்க வேண்டும். சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். பொலிஸாரினதும், பாதுகாப்புப் படையினரதும் ஒழுக்கத்திற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும்'' என்றார்.

மேல்மாகாண மக்கள் முன்னணி அமைப்பாளர் மனோகணேசன் தெரிவிக்கையில்—

''சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக அவசர காலச் சட்டத்தைப் பயன்படுத்தி, அதிகபட்ச தண்டனை வழங்கவும், பாதிக்கப்பட்டவருக்கு நஷ்டஈடு வழங்கவும் வேண்டும். நேர்மையான நடவடிக்கையினால் ஜனாதிபதி தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற முயல வேண்டும்'' என்றார்.

இந்து மாமன்றம் ஜனாதிபதிக்கு எழுதி உள்ள கடிதத்தில் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது—

''நாட்டின் பல பாகங்களிலும் இடம்பெற்று வரும் பாலியல் வல்லுறவு சம்பவங்கள் தொடர்பாகத் தங்களுக்குப் பல கடிதங்களை எழுதி உள்ளோம். ஆனாலும், பலத்த பாதுகாப்புகளுக்கு மத்தியில் தலை நகரிலேயே பொலிஸார் தமது கைவரிசையைக் காட்டி இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

''இப்படியான சம்பவங்கள் தொடர்ந்தும் இடம் பெற இடமளிக்கக்கூடாது. மனிதாபிமான உணர்வுகளுடன் இதைக் கண்டிக்கிறோம்''. இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.''

தேசிய தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் தலைவர் டி.பி சென்னன், ''கைது செய்யப்பட்ட பொலிஸாரையும் படையினரையும் எக்காரணம் கொண்டும் பிணையில் செல்ல அனுமதிக்கக் கூடாது'' எனக் குறிப்பிட்டுள்ளார்.


மருதானை பாலியல் வல்லுறவுச் சம்பவம் தொடர்பாக மூன்று பொலிஸாரும், இரண்டு படைவீரர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மீதான விசாரணைகள் நடைபெறுகின்றன. முடிவு எப்படி இருக்கும்? வழமைபோல் புஸ்வாணமாகி விடுமா? அல்லது வெறும் இடமாற்றத்துடன் நின்று விடுமா? தொடர்ந்து இவர்களின் திருவிளையாடல்கள் நடைபெறுமா? என்பதே அனைவர் மத்தியிலும் எழுந்திருக்கும் கேள்விகள்.

கதிர்காம அழகுராணி மனம்பேரி படையினரால் சித்திரவதை செய்யப்பட்டதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள். நினைவுத் தூபி நிறுவியர்கள் இன்று தமிழ்ப் பெண்கள் தொடர்ச்சியாகக் காமக் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு வரும்போது வாய் மூடி மௌனிகளாக இருப்பது ஏன்? பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் என்பதாலா? இந்த உணர்வு உள்ளவர்கள் எப்படி சிறுபான்மையினரைப் பாதுகாக்கப் போகிறார்கள்? காலம் பதில் சொல்லட்டும்!

**மலையகக் கண்ணோட்டம்**

# பித்தன் பதில்கள்


எஸ்.சரவணா, *மருதானை.*
கே : ''ஒத்துழைப்புக்கு நன்றி'' என்ற அறிவிப்புப் பலகையைப் பார்த்தால் நினைவில் வருவது எது?
ப : *பரிசோதனை என்ற பெயரில் மேடுபள்ளம் பார்க்கும் வீதிச் சோதனைச்சாவடிகள்.*




ஐ.ஜெயம், *வவுனியா.*
கே : பித்தனே ...! கருணாநிதி விடயத்தில் தமிழ்நாடு காவல் துறையினரின் அதிரடி நடவடிக்கை எப்படி?
ப : *வீரப்பன் என்று நினைத்து விட்டார்கள் போல! அம்மணியின் பழிவாங்கல் மூளைக்குப் பலியானது பொலிஸார்தான்.*

ந.மதுரா, *மாங்குளம்.*
கே : இத்தனை பாதுகாப்புக் கெடுபிடிகளின் மத்தியிலும் மட்டுவிலில் புலிகள் கிளைமோர் தாக்குதலை எப்படி நடத்தினார்கள் பித்தனே?
ப : துணிந்தவனுக்கு தூக்குமேடை பஞ்சுமெத்தையாம்! அது சரி ஊசி நுழைய முடியாத இடங்களில் கூட புலிகள் நுழைந்து விடுவார்கள் என்பது உமக்குத் தெரியாதா என்ன?

ந.மயூரன், *கல்கிஸ்சை.*
கே : ''எவரெடி கிண்ணத்துக்கான கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வடக்கு– கிழக்கு அணிகளும் பங்குபற்றுகின்றனவாமே?
ப : *ஆம், வடக்கு – கிழக்குபிரதேச அணிகளும் இச்சுற்றுப்போட்டியில் பங்குபற்றுவதற்கு இலங்கை கால் பந்தாட்டச் சம்மேளனம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது. இலங்கையின் கால்பந்தாட்ட வரலாறு ஆரோக்கியமான நிலைக்கு செல்ல இது போன்ற 'திறமைகளின் தேடல்' அவசியம்.*



பீ.ரன்ஜோஸ், *தம்பலகாமம்.*
கே : எதிர்பாராத விதமாக முட்டினால் கூட மன்னிப்புக் கேட்ட. பின்னும் சீறும் பெண்கள் பற்றி.....?
ப : *சூடாக இருக்கிற பொருள் தானே தண்ணீர் பட்டால் சீறும் கவனம். உண்மையில் அவர்கள்தான் டேஞ்ஜர் பார்ட்டி.*




ரா.சாலினி, *கொட்டாஞ்சேனை.*
கே : ஆனந்தம் படத்தில் நடிகை ஸ்நேகா தூள் கிளப்பியிருக்கிறாரே...?
ப : *கால்ஷீட் விவகாரத்தால் அவரைப் படங்களில் இருந்து கிளப்பப் பார்க்கிறார்கள். விஷயம் நடிகர் சங்கம் வரை போய் விட்டதாம்.*



அக்கீத், *செட்டிக்குளம்.*
கே : ஹாய் பித்தா....! கன்னிப் பெண் குளிக்கும் போது தண்ணி தொடாத இடம் ஒன்று உண்டு. அது எது தெரியுமா?
ப : *மனது.*

என்.சிவபாலன், திருகோணமலை.
கே : இன்றைய இளைஞர்கள் நிலை என்ன பித்தா?
ப : *ஒன்றில் முற்போக்காக இருக்க வேண்டும் இல்லாவிட்டால் பிற்போக்காக இருக்க வேண்டும். இரண்டும் கெட்டான் நிலையில் புறம் போக்காக இருக்கிறார்களே!*

எஸ்.ரஜினி, *யாழ்ப்பாணம்.*
கே : நடிகைகளின் திருமணங்கள் அநேகமாக இரகசிய மாக முடிந்து விடுகின்றனவே?
ப : *அடுத்த திருமணத்துக்குச் சொல்லலாம் என்று நினைக்கிறார்கள் போல.*



எஸ்.டி. செல்வம், *ஹட்டன்.*
கே : ரட்ணசிறி, ஹக்கீம் இருவரையும் ஒப்பிடுங்கள் பார்க்கலாம்.
ப : *ஒருவர் பேரியலுக்கு Welcome சொல்கிறார். மற்றவர் பேரியலுக்கு Good bye சொல்லுகிறார்.*

எம். பரிமளா, யாழ்ப்பாணம்.
கே : களமுனை ஓய்ந்து கிடக்கிறதே?
ப : *களமுனை இப்போது நாடாளுமன்றம் தான். அது, இது என்று பத்திரிகையாளர்களின் பேனா முனைதான் படு ஸ்பீட்.*

எஸ்.மேரி, *கொழும்பு—10.*
கே : இவ்வுலகில் ஆசை இல்லாத மனிதர் எவராவது உண்டா?
ப : *கரையை நாடாத அலை எங்கும் உண்டோ?*



எஸ். சங்கீதா, பருத்தித்துறை.
கே : பித்தனே, வாழ்க்கைக்குத் துன்பம் தருவது எது?
ப : *சான்றோர் அவையில் அறிவற்ற ஒருவன், புகுதல் தனக்கு நேரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளும் ஆற்றல் இல்லாதவன் மேற்கொள்ளும் தவம், பெற்றதாயைக் காப்பாற்றாது விடுதல் ஆகியவை எல்லாம் 'துன்பம்' தருவது என்று 'இன்னா நாற்பது' சொல்கிறது.*

சோமகாந்தன், நீர்வேலி.
கே : என்ன பித்தனே...! மருதானையில் தமிழ்ப் பெண் ஒருவர் பொலிஸாரினால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளாராமே...!
ப : *ஆமாம் வடக்கு–கிழக்கில் இருந்து தற்பொழுது தலைநகரெங்கும் வந்து விட்டது இந்த வியாதி.*

எம்.எம்.அன்சார், *ஒட்டமாவடி.*
கே : கவர்ச்சி, காமம் இரண்டினதும் பொருள் என்ன?
ப : *கண்ணைத் திறக்க வைப்பது கவர்ச்சி. கண்ணை மூட வைப்பது காமம்.*

வேணுகோபால், *கொழும்பு.*
கே : டீசல், பெற்றோல், காஸ் விலைகளை அரசு மீண்டும் அதிகரிக்க போகிறதாமே!
ப : *அரசு இன்றைக்கோ நாளைக்கோ என்று ஆட்டம் கண்டு கொண்டிருக்கிறது. அதற்குள் இதுகளுக்கும் குறைச்சலில்லை.*

ஆர்.சுதாகரன், *கண்டி.*
கே : அதிக ஆடை அணிகிறார்களே....! பெண்கள் பாவமல்லவா?
ப : *ஆ... அதில்தான் எவ்வளவு கரிசனை உங்களுக்கு. இப்போது தானே பெண்கள் மேலாடையாக தம்பியின் உள் பெனியன், கீழே சிறு துண்டு என அணிந்து கொண்டு சுற்றுகிறார்கள்.*



மணி, *தெஹிவளை.*
கே : மின்வெட்டுக்கும் சனத்தொகை அதிகரிப்புக்கும் ஏதாவது தொடர்பு உண்டா?
ப : *மின்வெட்டு இரவா பகலா என்று சொல்லவில்லையே!*

வ.அனித்தா, *வெள்ளவத்தை.*
கே : ஏ.ஆர்.ரஹ்மான் அடுத்து இசை அமைக்கும் தமிழ்த் திரைப்படம் எது?
ப : *பார்த்திபனின் 'ஏலேலோ'*

# சுவிஸில் தமிழ் பெண்கள் அவலச் சாவுகள் ஏன்?

தேரடியில் அன்று புது விருந்தாளியாக சின்னாச்சியின் மகள் மங்கையும் வந்திருந்தாள்.

தாய்க்கு உதவியாக கடலை மூட்டையை எடுத்து வந்த அவள் அரட்டையில் கலந்து கொண்டாள்.

மங்கையின் வருகை, இளைஞர்கள் இருவருக்கும் ஒரே குஷி.

இதனைக் கண்டு பெரிசுகள் இருவரும் தங்களுக்குள் சிரித்துக் கொண்டனர்.

''என்னோடு பணியாற்றிய ஆசிரியர் ஒருவர் இப்போது குடும்பத்துடன் சுவிஸில் இருக்கிறார். நீண்ட காலத்துக்குப் பிறகு கடிதம் போட்டிருக்கிறார்'' அரட்டையை ஆரம்பித்தார் மாஸ்டர்.

''அங்கு என்ன புதினமாம்'' கேட்டார் விநாசியர்.

''நண்பர் எழுதியிருக்கிறதைப் பார்த்தால், நாட்டுப் பிரச்சினையை விட, எங்கடை சனத்தை இன்னுமொரு பிரச்சினை மலைப் பாம்பாகப் பின்னிப் பிணைஞ்சிருக்குது என்று விளங்குது'' கவலையுடன் கூறினார் மாஸ்டர்.

''அதென்ன அப்படி தலைபோற பிரச்சினை'' கேட்டான் டானியல்.

''அது உங்களைமாதிரி ஆட்களால் தீர்க்க வேண்டிய பிரச்சினை'' விஷயத்தைச் சொல்லாமல் இழுத்தார் மாஸ்டர்.

''மாஸ்டரிட்டை படிச்ச பிள்ளைகள் பாடு கஷ்டம்தான். ஒரு விஷயத்தைச் சொல்ல இந்த இழுவை இழுக்கிறார்'' மங்கையைக் கடைக் கண்ணால் பார்த்தபடி 'கடி'த்தான் லோகன்.

''அவசரப்படாதேங்கோ லோகன் அண்ணை. மாஸ்டர் சொல்லுவார் தானே'' என்றாள் மங்கை.

அவள் தன்னை 'அண்ணை' என்று அழைத்தது கேட்டு முகம் வாடிய லோகனைக் கண்டு நமுட்டுச் சிரிப்புச் சிரித்தான் டானியல்.

இந்த நாடகத்தைப் பார்த்தவாறே விஷயத்துக்கு வந்தார் மாஸ்டர்.

''சுவிஸில் எங்கடை ஆட்களுக்குள்ளை அவலச் சாவுகள் அதிகரிக்குதாம். அதுவும், கலியாணமான பொம்பிளைப் பிள்ளைகள் இந்த வருஷத்திலை மட்டும் அஞ்சாறு செத்திட்டுதுகளாம். இதிலை புருஷன்மாராலை கொல்லப்பட்டவையும், எப்படிச் செத்தது என்று தெரியாமல் வீட்டிலை செத்துக் கிடந்தவையும் அடக்கமாம். இதைத் தவிர, பொம்பிளைப் பிரச்சினையிலை எங்கடை ஆட்கள் போடும் சண்டைகள், அந்த நாட்டுக்காரரை முகம் சுழிக்க வைக்குதாம்''

''ஓம் மாஸ்டர், இது தெரிந்த கதைகள் தானே, கிட்டடியிலை பொம்பிளைப் பிரச்சினையிலை லண்டனிலும் குத்துவெட்டு நடந்து ஒரு பொடியன் செத்ததாகச் சொன்னவை'' முயற்சியில் மனம் தளராத லோகன், தனக்கு வெளிநாடுகளைப் பற்றியும் தெரியும் என்பதைக் காட்டுபவன் போல் சொன்னான்.

''அது சரிதான் தம்பி, ஆனால் மாஸ்டர் சொல்ல வந்தது, எங்கடை சமுதாயத்திலை ஆண் — பெண் உறவு முறையில் இருக்கிற சிக்கலால்தான் இந்தப் பிரச்சினைகள் உருவாகுது என்கிறதைத் தான்'' — இப்படிக் கூறி விட்டுத் தான் சொன்னது சரியா என்றறிய மாஸ்டரின் முகத்தைப் பார்த்தார் விநாசியர்.

மெல்லிய தலையாட்டல் மூலம் அதனை ஆமோதித்த மாஸ்டர், ''பல நூறு வருஷங்களாக ஒரு கலாசாரத்துக்குள் வாழ்ந்த எங்கடை பொடியள், திடீரென்று வெளிநாடுகளுக்குப் போச்சினம். அங்கு போய் மேல் நாட்டுக் கலாசாரத்துக்கு ஏற்றமாதிரி உடை முதல் உணவு வரை மாத்திச்சினம். ஆனால் 'மனப்பாங்கு' என்ற முக்கியமானதை மட்டும் அவையாலை மாற்ற முடியவில்லை. அதனாலை தங்கள் மனைவிமார் மேல்நாட்டு நாகரிகத்தையும் பழக வேணும், ஊர்க் கட்டுப் பாட்டையும் பின்பற்ற வேண்டும் என்று முற்றிலும் வெவ்வேறான இரு விஷயங்களுக்குள் சிக்கித் தவிக்கினம். இதனால் தான் வெளிநாடுகளில் நிறையக் குடும்பங்களுக்குள் பிரச்சினையாம்'' என்றார்.

''இங்கு மட்டும் குடும்பங்களுக்குள் பிரச்சினை இல்லையோ'' வழக்கம் போல் குறுக்குக் கேள்வி கேட்டான் லோகன்.

''தம்பி, நான் சொல்வது சுவிஸில் மட்டும் நடக்கிற கதை இல்லை. எங்கடை ஆட்கள் தஞ்சமடைந்திருக்கிற எல்லா வெளிநாடுகளிலும் இந்தப் பிரச்சினை இருக்காம். இங்கு இருக்கிற குடும்பப் பிரச்சினைகளை விட, வெளிநாட்டில் எங்கடை ஆட்கள் சந்திக்கிற பிரச்சினைகள் உளவியல் ரீதியான புதிய பிரச்சினைகள்''



## தேரடி அரட்டை

''இதைப் பற்றி எங்கடை மாமாவும் சொன்னவர் மாஸ்டர்'' என்று ஆரம்பித்தான் டானியல்.

''நாங்கள் ஆணையும் பெண்ணையும் பார்க்காதே, பேசாதே என்று வேலி போட, வேலியைப் பிரிக்கிற எண்ணம்தான் வளரும். அதனாலைதான் இங்கேயே நிறையப் பெடியள், படிச்சு முடிச்சு, தங்கடை காலிலை நிற்பதற்கு முன்னால் காதல், கத்திரிக்காய் என்று சொல்லி பெட்டையளுக்கு பின்னாலை சுற்றி, வாழ்க்கையைப் பழுதாக்கினம்'' இளைய தலைமுறையின் மேல் உள்ள அக்கறையைப் பேச்சில் காட்டினார் விநாசியர்.

''ஆனால் மாஸ்டர் சொன்னது, உழைச்சு, வீடு வாசல் வாங்கி, பிறகு கலியாணம் கட்டின வெளிநாட்டுக்காரரின் குடும்பப் பிரச்சினையையெல்லோ'' தடம்மாறாமல் விஷயத்துக்கு வந்தாள் மங்கை.

''தாயைப் போல மகளும் விஷயத்திலை குறிதான்'' சிலாகித்தார் விநாசியர். வெட்கச் சிரிப்புடன் பாராட்டை ஏற்றுக் கொண்டாள் மங்கை.

''சின்ன வயசிலேயே, சில வீடுகளிலை, பெண் பிள்ளைகளை மூடி மூடி வளர்ப்பினம். அதுகளுக்கு கன கட்டுப்பாடுகள் வேறு. ஆனால் பொடியளை எங்கே வேணுமானாலும் போ, வா என்று சுதந்திரம் கொடுப்பினம். அந்த மாதிரி வளரும் பொடியள், சகோதரிமாரில் நாட்டாமை காட்டினாலும், அவன் சொல்லுறதைக் கேள் என்று பெண் பிள்ளைகளைத் தான் பெற்றோர் ஏசுவினம்.''

''இதனாலை பெண்களின் மன உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் பழக்கம் எங்கடை பெடியளுக்கு இயல்பாகவே இல்லாமல் போகுது'' பொதுப்பார்வையுடன் பேசிய மாஸ்டர் மேலும் தொடர்ந்தார்.

''அப்படி வளர்ந்த பொடியன் வெளிநாட்டிலை போய் உழைக்கத் தொடங்கியதும் இங்கு அவனுக்கு பெண்பார்ப்பினம். சீதனம் வேண்டாம், அழகா, அடக்கமாகப் பெண் இருந்தால் போதும் என்று சொல்லுவான்.''

''இங்கு சீதனப் பிரச்சினை தலைவிரித்து ஆடுவதால், மகளின் விருப்பங்களை கணக்கில் எடுக்காமல் பெற்றோரும் அவள் கரை சேர்ந்தால் போதும் என்று, கலியாணத்தைச் செய்து வைப்பினம். அந்தப் பிள்ளை வெளி நாடு போய்ச் சேர்ந்து கொஞ்சக்காலம் கழித்து தான் 'ஆசை அறுபதுநாள்' என்று பெடியன் கட்டுப்பாடுகள் போடத் தொடங்க மெதுவாக பிரச்சினை தொடங்குகிறது'' நீண்ட நேரம் பேசியதால் மூச்சு வாங்கிக் கொண்டார் மாஸ்டர்.

''பொம்பிளை கொஞ்சம் அடங்கி ஒடுங்கி நடந்தால் பிரச்சினை வராது எல்லோ?'' லோகன் கேட்டு முடிக்கும் முன்னரே, ''நல்ல கதைதான், உவைக்கு வீட்டிலையும் எல்லா வேலையையும் பார்த்து, பிறகு வெளியிலையும் உத்தியோகம் பார்த்து உழைச்சுத் தரும் படிச்ச பொம்பிளையும் வேணும். காலுக்கு மேல் கால் போட்டபடி இவை சொல்லும் கட்டளைகளுக்கு தலையாட்டவும் வேணும்'' சீறினாள் மங்கை.

மல்டிபரல் தாக்குதலில் தலை குனிந்தான் லோகன்.

''அவ சொல்வது சரிதான். ஆம்பிளை சமைச்சாலோ, சாப்பிட்டதட்டு கழுவினாலோ வெட்கக்கேடு என்ற நிலைமை தானே நிறைய வீடுகளிலை இருக்கு'' கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மங்கையிடம் நல்ல பெயர் எடுக்க முயற்சித்தான் டானியல்.

இளசுகளின் விளையாட்டை ரசித்த படியே கால்களை மாற்றிப் போட்டபடி பேசத் தொடங்கினார் மாஸ்டர்,

பிரச்சினைக்கு முக்கிய காரணம் சந்தேகம், மற்றது புரிந்துணர்வு இல்லாதது.

''தான் கண்ணனாக இருந்து கொண்டு தனக்கு வாற மனைவி கண்ணகியாக இருக்க வேணும் என்று நினைக்கிற ஆம்பிளையளும் பிரச்சினைக்குக் காரணம்'' குறுக்கிட்டாள் மங்கை.

''அங்கு நூறு இருநூறு கிலோ மீற்றர்கள் தள்ளி காலையிலை வேலைக்குப் போய் மாலை வரும் ஆம்பிளைகள், வீட்டில் அதிக நேரம் தனித்திருக்கும் மனைவிமாரில் சந்தேகம் கொள்ளத் தொடங்க, வெளியிலை கனநேரம் சுத்துற கணவன்மாரை மனைவி சந்தேகப்பட அந்தக் குடும்பத்தை சனி பிடிக்குதாம்.

''ஒருத்தரை ஒருத்தர் புரிந்துகொள்ள வழியில்லாத அவசர கலியாணங்கள், முகங்களைக் கூடப் பார்க்காமல் நிச்சயமானால், மனங்களைத் தெரிந்து கொள்வது எப்படி?'' கேள்வி எழுப்பினான் டானியல்.

''இங்கு தனித்திறமைகளோடை இருந்த பிள்ளை, அங்கு போய் தனது திறமைகளால் கணவனை விடக்கெட்டிக்காரியாக விளங்கினால், சில கணவன்மாருக்கு அது பிடிக்கிறதில்லையாம். நாளடைவில் குடும்பத்துக்குள் இது பிரச்சினைகளைக் கொண்டு வருகுதாம்''

''என்ன மாஸ்டர், பொம்பிளைகள் பக்கம் பிழையில்லையோ?'' பொறுக்க முடியாமல் கேட்டான் லோகன்.

''அப்படியில்லை தம்பி, அவையிலையும் பிழை இருக்குத்தான். இங்கு நமது கலாசாரத்துக்குள் வளர்ந்த பிள்ளை புது சூழலில் வெளிநாட்டிலை வாழத் தொடங்குவது. அந்தப் பிள்ளை அங்கு உள்ள மற்றவையைப் பார்த்து, தானும் நாகரிகமாக நடப்பதாக நினைத்து, நடை உடை பாவனையை மாற்றும் போது, அது பிடிக்காத கணவன் கண்டிக்க அதுவும் பிரச்சினையை உருவாக்குது.''

''புலியைப் பார்த்து பூனை சூடுபோட்டுக் கொண்ட கதை மாதிரி'' என்றார் விநாசியர்.

''சரியாகச் சொன்னீர், இதை விட பொம்பிளையள் விடுற பெரிய தவறு ஒப்பிட்டுப் பார்க்கிறது தான். இங்கு கலியாணம் பேசும் போது வெளிநாட்டு மாப்பிள்ளை என்று சந்தோஷமாய் தலையாட்டுவினம். கலியாணம் முடிஞ்சு, அங்கு போனபிறகு அங்கிருக்கிற மற்ற ஆம்பிளைகளுடன் தனது கணவரை ஒப்பிடும் போது, அவரில் இருக்கிற நல்லதுகளை விட, குறைகள்தான் பெரியதாகத் தெரியத் தொடங்கும். இதைக் குத்திக் காட்டத் தொடங்கினால் குடும்பத்துக்குள்ளை பிரச்சினை வராமல் என்ன செய்யும்?''

''குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை என்பது தெரியாத கோளாறு இது'' என்றாள் மங்கை.

''இதை விட இரண்டு தரப்பும் விடுகின்ற தவறும் ஒன்று இருக்கு, ஆம்பிளைகள் வேலைக்கு, அதுக்கு, இதுக்கு என்று வெளியிலை சுத்திறபடியால், தங்கடை கவலைகளை நண்பர்களிடம் கூறித் தீர்ப்பினம். அதோட அவைக்கு பொழுதும் போகும். ஆனால் மனைவியை வீட்டிலேயே கிடந்து சமைச்சு, உடுப்புத் தோச்சுப் போடு என்று சொல்லுவினம்.''

''மனைவிக்காக நேரம் ஒதுக்கி, அவளை ஒரு சிநேகிதியாக நினைத்து — மதித்து கணவன் பரிவுடன் பேசாமல், வேலை, காசு என்று பறந்தால் வேட்டைநாயின் வலையில் மனைவி விழுவதை கணவன் தடுக்க முடியாது. அதற்குப் பிறகு அந்தக் குடும்பத்தின் நிலைமை குரங்கின் கையில் கிடைத்த பூமாலைதான்''.

சொல்ல நினைத்ததைச் சொல்லி முடித்த திருப்தியோடு எழுந்தார் மாஸ்டர்.

மகளைப் பேசவிட்டு அமைதியாக இருந்த சின்னாச்சி அப்போதுதான் வாய்திறந்தாள்.

''எங்கடை பிள்ளைகளுக்கு உலகத்து பாடங்கள் எல்லாம் சொல்லிக் கொடுக்கிறம். ஆனால் ஆரோக்கியமான எண்ணங்களையும், மனநலத்தையும் மட்டும் வளர்க்காமல் விட்டிட்டம். 'அறப்படிச்சு கூழ்ப் பானைக்குள் விழுந்தது போல்', எங்கடை பெடி, பெட்டையளும் நிறையப் படிச்சு, உழைச்சு, வெளிநாட்டிலை கார், வீடு, வாசல் என்று வாழ்ந்தாலும் அவையிலை மனச்சந்தோஷம் கிடைக்காமல் பலர் இருக்கிறதுக்குக் காரணம் பரந்த மனப்பாங்கை வளர்க்கத் தவறியதுதான். இனியாவது, இளைய தலைமுறையின் மனப் பக்குவத்தை பாடசாலை மட்டத்திலேயே வளர்ப்பதற்கு யாராவது முன்வந்தால் நல்லது.''

இப்படிக் கூறியபடி மகளின் உதவியுடன் கடலைக் கடையைக் கட்டத் தொடங்கினாள் சின்னாச்சி.

தேரடி கலைந்தது.

— ஏகலைவன்




தனித்துவக் கட்சிக்காரத் தலைவரை இனவாதியாகக் காட்டி ஒழித்துக்கட்டிவிட எடுக்கும் முயற்சியை இன்னுமொரு முஸ்லிம் கட்சியின் தலைமை கடுமையாக எதிர்த்துப் போராடப் போகிறதாம்.

அயல் நாடு ஒன்றின் முன்னாள் தலைவரின் பெயர் கொண்ட இந்த முஸ்லிம் கட்சியின் செயலருக்கும், தனித்துவக் கட்சியின் தலைவருக்கும் இடையில் தொடர்புகள் பலப்பட்டிருக்கின்றனவாம். சில சுற்றுப் பேச்சுக்களும் உத்தியோகப்பற்றற்ற முறையில் நடந்திருக்கின்றனவாம்.

இப்போதிருக்கும் இனவாதச் சூழ்நிலையில் தனித்துவக் கட்சியின் தலைவரின் கரத்தைப் பலப்படுத்தாவிட்டால் பேரினவாதிகள் பலம் பெற்று சகலருக்கும் அச்சுறுத்தல் ஏற்படும் என்று அந்த முஸ்லிம் கட்சியின் ஐக்கிய உணர்வு கொண்ட தலைவர்கள் கருதுகிறார்களாம்.

இந்தக் கருத்துக்கு இந்தக் கட்சியுடன் நெருங்கிய உறவு கொண்டுள்ள இடதுசாரி தலைவர்களும் ஆசி வழங்கி உள்ளார்களாம்.

இந்த முஸ்லிம் கட்சியும் தனித்துவக் கட்சியும் உறவு பற்றிய விவரங்களை விரைவில் பகிரங்கமாகத் தெரிவிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

### இராமன் ஆட்சியும், இராவணன் ஆட்சியும்

இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? எமக்குத் தேவை தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு மட்டுமே.

அதிகாரத் தரப்புக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு தாம் வழங்கும் ஆதரவை வாபஸ் பெறுவதற்கு அதிகாரத் தரப்பு முக்கியஸ்தர்களிடம் சில நிபந்தனைகளை அடைக்கலமானவரும் முன் வைத்திருக்கிறாராம்.

இரண்டெழுத்துக்காரர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை உடனடியாக நீக்குதல், வடக்கு — கிழக்குக்கு உணவு மற்றும் பொருட்களை எடுத்துச் செல்வதில் உள்ள தடைகளை நீக்குதல், யுத்தத்தை உடனடியாக நிறுத்துதல், பேச்சுவார்த்தைகளுக்கான திகதியை நிர்ணயித்தல்.... இப்படி அடைக்கலமானவரும் நிபந்தனை விதித்திருக்கிறாராம்.

இந்த நிபந்தனைகளை அதிகாரத் தரப்பு உடனடியாக நிறைவேற்ற முன்வந்தால் நம்பிக்கையில்லாத் தீர்மான வாக்கெடுப்பில் அதிகாரத் தரப்புக்கு ஆதரவாக வாக்கு அளிக்க தாம் தயாராக இருப்பதாக அடைக்கலமானவர் தெரிவித்துள்ளாராம்.

### என்னைப் போல ஒருத்தி

தனித்துவக் கட்சியின் தலைமையுடன் முரண்பட்டுள்ள தலைவிக்கும், அதிகார அம்மணிக்கும் இடையிலான நெருக்கமான உறவுகளை இன்னொரு கட்சியின் ஸ்ரீ அம்மணி உன்னிப்பாகக் கவனித்து வருகிறாராம்.

ஏன் என்று கேட்டால், ''எனக்கு நடந்தது போல அவருக்கும் ஒரு நாள் நடக்கும் என்று என் மனது சொல்கிறது'' என்று போனாக்காரர் ஒருவரிடம் ஸ்ரீ அம்மணி தெரிவித்தாராம்.

அதிகார அம்மணியை கடுமையாக விமர்சித்த ஸ்ரீ அம்மணி; உறுதி மிக்க தலைவர் நாட்டில் உருவாக வேண்டும் என்றும், அவர் நாட்டின் எதிர்காலம் குறித்த தீட்சண்ய பார்வை உள்ளவராக இருக்க வேண்டும் என்றும் பிரார்த்தனை செய்கிறாராம்.

அத்தோடு புதிய தேர்தல் ஒன்று நடைபெறும் சாத்தியம் இருப்பதால் இப்போதே அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறாராம்.

### இணைப்பும் தனிப்பும்

மனோகரமானவரின் மேற்குத் திசை சார் கட்சிக்கும் விநயமானவர் கட்சிக்கும் இடையில் புரிந்துணர்வுப் பிணைப்பு ஏற்படுத்துவது குறித்து நடந்து வந்த பேச்சுவார்த்தைகள் ஓர் எல்லைக்கு வந்ததும் தடைப்பட்டு நிற்கின்றனவாம்.

இரு கட்சிக்காரர்களுக்கும் இடையில் பூரணமான புரிந்துணர்வு ஏற்பட்ட போதிலும் தடங்கல் ஏற்பட்டதற்கு விநயமானவரின் கட்சியின் ஜீவநாடியாக இருக்கும் சிலரே காரணமாம்.

தனித்துச் செயற்படுவதுதான் கட்சிக்கு நல்லது என்று இருவரும் உறுதியாகக் கூறுவதால் இந்த இரு கட்சிகளின் முயற்சிகளிலும் வேகம் குறைந்திருக்கிறது என்று அதன் முக்கியஸ்தர்கள் கூறுகிறார்கள்.

தனித்துச் செயற்பட வேண்டும் என்று அவர்கள் கூறுவதால்தான் அண்மையில் அக்கட்சிகளின் 3 முக்கியஸ்தர்கள் வெளிநாட்டு தூதரக முக்கியஸ்தர் ஒருவரை தனித்தனியாக சந்தித்துப் பேசினார்களாம்.

### மனோ வலிமையும், கணிப்பும்

வடக்கு கிழக்கில் மக்கள் தொகை கணிப்புக்கு தாமும் எதிர்ப்பு என்று காட்டிக்கொண்ட தமிழ்க்கட்சி ஒன்றின் அதிகார மன்ற உறுப்பினர் ஒருவர், எல்லாம்சரி அதனை நாம் நிறுத்திவிட்டோம் என்ற பாணியில் அறிக்கை விட்டார்.

ஆனால் கணக்கெடுப்பாளர் திணைக்களமோ இரண்டெழுத்துத் தலைவரையும் சேர்த்து கணக்கெடுப்போம் என்று ஒற்றைக் காலில் நிற்கிறது. அதிகார அம்மணி கணக்கெடுப்பை நிறுத்துவதில் அவ்வளவு கரிசனை காட்டவில்லையாம்.

இந்தக் கட்சியின் முக்கியஸ்தர்கள் அதிகார அம்மணிக்கு எவ்வளவு புகழ் பாடியும் கணக்கெடுப்பை நிறுத்த முடியவில்லை. அதிகார அம்மணி இக்கட்சியின் தலைவரின் நிலைப்பாட்டை உதாசீனம் செய்தும் இன்னும் அவர் ஒட்டிக்கொண்டிருக்கிறாரே என்று சில முக்கிய தமிழ் தலைவர்கள் காரசாரமாக பேசிக் கொண்டார்களாம்.

# தடைகளுடன் போராடும் படுவான்கரை மக்கள்!

அரச அதிகாரிகளோ, வைத்தியர்களோ இங்கு செல்ல முடியாது. இந்துமதத் துறவிகளுக்கும் கூட தடைதான். அதுமட்டுமல்ல வீதிகளைச் செப்பனிடும் கனரக வாகனங்களையும் இங்கு கொண்டு செல்ல முடியாது. விவசாய நிலங்களை உழுவதற்கான 'டீசல்', பாடசாலைகளுக்கான உபகரணங்கள், மருந்துப் பொருட்கள் என்பவற்றைக் கூடக் கொண்டு செல்லத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடைகள் எல்லாம் எங்கே என்று கேட்கிறீர்களா?

மீன்பாடும் தேன்நாடு எனப் புகழப்படும் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு மேற்கே அமைந்துள்ள படுவான்கரைப் பகுதியிலேயேதான் பாதுகாப்புப் படையினர் மேற்படி தடைகளை விதித்துள்ளனர்.

தடையைச் சவாலாக எடுத்து கன்னன் குடாப் பகுதி மக்கள் வீதியை திருத்தும் காட்சி.



படுவான்கரைப் பகுதியில் விடுதலைப் புலிகள் இருப்பதனாலேயே இந்தத் தடை எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆனாலும், காலங்காலமாகப் படுவான் கரைப் பகுதியில் வாழ்ந்து வரும் மக்களுக்குத் தற்போது அமுலில் உள்ள பொருளாதாரத் தடை, அபிவிருத்திக்கான தடை என்பவை திட்டமிட்டுத் தமக்கெதிராகச் செய்யப்படும் அநியாயங்கள் என்பது தெரியும்.

மட்டக்களப்பில் விடுவிக்கப்பட்ட பிரதேசம், விடுவிக்கப்படாத பிரதேசம் என இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டே நிர்வாகம் நடைபெறுகிறது.

விடுவிக்கப்பட்ட பிரதேசம் எனக் கூறுவது படையினரின் முகாம்கள் உள்ள எழுவான்கரைப் பகுதியை.

விடுவிக்கப் படாத பிரதேசம் என்பது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியை.

படையினரின் பலத்த சோதனைகள், ரவுண்ட்அப், அடையாள அட்டை இன்றி செல்ல முடியாத நிலை, வதிவிடச் சான்றிதழ் இன்றி எவர் வீட்டிலும் தங்கமுடியாத அவலம், எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்று தெரியாது. பயந்துவாழும் சூழல்.

இத்தகைய கெடுபிடிகளைக் கொண்ட பிரதேசம் தான் 'விடுவிக்கப்பட்ட பிரதேசம்' என்று கூறப்படுகிறது.

அண்மையில், மட்டுநகரில் இடம்பெற்ற ஆசிரியர்களின் எழுச்சி விழாவின் போது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் உரையாற்றுகையில், "உண்மையில் விடுவிக்கப்பட்ட பிரதேசம் எது என்பது மக்களுக்குத்தான் தெரியும்" எனக் கூறியிருந்தார்.

ஏனெனில், படுவான்கரைப் பகுதியிலேயே அரச படையினரின் கெடுபிடிகள் எதுவும் இல்லாது மக்கள் சுதந்திரமாக வாழ்கிறார்கள்.

சீரான போக்குவரத்துகள் இல்லாத நிலையில், வெள்ளம் காரணமாகப் பள்ளமும், குழியும், மடுவும், உடைவுமாக சீரழிந்து போயுள்ளன படுவான்கரை வீதிகள்.

பாதையைத் திருத்தி அமைத்து செப்பனிடுவதற்கு மட்டுநகரில் உள்ள இராணுவத் தளபதியின் அனுமதியினை முதலில் பெறவேண்டும்.

நிலைமை இப்படி என்றால், படுவான்கரைப் பகுதியை எப்படி அபிவிருத்தி செய்ய முடியும்?

சாதாரண வீதியால் 'கிறவல்' கூட கொண்டு செல்ல முடியாத பரிதாப நிலை இங்கு தான் காணப் படுகிறது.

அரசியல் வாதிகளால் படுவான் கரைப் பிரதேசம் முற்றாகப் புறக்கணிக் கப்பட்ட நிலையில் இருக்கிறது.

சாதாரண வீதிப் புனரமைப்புத் தொடக்கம் மருத்துவ வசதிகள் வரை எந்த ஆரோக்கியமான பணிகளும் முன்னெடுக்கப்பட முடியாத பரிதாப நிலை தொடர்கிறது.

கல்வி அதிகாரிகள் படுவான்கரைப் பகுதிக்கு செல்வதற்கு விதிக்கப்பட்ட தடையைக்கூட நீக்குவதற்கு மட்டக்களப்புத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் களால் முடியாதுள்ளது.

இந்த யதார்த்த நிலைமையைப் புரிந்து கொண்ட படுவான்கரைப் பகுதி மக்கள், தமது சொந்த முயற்சியினால், சிரமதானம் மூலம் வீதிகளை சீர்படுத்த முன்வந்தனர்.

குழிகளும் பள்ளங்களுமாய் கிடந்த வீதியை கன்னன்குடாவைச் சேர்ந்த மக்கள் அண்மையில் திருத்தி அமைத்தனர்.

சரியான மருத்துவ வசதியும், போக்குவரத்து வசதியும் இல்லாததால், பாம்புக்கடி, பிரசவங்கள் போன்ற அபாயகரமான நிலைமைகளால் மக்கள் இறக்க நேரிடுகிறது.




திருத்தப்படமுன் பள்ளமும் குழியுமாகக் காட்சியளித்த குறிஞ்சாமுனை, கன்னன்குடா வீதி.

இத்தகைய அநியாய மரணங்களுக்கு அடிப்படைக்காரணம் படுவான்கரைப் பகுதியில், வைத்தியசாலை இல்லாததும் போக்குவரத்து சீரற்று இருப்பதுமே ஆகும்.

மக்களின் உரிமை பற்றியும், நியாயமான சுதந்திரம் தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்பது பற்றியும் உணர்ச்சிபூர்வமாகப் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், படுவான்கரைப் பகுதி விடயத்தில் மௌனம் சாதிக்கிறார்கள்.

விடுவிக்கப்படாத பிரதேசம் என்பதற்காக படுவான்கரைப் பிரதேசத்தில் வாழும் மக்கள் தமது அன்றாட அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்திசெய்ய முடியாதவாறு தண்டிக்கப்படுவது வேதனை தருகிறது.

—நேரன்



திருத்தி அமைக்கப்பட்டபின் வீதி

— படங்கள்: நேரன்


GOLDEN TOWER

APARTMENTS



இல.41, மகாவித்தியாலய மாவத்தை, கொழும்பு 13 இல் அமைக்கப்பட்டுள்ள

GOLDEN TOWER எபார்ட்மென்ட்ஸ்

சொகுசு மாடி வீடுகள்,

உங்கள் எதிர்காலக் கனவுகளை இன்றே நனவாக்கக் காத்திருங்கள்...!

- அதி நவீன வசதிகள்.
- தரமான நிர்மாணம்.
- பலதலைமுறைகளுக்கு உறுதியுடன் விளங்கக்கூடிய வகையில் மேலைத்தேய உபகரணங்களின் அமைப்பு.
- பாடசாலைகள், சமய வழிபாட்டுத்தலங்கள், சந்தைகள், தபாலகம், வங்கிகள், பஸ் நிலையங்கள் ஆகியவற்றிற்கு அருகாமையில்.

பார்வையிட தயார் நிலையில் 2—3 படுக்கை அறைகளைக் கொண்ட வீடுகள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

- தரம்—பொழிவு—சுகாதாரம் அதிநவீன வசதிகள்— உறுதிப்பாடு.

நீங்கள் பார்த்து திருப்தியுடன் தீர்மானித்திட நேரில் வாருங்கள்.

தரத்தின் சிறப்பை உணருங்கள். உங்களுக்கான மாடிவீட்டை வாங்குங்கள்.

உடன் தொடர்பு கொள்ளுங்கள்

41, Mahavidhyalaya Mawatha, Colombo - 13
Tel: 321722, 320279, 077-310251, 432502
Fax: 327101

Devi Property Development Pvt. Ltd.

No.131, Sea street, Colombo - 11. Sri Lanka. Tel: 432502, 452821,
Mobile No: 077-310251, Fax: 433178, E-mail: devi131@visual.lk



NEW DHIVIYA JEWELLERS

கலை நயத்துடன் தங்கம்,வைரம், நவரத்னம் பதித்த அழகிய டிசைன்களில் நகைகளை உங்கள் மனம் கவர்விதத்தில் தெரிவு செய்ய வெள்ளவத்தையில் ஒரே இடம்.



42-C, Galle Road, Wellawatte,
Colombo-06. Tel : 508501, 505065
SPECIALIST IN 22KT GOLD JEWELLERY



மிருனாஸ் சுப்பர்



வீட்டிற்கு தேவையான சகல விதமான மளிகைப் பொருட்கள், இறைச்சி வகைகள், ஐஸ்கிரீம், சொக்லெட், பால்மா, சமையலுக்கான அனைத்து தேவைகளுக்கும்

நம்பிக்கையுடன் நாடுங்கள்



MIRUNA'S SUPER



NEW DHIVIYA JEWELLERS

கலை நயத்துடன் தங்கம்,வைரம், நவரத்னம் பதித்த அழகிய டிசைன்களில் நகைகளை உங்கள் மனம் கவர்விதத்தில் தெரிவு செய்ய வெள்ளவத்தையில் ஒரே இடம்.



42-C, Galle Road, Wellawatte,
Colombo-06. Tel : 508501, 505065
SPECIALIST IN 22KT GOLD JEWELLERY